# தெய்விகத் திருமணம்



சுந்தர சண்முகனார்

# தெய்விகத் திருமணம்

ஆசிரியர்

முனைவர் சுந்தர சண்முகனார்

தமிழ்ப் பேராசிரியர்

புதுச்சேரி - 11

வெளியீடு:

சுந்தர சண்முகனார்

புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம்

38, வேங்கட நகர்,

புதுச்சேரி - 605011.

முதல் பதிப்பு: செப்டம்பர், 1990

உரிமை: ஆசிரியருக்கே.

கிடைக்கும் இடம்:

**புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம்**

38, வேங்கட நகர்,

புதுச்சேரி – 605011.

விலை: ரூ. **14-00**

அச்சகம்:

சபாநாயகம் பிரிண்டர்ஸ்,

73 – A, கீழரத வீதி,

சிதம்பரம் - 608001.

# ஆசிரியர் முன்னுரை

மலர்மணம் என்னும் புதினம் ஒன்றை யான் 1960ஆம் ஆண்டு எழுதி வெளியிட்டேன். அது இரண்டு பதிப்பு பெற்றது.

1961ஆம் ஆண்டு 'தெய்விகத் திருமணம்' என்னும் இந்தப் புதினத்தை எழுதினேன். இது 1962ஆம் ஆண்டி லேயே வெளிவந்திருக்க வேண்டும்.

ஆனால் எனக்கு மூளைக்கட்டி நோய் (Brain Tumour) 1961ஆம் ஆண்டின் இறுதியிலேயே தொல்லை தரத் தொடங்கிவிட்டதால் இந்த நூல் வெளியீடு நின்றுபோய் விட்டது.

1962ஆம் ஆண்டு முழுதும் படுக்கையில் கிடந்து செத்துப் பிழைத்தேன். பின்பு இந்நூலை வெளியிடுவதில் கருத்து செலுத்தாமல் ஆய்வு நூல்கள் எழுதத் தொடங்கி விட்டேன்.

அண்மையில் வேறொன்றைத் தேடியபோது இந்நூலின் கையெழுத்துப் படி தென்பட்டது.

தமிழ் படித்த வெளிநாட்டினரைப் பேட்டி காண்பவர் 'நீங்கள் எந்த எந்த நூலை விரும்பிப் படித்தீர்கள்' என வினவின், அவர்கள், யார் யாரோ எழுதிய புதினங்களைக் குறிப்பிடுவதைத் தொலைக்காட்சி வாயிலாக அறிந்தேன். இதையும் உள்ளத்தில் கொண்டு இந்தப் புதினத்தை வெளியிடலானேன்.

பெரிய பரிசுகள் புதினங்கட்கே கொடுக்கப்படுவதால், புதினங்கள் சிறந்த படைப்பிலக்கியங்களாகக் கருதப்படுவதையும் உணர்ந்தேன். ஆனால், யான் எந்தப் பரிசுக்காகவும் இந்தச் சிறிய புதினத்தை எழுதி வெளியிடவில்லை.

புதினம் எழுதுபவர்கள் ஆய்வு நூல் எழுதுபவர்களை ஒருவிதமாகப் பார்ப்பதையும், ஆய்வு நூல் எழுதுபவர்கள் புதினம் எழுதுபவர்களை ஒரு விதமாகப் பார்ப்பதையுங் கூட சொந்தப் பட்டறிவினால் கண்டேன்.

யான் நல்ல தமிழ் ஆராய்ச்சியாளன் எனப் பெயர் பெற்றவன். ஆனால், இந்தப் புதின நூலுக்கு எவ்வளவு வரவேற்பு கிடைக்கும் என்பது இனிமேல்தான் தெரியும்.

1961ஆம் ஆண்டு கால வாழ்வியல் நடைமுறைக்கு ஏற்ப எழுதப் பெற்ற இந்த நூற்கருத்துகளைப் பெரும்பாலும் அந்த ஆண்டு காலக் கண்கொண்டே காண வேண்டுகிறேன்.

நன்முறையில் இந்த நூலை அச்சிட்டு உதவிய சிதம்பரம் சபாநாயகம் பிரிண்டர்ஸ் உரிமையாளர்க்கு என் நன்றி உரியது.

சுந்தர சண்முகன்
5–9–1990

# தெய்விகத் திருமணம்

## 1

திருச்சிராப்பள்ளி சந்திப்பிலிருந்து சென்னை நோக்கிப் புறப்படுவதற்கு வைகறை 3-40 மணிக்கு இராமேசுரம் வண்டியின் உருளைகள் அரைமணி நேர ஓய்வுக்குப் பின் ஆயத்தமாயிருந்தன. அந்தப் புகைவண்டி அங்கு வந்து நின்றிருந்த அரைமணி நேரத்தில் எத்தனையோ பேர் இறங்கினர் - ஏறினர். வண்டி நின்றால் ஓடுபவர்களும் வண்டி ஓடினால் நிற்பவர்களுமாகிய கைத்தட்டு வணிகர் களின் ஆட்சி பரபரப்புடன் நடந்தது.

வண்டி புறப்படும் நேரம் நெருங்கியதும் சிறிது சிறிதாக எல்லா ஆரவாரங்களும் அடங்கத் தொடங்கின.

இந்த நெருக்கடியான நேரத்தில் ஒரு பெரியவர் ஒரு பெண்ணை அழைத்துக்கொண்டு இரண்டாவது வகுப்புப் பெட்டியை நோக்கி விரைந்து கொண்டிருந்தார். முதல் ஊதலைத் தொடர்ந்து இரண்டாவது ஊதலும் முடிந்து விட்டது. சோம்பல் முறித்துக் கொண்டு வண்டியின் உருளைகள் அசையத் தொடங்கும் நேரம் அது.

சாத்தியிருந்த இரண்டாவது வகுப்புப் பெட்டியின் கதவைப் பெரியவர் திறக்கிறார் - முடியவில்லை. பின்னர் அந்தப் பெண் திறக்க முயலுகிறாள் - அவளுக்கும் கதவு திறந்து கொள்ள மறுத்து விட்டது. அப்போது உள்ளே யிருந்த ஓர் இளைஞர் வந்து கதவைத் திறந்து விடுகிறார். அந்தப் பெண் வண்டியில் ஏறிக் கொள்கிறாள். பெரியவர் இளைஞருக்கு நன்றி சொல்கிறார். இந்த நிலைமை

ஏற்பட்டதற்காக அவள் நாணிக் கோணி ஒரு சிறு குறும் பார்வையால் தன் நன்றியறிவிப்புக் கடமையை முடித்துக் கொள்கிறாள். பெரியவர் வண்டியில் வரவில்லை - கீழே தான் இருக்கிறார் - மகளை வண்டி ஏற்றிவிடவே வந்தார். ''அம்மா, பார்த்துப் போய் வாம்மா! திடீரென்று கோவையிலிருந்து தந்தி வந்ததால் நான் உனக்குத் துணையாக வரமுடியாமற் போயிற்று ...'' என்று சொல்லிக் கொண்டே பெரியவர் வண்டியின் கூடவே ஓடிவந்தார். ''நீங்கள் நில்லுங்கள் அப்பா, நான் போய் வருகிறேன்...'' என்று அவள் சொல்ல, இன்னும் பெரியவர் ஏதோ சொல்ல, வண்டி நகர்ந்து கொண்டேயிருக்குமா - படுவிரைவாய்ப் பறந்தது.

எல்லோரையும் சேர்த்து இரண்டாவது வகுப்புப்பெட்டிக் குள்ளே எழுவர் இருந்தனர். இப்போது அவளைச் சேர்த்து எண்மர் ஆயினர். அந்தப் பெட்டிக்குரிய எண்ணிக்கையும் அவ்வளவுதான். அவளும் அந்த இளைஞரும் நீங்க மற்ற அறுவரும் பிறமொழி மாநிலத்தினர் - மதுரையில் நடந்த ஒரு மாநாட்டிற்காக வந்து தமிழகத்து நகர்கள் சிலவற்றைச் சுற்றிப் பார்த்து விட்டுத் தம் நாடு திரும்புபவர் - தமிழ் அறியாதவர் - படுத்து நன்கு உறங்கிக்கொண்டிருக்கின்றனர்.

அவள் வண்டிக்குள் ஏறிச் சென்றபோது, அந்தத் தமிழ் இளைஞரின் பக்கத்தில் ஒருவர் உட்கார மட்டும் இடம் இருந்தது. எங்கே அமர்வது என்று புரியாமல் அவள் விழித்தாள். இளைஞர், தனக்கு அப்பக்கத்தில் அரைப் பலகையில் முடங்கித் தூங்கிக் கொண்டிருப்பவரோடு தன் உடலை ஒட்டிக் கொண்டு, தனக்கு இப்பக்கத்திலிருக்கும் காலியிடத்தைக் கையால் அவளுக்குச் சுட்டிக்காட்டினார். அவ்விளைய ஆடவரின் பக்கத்தில் அமர அவள் தயங்கினாள். அஃதுணர்ந்த இளைஞர் நின்றுகொண்டு பயணஞ்செய்யலாம்

என்று எழுந்தார். அது கண்ட அவள், வேண்டாம் என்று வாயால் சொல்லாமல் கையமர்த்திக் காட்டி அவரை உட்காரச் செய்து, தானும் அவர் பக்கத்தில் சிறிது இடை வெளி விட்டு . ஒண்டி ஒடுங்கி யமர்ந்தாள். தனக்கும் அவருக்கும் நடுவிலே தானாக வலிந்து உண்டாக்கி வைத்துள்ள சிறு இடைவெளியிலே தன் கைப்பெட்டியை வைத்துச் சுவர் எழுப்பிக் கொண்டாள்.

பக்கத்தில் பக்கத்தில் அமர்ந்திருக்கும் இருவரிடமும் அமைதி நிலவியது. மேலும் கீழும் தூங்கிக் கொண் டிருப்பவரின் எரிமலைக் குமுறல் போன்ற குறட்டை ஒலிகள் அவர்தம் அமைதிக்கு மேலும் மெருகு கொடுத்தன. இப்படியே சிறிது நேரம் ஓடிக்கொண்டிருந்தது.

ஒருவரையொருவர் ஏறிட்டுப் பார்த்துக் கொள்ளவே கூசுபவர்கள் பேசுவது எங்கே? ஒருவர்க்கொருவர் எதிர்ப் புறத்தில் அமர்ந்திருந்தாலாவது, எதிரும் விழியும் என்று சொல்வதற்கேற்பப் பார்த்துக் கொள்ளவாவது வாய்ப்பிருக்கும்! அவர்கள்தான் பக்கலில் அமர்ந்திருக் கிறார்களே!

ஏன் - பக்கவாட்டத்தில் அமர்ந்திருந்தால்தான் என்ன? பார்ப்பதால் பழுது நேர்ந்துவிடுமா? பேசுவதால் மாசு வந்து விடுமா? ''நீங்கள் எந்த ஊருக்குப் போகிறீர்கள்?'' - ''நான் இந்த ஊருக்குப் போகிறேன்'' - நீங்கள் எந்த ஊருக்குப் போகிறீர்கள்?'' — ''நான் அந்த ஊருக்குப் போகிறேன்'' — என்று பேசிக்கொண்டால் என்ன? எத்தனையோ துணை களுள் 'பேச்சுத்துணை' என ஒன்று சொல்லுவார்களே! வாய் உள்ள இவர்கள் பணச் செலவு இல்லாத இந்தப் பேச்சுத் துணையை ஏன் பெற்றுக்கொள்ளக் கூடாது?

முடியாதுதான்! இவர்கள் இருவரும் இருவேறு சாதி யினர். ஒருவர் ஆண்சாதி; மற்றொருவர் பெண்சாதி.

இவர்கள் எப்படிப் பேசிக்கொள்ள முடியும்? மேற்கு நாடுகளில் செட்டியார் முதலியார் போன்ற சாதி வேறுபாடு இல்லாதது மட்டுமல்ல; ஆண்சாதி பெண்சாதி என்ற வேறுபாடும் அவ்வளவாக இல்லை என்று சொல்லுகிறார்கள். ஆனால் நம் நாட்டிலோ, செட்டியார், முதலியார், நாடார், நாயகர் முதலிய சாதி வேறுபாடு போலவே, ஆண்சாதி பெண்சாதி என்ற சாதிவேறுபாடும் அழுத்தமாக உள்ளது. ஒருமுறை தமிழகத்தின் தலைநகராகிய சென்னையில் ஒரு கலைக்கழகத்தின் நூற்றாண்டு விழா நடந்தது. அதற்கு வெளிநாடுகளிலிருந்தும் சிலர் வந்திருந்தனர். விழாவில், ஆண்கள் எல்லோரும் ஒரு பக்கத்திலும் பெண்கள் எல்லோரும் மற்றொரு பக்கத்திலும் அமர்ந்திருந்தனர். இந்தக் காட்சியைக் கண்ட மேலை நாட்டினர் ஒருவர் மிகவும் வியந்து பேசினார். ''ஏன்-இயற்கையாக எல்லோரும் கலந்து அமர்ந்தால் என்ன?'' என்று ஒரு சிலரை நோக்கிக் கேட்டார். 'இது இந்த நாட்டு மரபு' என்ற பதில் அவருக்குத் தரப்பட்டது. இப்படிக் கேட்ட அந்த வெள்ளையர் ஓர் ஆடவர் என்று எண்ணுகிறீர்களா? இல்லையில்லை; அவர் ஒரு பெண்பிள்ளை. அதுதான் வியப்பினும் வியப்பு! இந்த மேலைநாட்டார் பழக்க வழக்கத்துக்கும் நம் பழக்க வழக்கத்துக்கும் நடுவே எத்துணை பெரிய இடைவெளி! இந்நிலையில் அவர்கள் இருவரும் பேசிக் கொள்ளாததில் வியப்பில்லையே.

தக்க பருவமுடைய ஆணையும் பெண்ணையும் நெருங்க விடக்கூடாது என்னும் கருத்துக்குத் துணை செய்வதற்காக, நெருப்பின் பக்கத்தில் வெண்ணெயை வைக்கலாமா? என்று கூறுவது உலக வழக்கம். இங்கே இவ்விருவருள் யாரை நெருப்பு என்பது? யாரை வெண்ணெய் என்பது? அந்தப் பெண் உட்கார்ந்தவள் உட்கார்ந்தவள்தான்; சுவரில் தீட்டிய ஓவியமேயானாள்; தனிக்கல்லில் அல்ல - திரையில் அல்ல -

நெடும் பாறையில் செதுக்கிய சிற்பமேயானாள். அவள் எங்கே அசைவது - திரும்புவது - பார்ப்பது - பேசுவது? பழமொழியின்படி பார்க்கப்போனால் அவளைத்தான் நெருப் பென்று சொல்ல வேண்டும். இத்தகைய வைரம் பாய்ந்த உறுதி உள்ளத்தில் இருக்குமானால், ஒரு பெண் எங்கே சென்றால்தான் என்ன? யார் பக்கத்தில் அமர்ந்தால்தான் என்ன? ''சிறை காக்கும் காப்பு எவன் செய்யும் மகளிர் நிறைகாக்கும் காப்பே தலை'' என்று வள்ளுவர் கூறியுள்ள படி, உள்ளத்தில் உறுதி இருக்குமானால், சுவரோவியமாக இராமல், உயிரோவியமாக இயங்கி, ஆடவருடன் பேசவும் செய்யலாம், பழகவும் செய்யலாம். அதற்கும் ஓர் அளவு உண்டுதானே!

ஆனால் அந்த இளைஞரால் கண்களுக்குப் பதில் சொல்ல முடியவில்லை. அவளைப் பார்க்க வேண்டும் என்று அவர் கண்கள் அவருக்கு முதலில் நினைவுறுத்தின-அவர் பொருட் படுத்தவில்லை. அவளைப் பார்க்க வாய்ப்பளிக்க வேண்டும் என்று தொடர்ந்து கெஞ்சின-அவர் புறக்கணித்துவிட்டார். பின்னர், பார்க்கத்தான் வேண்டும் என்று அடம்பிடித்துப் பார்த்தேவிட்டன. அதாவது, அவருக்கு முதலில் இருந்த உறுதி பிறகு இல்லை. நேரம் ஆக ஆகப் பக்கத்தில் இருப்பவளைப் பார்க்கவேண்டும்போல் இருந்தது. பலரைப் பார்த்துப் பார்த்துப் பழக்கப்பட்ட கண்கள் பரபரப்புக் காட்டியதால் இடைவிட்டு இடைவிட்டுத் தலையைத் திருப்பி அவளைப் பார்க்கலானார். ஆனால் ஒருமுறைகூட அவள் பார்க்கவேயில்லை.

பக்கத்தில் ஒரு தங்கத் தளிர்மேனி இடம்பெற்றிருப்பதை ஆர அமர அகங்குளிரக் கண்ட அந்த இளைஞருக்குப் பேச வேண்டும்போல் தோன்றியது. பக்கத்தில் தன்னைப் போலவே ஓர் இளைஞர் இருந்திருந்தால் எவ்வளவோ

பேசியிருக்கக் கூடுமே. பெண்ணாயிருப்பதால்தானே பேச முடியவில்லை. இயற்கையின் படைப்பில் எத்துணை கோணல்! பெண்ணாயினும் வயது முதிர்ந்தவராயிருந்தால் இவ்வளவு நேரத்துக்கு இருவரும் பேசிக்கொண்டிருப்பார்களே. ஆணும் பெண்ணுமாக இரண்டு புதிய இளம் உள்ளங்கள் பேசிக்கொள்ள இயற்கையின் ஆணை இடந்தராதோ! ஒருவன் இளம் பருவத்தில் அண்டைவீட்டு — எதிர்வீட்டுச் சிறுவர் சிறுமியருடன் கட்டிப் பிணைந்து விளையாடுகிறான். சில்லாண்டுகள் சென்றதும், சிறுமியர் பிரிந்துவிட, சிறுவரே மிஞ்சுகின்றனர். சிறுமியர் பருவப் பெண்களாகிக் காட்சிக்கும் அரியராகிவிடுகின்றனர். மணஞ் செய்துகொண்டு மக்களைப் பெற்று வாழ்க்கைப் பயணத்தில் பல கல் தொலைவைக் கடந்த பின்னருங்கூட, ஓர் ஆணும் ஒரு பெண்ணும் — அதாவது இளமையில் கட்டிப் புரண்டு விளையாடிய ஆணும் பெண்ணும் பேசிக்கொள்ளவே கூசுகின்றனர் எனில், பழகுவதெங்கே? இதற்குத்தான் பால் உணர்வு என்று பெயரோ! இது உயிரினங்கட்குக் கிடைத்துள்ள இயற்கையின் அருட்கொடையோ! உயிர்க்குல வளர்ச்சியின் 'இரகசியம்' இதில்தான் அடங்கியிருக்கிறதோ! அப்படியென்றால் இந்தக் கூச்ச உணர்வு வாழ்க! இதனால் தானே புகைவண்டியில் அமர்ந்திருக்கும் அந்த இளைஞரும் அவளும் பழகமுடியாமற் போயிற்று.

அவள் எந்த ஊருக்குச் செல்கிறாள் என்பதை அறிந்து கொள்வதில் இளைஞரின் ஆர்வம் கட்டுக்கடங்காது போயிற்று. அவளைக் கேட்டுவிட வேண்டும் என்று துடித்த மனத்திற்கு அடிமையாகிவிட்ட இளைஞர் அதைச் செய்தே விட்டார்:

''நீங்கள் எந்த ஊருக்குப் போகிறீர்கள்?''

''சென்னைக்கு''.

''... ... ... ... ... ... ...''

''... ... ... ... ... ... ...''

''ஓகோ, நானும் சென்னைக்குத்தான்... ''

''எங்கேயாவது போங்கள்''.

''நீங்கள் எந்த ஊருக்குப் போகிறீர்கள்?'' என்று ஆர்வத்துடன் கேட்ட இளைஞருக்கு, 'சென்னைக்கு' என்ற ஒரு சொல் மட்டுந்தான் நல்ல பதிலாகக் கிடைத்தது. அதிலும், முகத்தைப் பார்த்துக் கேட்ட இளைஞருக்கு, எதிர் தரப்பிலிருந்து முகத்தைப் பாராமலேயே பதில் வந்து விட்டது. இந்த நிலைமைக்கே இளைஞர் மிகவும் கலங்கிப் போய்விட்டார். அடுத்து இன்னொன்றை எதிர்பார்த்தார்; அதிலும் ஏமாற்றம். அதாவது, 'சென்னைக்கு' என்ற பதிலைத் தொடர்ந்து, 'நீங்கள் எங்கே போகிறீர்கள்?' என்று தன்னை அவள் கேட்பாள் என்று எண்ணினார். இது, பயணஞ் செய்யும்போது இயற்கையாய் நிகழக்கூடிய ஒன்றே. அதாவது, ஒருவரை யொருவர் 'எங்கே போகிறீர்கள்!' என்று கேட்டுக்கொள்வது உலகியல். ஆனால் அவள் அப்படியொன்றும் கேட்கவேயில்லை. 'சென்னைக்கு' என்ற பதிலோடு அறுத்து நிறுத்திக் கொண்டாள். கேட்பாள் – கேட்பாள் என்று மேலும் சிறிதுநேரம் இளைஞர் எதிர்பார்த்துக் காத்திருந்தார். அவள் கேட்கவேயில்லை. இது இளைஞருக்கு இரண்டாவது அடி. அதன் பிறகு தானாகப் பல்லை யிளித்துக்கொண்டு, 'நானும் சென்னைக் குத்தான் வருகிறேன்' என்று சொல்லிப் பார்த்தார். அதை அவள் புறக்கணித்துப் பேசிவிட்டாள். இது இளைஞருக்கு அடிமேல் அடி - மூன்றாவது அடி. 'ஓ அப்படியா! நீங்களும் சென்னைக்குத்தான் வருகிறீர்களா? மிகவும் நல்லது' - என்று ஏதாவது அவள் சொல்லிவைப்பாள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தபோது, அவள் 'எங்கேயாவது போங்கள்' என்று கூறி உதட்டை மடித்துக்கொண்டிருந்த காட்சியைக் கண்ட இளைஞர் செத்தார் - செத்தார் – செத்தே போய்

விட்டார். இனி அவள் பேச்சுக்குப் போகவே கூடாது என்று உறுதி செய்துகொண்டார்.

அப்போது மணியோ ஐந்துக்குமேல் இருக்கும். வண்டி லால்குடியைத் தாண்டிக் காட்டூர் நிலையத்தை நோக்கி ஓடிக்கொண்டிருந்தது. மேலுங் கீழும் படுத்து உறங்கிக் கொண்டிருந்த மாபெருந்திருமேனிகள் எல்லாம் எழுந்திருக்கத் தொடங்கின. விழித்துக்கொண்ட அவர்கள் 'அரே புரே' என்று 'அழகு மொழி' பேசிக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவரும் மாறி மாறி அந்தப் பெண்ணின்மேல் பார்வையைச் செலுத்தி நோட்டம் பார்த்தார்கள். ஆனால் அவள் பார்வையில் எவரும் அகப்படவேயில்லை — அவள் பார்த்தால்தானே! சிறிது நேரம் சென்றதும் அவர்கள் கண்களுக்கு அவள் பழக்கப்பட்ட பழம்பொருளாகிவிட்டாள். அதன் பிறகு அவர்கள் அவள்மேல் சிறப்புப் பார்வை எதுவும் செலுத்தவில்லை. சூடுண்ட பூனையாகிய இளைஞரோ, போதி மரத்துப் புத்தனைபோலக் கண்களை மூடிக்கொண்டு, ஆழ்ந்த அமைதிக்குள் மூழ்கியவரைப் போல நடித்துத் தூங்காது தூங்கிக்கொண்டிருந்தார்.

அவள் எவ்வளவு நேரந்தான் வாய்பேசாது வாளா உட்கார்ந்திருப்பாள்? இப்போது அவளுக்கும் ஒரு துணை தேவைப்பட்டது. நெடுந்தொலைவு தனித்துப் பயணஞ் செய்வோர்க்கு ஒரு பொழுதுபோக்குத் துணை தேவை தானே! எப்போதுமே தனிமை நிலைத்திருக்க முடியாது — அது வெற்றி பெறவும் முடியாது - எந்த உருவத்திலாவது அது ஒரு துணை தேடிக்கொள்ளத்தான் செய்யும். தனிமை நீடிக்க நீடிக்கக் கூடி வாழவேண்டும் - சேர்ந்து வாழவேண்டும் என்ற கூட்டுணர்ச்சி தோன்றியே தீரும். எனவே, சுவரோவியமாக இருந்த அந்தப் பேசாமடந்தை இப்போது ஒரு துணையை நாடுவதில் வியப்பில்லையே. ஆனால், அவள் எந்தத் துணையைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது? அந்தப் பெட்டியில்

பெண்களும் இருந்திருந்தால் துணைதேடல் எளிதாகும்; ஆனால் அங்கே ஆண்கள் மட்டுந்தானே உள்ளனர்! ஆயினும் அவள் ஒரு துணையைத் தேடிவிட்டாள்; ஒரு பெரிய துணையை - நல்ல துணையை - பயனுள்ள துணையைத் தேர்ந்தெடுத்து விட்டாள். இனி அவளுக்கு இன்பமாகப் பொழுது கழியும்!

அவள் தன் பெட்டியிலிருந்து ஒரு புத்தகத்தை எடுத்து வெளியில் வைத்தாள். புத்தகம் என்றறிந்ததும், இளைஞரின் கண்கள் அதன்மேல் - அவள் மேல் அல்ல - பதிந்தன. அதன் மேலட்டையில், 'அன்றில், எம்.ஏ., திருச்சிராப்பள்ளி' என்று பேரும் ஊரும் பொறிக்கப்பட்டிருந்தன. 'அன்றில்' என்ற பெயர் பல எண்ணங்கள் துலங்கும்படி இளைஞரின் உள்ளத்தைத் தூண்டிவிட்டது.

''அன்றில் என்ற பெயருக்கு உரியவள் இவள்தானோ? அல்லது இது வேறு யாருடைய புத்தகமாகவாவது இருக்கலாமோ? இருக்க முடியாது. பெயரின்கீழே திருச்சிராப்பள்ளி என்றிருப்பதாலும், இவள் திருச்சி நிலையத்தில் வண்டி ஏறியதாலும் இது இவள் புத்தகமாகத்தான் இருக்க வேண்டும் - இந்தப் பெயர் இவள் பெயராகத்தான் இருக்க வேண்டும். மேலும், வெளியூர் செல்பவள், தன் வீட்டிலிருந்து தனது புத்தகத்தைத்தான் எடுத்து வந்திருக்க வேண்டும். எம்.ஏ. படித்த பெண் என்று நம்புவதற்குரிய குறிகளும் இவள் தோற்றத்தில் இலைமறை காய்களாய் இருக்கின்றன. ஆகவே, அன்றில் இவள்தான் - இவளே அன்றில்'' - என்ற முடிவுக்கு வந்த இளைஞர் இன்னும் என்னென்னவோ எண்ணினார்.

''அன்றில் என்பது ஒருவகைப் பறவையின் பெயர். ஆண் அன்றிலும் பெண் அன்றிலும் எப்போதும் இணை பிரியாது வாழுமாம். ஒன்றை ஒன்று பிரிந்து பிறகு

கூடமுடியாது போய்விட்டால் இறந்துபோகுமாம். ஒன்றிய காதலர்க்கு ஒப்புமை கூறுதற்கேற்ற விலை மதிக்க முடியாத பொருள் அன்றில். 'அன்றில்போல் ஒன்றி வாழ்க' என்று திருமண மக்களுக்கு வாழ்த்து வழங்குவதற்குப் பயன்படக் கூடிய பொருள் அன்றில். தமிழ் இலக்கியங்களில் அன்றிலைக் காணலாம். அவற்றுள்ளும் பழங்காலச் சங்க இலக்கியங்களில் அன்றிலைப் பற்றி மிகுதியாகக் காணலாம். அன்றில் கருநிறம் உடையதாம். அதன் தலையில், நெருப்புப்போல்' சிவந்த - பூப்போலும் தோற்றமுடைய கொண்டை இருக்குமாம். அதன் அலகுவாய் இறாமீன்போல் வளைந்து நுனி கூராயிருக்குமாம். கால்கள் மிகவும் கறுத்திருக்குமாம். தைத்து உணவு வைத்து உண்ணுவதற்கேற்ப அகலமா யிருக்கிற இலைகளையுடைய தடவு என்னும் ஒருவகை மரத்திலாவது, புலவர்களால் பெண்ணை என்று அழகு படுத்திச் சொல்லப்படுகின்ற பனைமரத்திலாவது அந்தப் பறவை கூடுகட்டி வாழுமாம். ஆண் சிறிது நேரம் பிரிந் திருந்தாலும், பெண் அதனைக் கூவிக் கூவி அழைத்துக் கொண்டேயிருக்குமாம். நள்ளிரவில், பிரிந்து வருந்துகிற காதலர்கள் கேட்டுக் கேட்டு ஏங்கி இளகும்படி இரண்டும் காதல் களியாட்டப் பண்ணொலி எழுப்புமாம். பிரிந்து தனித்திருக்கின்ற காதலர்கள், என்றும் ஒன்றியிருக்கிற அன்றில் இணையைப் பொறாமைக் கண்களுடன் பார்த்து, 'இவை பெற்ற பேறு நாம் பெறவில்லையே' என்று பெரு மூச்செறிந்து நைந்து உருகுவார்களாம். இந்தச் செய்திக ளெல்லாம் தமிழிலக்கியம் கற்றவர்க்குத் தண்ணீர் பட்ட பாடு. ஆனால், தமிழர்களுள் தமிழிலக்கியம் கற்றவர்கள் எத்தனை பேர்? அது கிடக்கட்டும்!

'கோழி, காகம் முதலிய பறவைகளை அனைவரும் அறிந்து வைத்திருப்பதுபோல, அன்றிலைப் பற்றி அறிய மாட்டார்கள். அப்படியிருக்க, அன்றில் என்று ஒரு

பெண்ணுக்குப் பெயர் இருக்கிறதென்றால், அப்பெயர் அவளுக்கு எப்படி வைக்கப்பட்டிருக்கக் கூடும்? குயில் என்னும் பொருளில் கோகிலம் - கோகிலாம்பா என்றும் கிளி என்னும் பொருளில் தத்தை (வாசவதத்தை) என்றும் வடமொழியிலும், மைனா என்பது போன்ற பொருளில் 'நைட்டிங்கேல்' (Florence Nightingale) என ஆங்கிலத்திலும், (சில மாவட்டங்களில்) கிளியம்மா, குயிலாம்பா, மயிலாம்பா என நம் அழகு தமிழிலும் பறவைகளின் பெயரிட்டுப் பெண்களை அழைப்பது வழக்கத்தில் இருக்கிறது. ஆனால் அன்றில் என்னும் பெயரால் அழைக்கும் வழக்கம் எங்கும் இல்லையே. ஆங்கில நாட்டு 'நைட்டிங்கேல்' இரவில் பாடும் பறவையாம். ஒருவேளை அதுதானோ நம் அன்றில்? அன்றில் இரவில் ஒலிப்பதாக நம் சங்கப் புலவர்கள் எழுதி வைத்துள்ளனரே. இப்பறவையின் பெயரை இவள் ஒருத்திதான் பெற்றுப் பெருமையுற்றுத் திகழ்கிறாளோ?'

'அன்றில் என்னும் அழகுப் பெயரை இவளே நடுவில் வைத்துக் கொண்டிருந்தால், இவள் நன்கு தமிழ் கற்றவளா யிருக்கவேண்டும். அல்லது இவள் தந்தையார் இட்ட இயற் பெயர் என்றால். அவர் நன்கு தமிழ் கற்றவராயிருக்க வேண்டும். ஏதோ எப்படியோ இவள் குடும்பத்திற்கும் தமிழ்க் கல்விக்கும் மிகுந்த நெருக்கம் இருக்கிறது. வேறு ஒரு குடும்பத்தில் இப்படி ஒரு புதுப்பெயர் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்க முடியாது.

'அன்றில் எம்.ஏ. படித்தவள். எம்.ஏ. படித்த ஒரு பெண்ணா ஆடவரோடு பேச இவ்வளவு கூசுகிறாள்? படிப்பறியாத பட்டிக்காட்டுப் பெண்கூட இயற்கையாய்ப் பழகினாலும் பழகுவாள்போல இருக்கிறதே. இவள் இப்படி அஞ்சுகிறாளே! பேசினால் வெல்லத்தில் வைத்தா விழுங்கி விடுவார்கள்? அச்சமோ அல்லது ஆணவமோ? யாரறிவார்? இவள் உயர்நிலைப் பள்ளியிலும் கல்லூரியிலும் படித்த

போது ஆண்வாடையே பட்டறியாதவளோ? ஒருவேளை இப்படியிருக்கலாமோ? அதாவது, கள்ளங் கபடின்றி வெள்ளை உள்ளத்தோடு பழகிக் கொண்டிருந்தபோது, ஆடவர் எவரேனும் அற்பத்தனத்திற்கு அடிகோலினரோ? அதனால் வெறுப்படைந்து, ஆடவரோடு பேசுவதையும் பழகுவதையும் அறவே நிறுத்திவிட்டாளோ? அல்லது இப்படியும் இருக்கலாமோ? அதாவது, இவள் ஆடவரோடு சேர்ந்து கல்வி பயிலாமல் - பழகாமல் பெண்கள் உயர்நிலைப் பள்ளியிலும், மகளிர் கல்லூரியிலுமே படித்திருக்கலாமோ? 'கல கல' என்றிருக்கும் பெண்களை நம்பலாம்; 'மச மச' என்றிருக்கும் பெண்களை நம்பக் கூடாது என்று உலக வழக்கில் சிலர் சொல்வது உண்டு, அந்த இரண்டு வகை யினருள் இவள் எந்த இனத்தைச் சேர்ந்தவளோ? ஆனால் இந்தக் கருத்தை முற்றிலும் ஒத்துக் கொள்வதற்கும் இல்லை. இதற்கு எதிர்மாறாக நிகழ்வதும் உண்டு. இரண்டொருவரிடம் கண்ட அனுபவத்தைக் கொண்டு எல்லோரைப் பற்றியும் ஒரு தீர்மானத்திற்கு வந்துவிட முடியாது. தமது குட்டை அனுபவத்தைக் கொண்டு உலகத்தை அளக்கக் கூடாது. எனவே, அன்றில் எப்பேர்ப் பட்டவளோ?

''திருச்சியிலிருந்து சென்னைவரை தனியாகப் பயணஞ் செய்ய ஒரு பெண்ணுக்கு இவ்வளவு துணிச்சல் எப்படி வந்தது? ஒருவேளை சென்னைக் கல்லூரியில் படித்தவளோ? படித்துக் கொண்டிருந்தபோது. திருச்சிக்கும் சென்னைக்கும் தனியாகவே பலமுறை பயணஞ் செய்து செய்து பழக்கப் பட்டவளோ? பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சா தல்லவா? பனையோலைகளின் சலசலப்பைப் பலமுறை கேட்டுக் கேட்டுப் பழக்கப்பட்டிருக்குமே! ஆனால் இவள் தந்தை சொன்னதை எண்ணிப் பார்த்தால், அவரும் மகளுக்குத் துணையாய் உடன்வர இருந்ததாகத் தெரிகிறது.

கோவையிலிருந்து திடீரெனத் தந்தி வந்ததால் அவர் அங்கே செல்லவேண்டி, அன்றிலை மட்டும் தனியாகவாவது உடனடியாகச் சென்னைக்கு அனுப்பவேண்டிய கட்டாயம் என்னவோ? சென்னையில் ஏதேனும் வேலையில் இருக்கிறாளோ என்னவோ! அதனால், பணத்தைப் பார்க்காது ஓரளவு வசதியாக இரண்டாவது வகுப்பில் பயணஞ் செய்து குறித்த காலத்தில் சென்னையை அடைய முயல்கிறாள் போலும். சரி சரி, யார் எப்படிப் போனால் தான் நமக்கென்ன!''

என்றெல்லாம் பலவாறு எண்ணிக் கொண்டிருந்தார் அந்த இளைஞர். அவருக்கு அலையலையாக இவ்வளவு எண்ணங்கள் எழுந்ததற்குக் காரணம் அந்த 'அன்றில்' என்னும் கருத்தைக் கவரும் புது வகைப் பெயரே.

அன்றிலோ அமைதியாகப் படித்துக் கொண்டிருந்தாள். அவள் கைகளை அணிசெய்து கொண்டிருப்பது, திருக்குறளுக்கு 'ஃபிரான்சிசு வொய்ட் எல்லிசு' **(Francis Whyte Ellis)** என்னும் ஆங்கிலேயர் ஆங்கில மொழியில் எழுதியுள்ள 'திருக்குறள் எல்லீசு கம்மென்டரி' **(Tirukkural Ellis' Commentary)** என்னும் உரை விளக்க நூலாகும்.

# 2

உயிர்கள் சார்ந்ததன் வண்ணம் இயங்கும் என்று தத்துவ நூலார் உரைப்பர். ஒருவர் செய்தித்தாள் எடுத்துப் படித்தால் பக்கத்தில் இருப்பவர்க்கும் அந்தப் பசி தோன்றும். ஒருவர் தண்ணீர் குடித்தால் உடன் வருபவரும் ஒரு குவளை குடித்து வைப்பார். அப்பா ஏதாவது படித்துக்கொண்டிருந் தால், குழந்தையும் எதையாவது எடுத்து வைத்துக்கொண்டு படிப்பவன்போல் மழலை சிந்துவான்; அப்பா படம் போட்டால், அவனும் தன்னை இரவிவர்மாவாக ஆக்கிக் கொண்டு, ஒன்று கிடக்க ஒன்றைக் கிறுக்கி, 'இது நல்லா யிருக்காப்பா?' என்று வேறு கேட்டுவைப்பான், ஆமாம், அன்றில் படித்துக் கொண்டிருப்பதைப் பார்த்ததும் இளைஞ ருக்கும் அந்த வேட்கை நோய் தொற்றிக் கொண்டது.

இளைஞரும் தன் பெட்டியிலிருந்து ஒரு புத்தகத்தை எடுத்து வெளியில் வைத்தார். புத்தகம் என்றறிந்ததும், அன்றிலின் கண்களும் நோட்டம்விட்டன. இருவருமே புத்தகப் பைத்தியங்கள் போலும்! அந்தப் புத்தகத்தின்மேல், 'அறவணன் எம்.ஏ., காரைக்குடி' என்று எழுதியிருந்தது. அந்தப் பெயரைக் கண்டதும் அவள் உள்ளமும் வேலை செய்யத் தொடங்கியது.

அறவணன் என்ற பெயர் புதிதாய் இருக்கிறதே! இவருடைய பெயர்தானா? அப்படியானால், இப்புத்தகம் இவருடையதாக இருக்க வேண்டும். அல்லது, வேறு யாருடைய புத்தகமோ - வேறு யாருடைய பெயரோ? இருக்க முடியாது. பெயரை அடுத்து, காரைக்குடி என ஊர் குறிக்கப்பட்டிருப்பதாலும், இந்த வண்டி தனுசுகோடியி லிருந்து காரைக்குடி வழியாகத்தான் திருச்சிக்கு வந்திருக் கிறது ஆதலாலும், இவர் காரைக்குடியாராகத்தான் இருக்க

வேண்டும் - காரைக்குடி நிலையத்தில்தான் வண்டியேறி யிருக்க வேண்டும் — பெயருக்குப் பின்னால் போடப் பட்டிருப்பதற்கேற்ப, இவரை ஓர் எம்.ஏ, படித்தவர் என்று சொல்லலாம். அதற்குரிய அறிகுறி தெரிகிறது. எனவே, அறவணன் இவர்தான் — இவரே அறவணன்.

அறவணன் என்ற பெயரைத் தமிழ் படித்தவர்களே நன்கு அறிவர். தமிழிலுள்ள ஐம்பெருங் காப்பியங்களுள் மணிமேகலையும் ஒன்று. மணி மேகலை என்னும் பெண்ணின் வரலாறு கூறுவதால் அந்தக் காப்பியம் மணிமேகலை என அவள் பெயராலேயே அழைக்கப்படுகிறது. அந்நூலில் 'அறவண அடிகள்' என ஒருவர் பேசப்படுகிறார். அவர் ஒரு புத்த சமயத் துறவி. மணிமேகலைக்கும் அவள் தாய் மாதவிக்கும் அறம் உரைக்கிறார்; சமய உண்மைகளை விளக்குகிறார். அவரைப் பெரிய ஆசானாக மணிமேகலை மதிக்கிறாள். - வணங்குகிறாள் – வாழ்த்துகிறாள். இவ்வித மாக அக்காவியத்துள் அறவணர் ஓர் உயர்ந்த உறுப்பாகப் படைக்கப்பட்டுள்ளார். மக்கட் பண்பின் உயர் எல்லைக் கோட்டில் நின்ற அந்த நல்லோரின் பெயரை யாரும் வைத்துக் கொள்வதில்லை. அதற்குக் காரணம்: அவரைப் பற்றி ஒன்றும் தெரிந்து கொள்ளாத அறியாமையோ — அல்லது — அவர் பெயரை வைத்துக் கொண்டால் அவர் போல உயர் பண்புகள் அமையப் பெற்றவராயிருக்க வேண்டுமே என்ற அச்சமோ? தம் பெயரின் பொருளே தெரியாத மக்கள், பெயருக்கேற்ப வாழ்வதெங்கே? எனவே, எனக்குத் தெரிந்த வரைக்கும், அறவணன் என்ற பெயரில் இவர் ஒருவர்தான் இருப்பதாகத் தெரிகிறது. இந்தப் பெயர் இவருக்கு எப்படி வந்தது?

இவர் பெற்றோர் இவருக்கு அறவணன் என்று பெயர் வைத்திருப்பாரா? அல்லது அவராகவே இடையில் வைத்துக்

கொண்டிருப்பாரா? ஒரு வேளை, ஏதேனும் வடமொழிப் பெயர் பெற்றோரால் தனக்கு இடப்பட்டிருக்க, அதை மொழிபெயர்த்து மாற்றிக் கொண் டிருப்பாரா? எப்படிப் பார்த்தாலும், இவருக்கோ — இவர் குடும்பத்தார்க்கோ தமிழிலக்கியங்களில் நல்ல ஈடுபாடு இருக்க வேண்டும் என்றே தோன்றுகிறது.

ஓர் உயர்ந்த தூய்மையான துறவியின் பெயரைக் கொண்டிருக்கிற இவர், ஏன் ஒரு பெண்ணிடம் வலிந்து வந்து பேச வேண்டும்? பிறகு நல்ல பதில் பெறாமல், மூக்குடைந்து மயங்கவேண்டும்? ஒரு பெண்ணுடன் பேசிக் கொண்டிருப்பதில் இந்த ஆண்களுக்கு என்ன இன்பம் கிடைக்கிறதோ? இவர்களின் வேடிக்கை விளையாட்டுப் பொழுதுபோக்கு இன்பத்திற்கு ஊரார் வீட்டுப் பெண்கள் உடன்படவேண்டுமோ? ஆனால் இந்த அறவணன் கெட்ட எண்ணத்தோடுதான் பேச்சுக் கொடுத்தார் என்று எப்படிச் சொல்லமுடியும்? கள்ள மில்லாத வெள்ளை உள்ளத்தோடும் பேசியிருக்கலா மல்லவா?

'அறவணன்' என்னும் அருமையான பெயருடைய இவர் யாரோ? எதற்காகச் சென்னை செல்கிறாரோ? ஏதேனும் வேலையில் இருக்கிறாரோ? அல்லது வேலை தேடிச் செல்கிறாரோ? சரி சரி, யார் எப்படியானால் நமக்கென்ன?'' என்று அன்றில் ஏதேதோ எண்ணினாள். அவளது எண்ணத்தின் எழுச்சிக்குக் காரணம், அறவணன் என்னும் அந்த அழகுத் தமிழ்ப் பெயரே!

க. சுப்பிரமணியப் பிள்ளையவர்கள் எழுதிய 'தமிழ் இலக்கிய வரலாறு' என்னும் புத்தகம்தான் இப்போது அறவணனுடைய பொழுதைப் போக்கிக் கொண்டிருப்பது. தமிழிலக்கியங்கள் பற்றி அறிந்துகொள்ள விரும்புபவர் அப்புத்தகத்தின் உதவியை நாடலாம். தமிழிலக்கியங்கள்

பற்றிச் சொற்பொழிவாற்றுதலையோ, ஆராய்ச்சிக் கட்டுரை எழுதுதலையோ குறியாகக் கொண்டவர்க்கும் அந்நூல் பெருந்துணை புரியும். தமிழ் நூல்களை அயல்நாடுகளில் - அயல்மொழிகளில் பரப்புவது இருக்கட்டும்; நம் நாட்டில் நம் மக்கள் அனைவரும் கற்கும் காலம் எக்காலம்? வெற்று அத்தை - பாட்டி கதைகளையும், படிப்பவரைத் துப்பற்றவ ராக்கும் துப்பறியும் தொடர்கதைகளையும் படித்துக் கொண்டிருந்தால் போதுமா? சிறுகதைகளும் தொடர் கதைகளுங்கூட, 'இலக்கிய மதிப்பு' (Literary value) உடையனவாய் இருக்க வேண்டுமே.

புகைவண்டி போய்க் கொண்டிருக்கிறது. அன்றிலும் அறவணனும் எம்.ஏ. படித்தவர்களாயிருந்தும், இருபதாம் நூற்றாண்டினராயிருந்தும் எந்தவிதத் தொடர்பும் கொள்ள வில்லை. ஒருவரை யொருவர் ஏறிட்டுப் பார்த்துக் கொள்ளவும் இல்லை. விருத்தாசலம், விழுப்புரம், செங்கற் பட்டு - சந்திப்புகளில் அறவணன் கீழே இறங்கித் தன் தேவைகளை இடையிடையே முடித்துக் கொண்டார். அன்றிலோ வண்டியில் இருந்தபடியே தேவைகளைச் சரி கட்டிக்கொண்டாள்.

உடன் பயணம் செய்யும் வடநாட்டினர் இடையிடையே ஏதேனும் ஆங்கிலத்தில் அன்றிலிடம் கேட்பர். 'இது என்ன ஊர்? இதோ கோபுரம் தெரிகிறதே, என்ன கோவில்? இதோ மலை தெரிகிறதே, என்ன மலை?' என்று கேட்பர். அக்கேள்விகட்குரிய பதிலை மட்டும் அவள் சொல்லி வைப்பாள். ஆனால் அறவணன் மட்டும் அவள் வம்புக்குப் போகவேயில்லை.

பிற்பகல் 2-52 மணிக்கு வண்டி தாம்பரம் நிலையத்தில் வந்து நின்றது. அங்கே அறவணன் இறங்கிக்கொண்டார். இறங்கும்போது மட்டும் ஒருமுறை அன்றிலைப் பார்த்தார்,

அதே சமயத்தில், இந்தப் பேர்வழி இறங்குகிறார் போலும் என்று அன்றிலும் அறவணனைப் பார்த்தாள். ஒருவரை யொருவர் பார்ப்பது தெரியவே, யாருமே சரியாய்ப் பார்க்காமல் அரைகுறையாய்ப் பார்வையைத் திருப்பிக் கொண்டனர்.

3-30 மணிக்கு வண்டி சென்னை எழும்பூர்ப் பெரு நிலையத்தை வந்தடைந்தது. அன்று ஞாயிற்றுக் கிழமை யாதலால், கடைத்தெருக்கள் வெறிச்சோடியிருந்தாலும், அந்தப் புகைவண்டி நிலையம் அன்று கலகலப்பாகவே யிருந்தது. அங்கேதான் அன்றில் இறங்கினாள். வண்டி அதற்குமேல் போகாது - எல்லோருமே இறங்கிக் கொள்ள வேண்டியதுதானே.

# 3

மறுநாள் திங்கட்கிழமை காலை ஒன்பது மணிக்கு, சென்னை அரசினர் கலைக் கல்லூரியில், பல ஊர்ப் 'பட்டதாரிகள்' கூடியிருந்தனர். ஏறக்குறைய இருபது பேர் இருக்கலாம். அவர்களுள் பெரும்பாலோர் இளைஞர்களே.

அக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளர் பதவிக்கு ஒருவர் தேவைப்பட்டார். அதற்காகச் செய்தித் தாட்களில் விளம்பரம் கொடுக்கப்பட்டது. பலர் விண்ணப்பம் அனுப் பினர். அவர்களுள் ஒரு சிலர் தேர்ந்தெடுக்கப்பட்டு 'இன்டர்வியூ' என்னும் நேரடித் தேர்வுக்காக (Interview) அழைக்கப்பட்டனர். அவர்களே இவர்கள்.

கல்லூரியின் கூடம்ஒன்றில் ஒவ்வொருவராய் வந்தமர்ந்த வேலை விரும்பிகளுள் அறவணனும் ஒருவர். அவர் வந்த போது அங்கே போடப்பட்டிருந்த இருக்கைகள் எல்லாம் ஏறக்குறைய நிரம்பியிருந்தன. வருபவரை வரவேற்று அமரச் செய்து கொண்டிருந்த அலுவலர் ஒருவர், அறவணனுக்கு ஓர் இருக்கையைக் காட்டி அதில் அமரச் சொன்னார். அறவணன் அங்கு அமரச் சென்றபோது பக்கத்து இருக்கையில் ஒரு பெண் இருக்கக் கண்டார், அன்றில்தான் அவள். உடனே அங்கு அமராமல், அவளுக்கு நேர் எதிர்ப்புறத்தில் இருந்த ஓர் இருக்கையில் அவர் அமர்ந்து கொண்டார். இந் நிகழ்ச்சி, தன்மேல் அன்றில் பெருமதிப்பு கொள்ளும் அளவிற்கு அறவணனை உயர்த்தி விட்டது. புகைவண்டியில் அவரிடம் நாம் நேற்று நன் முறையில் பேசாததால், அவர் நம்மேல் உறைப்புக்கொண்டு இங்கு இவ்வாறு நடந்துகொண்டார் என்று அன்றில் புரிந்து கொண்டாள்.

வேலை நாடி அங்குக் கூடியிருந்தவர்களுள் அன்றில் ஒருத்தியே பெண். அவள் யாருடன் பேசுவது? மற்ற ஆடவர்

கள் ஒருவரோடு ஒருவர் பேசி ஆரவாரம் செய்துகொண் டிருந்தனர். இளைஞர்களாயிற்றே - வாளா இருக்க முடியுமா? 'தேர்வுக் குழுவில் (Executing Committee) யார் யார் இருப்பார்களோ? என்னென்ன கேள்விகள் கேட்பார் களோ?' என்று சிலர் பேசிக் கொண்டனர். 'இதைப் பற்றிக் கேட்கலாம் - அதைப் பற்றிக் கேட்கலாம்' என்று ஒரு சிலர் அறிவித்துக் கொண்டனர். இறுதியில் இவர் தேர்ந் தெடுக்கப்படலாம் - அவர் தேர்ந்தெடுக்கப்படலாம் என்று வேறு சிலர் இப்போதே முடிவு எடுக்கத் தொடங்கினர். இப்படியாக அந்தக் கூடம் கலகலப்பாயிருந்தது. ஆனால், அன்றில் மட்டும் தலையை நட்டவள் நட்டவளே; ஏனெனில், அவள் யாரைப் பார்த்தாலும், அவர்கள் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதாக - பக்கத்தில் இருப்பவரோடு பேசிக் கொண்டிருக்கும் போதும் தன்னைப் பார்த்தபடியே அவர்கள் பேசிக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது - ஆனால் அறவணனைத் தவிர! அதனால் அவள் தலையை நட்டுக் கொண்டாள். இஃது உலக இயற்கைதான்!

அங்குக் கூடியிருந்தவர்கள், வெளித் தோற்றத்தில் ஒருவரை யொருவர் நலமா - என்று கேட்டு நலம் பரிமாறிக் கொண்டும் சிரித்துப் பேசிக் கொண்டும் இருந்தார்களே தவிர, உள்ளுக்குள்ளே ஒவ்வொருவரும் ஒரு வல்லரசாகக் குமுறிக் குழம்பிப் புகைந்து பொங்கிக் கொண்டிருந்தார்கள். வேலைக்குத் தேவையானவரோ ஒருவர் - இத்துணை பேர் வந்தால் பின்னே நிலைமை எப்படியிருக்கும்? ''இவன் வராதிருந்தால் நமக்குக் கிடைத்து விடுமே - அவன் வரா திருந்தால் நாம் தட்டிக் கொள்ளலாமே! நம்முடைய படிப்பு இவனுக்கு இருக்கிறதா? - நம்முடைய தகுதி திறமை அனுபவம் அவனுக்கு உண்டா? இவன்தான் இன்ன ஊர்க் கல்லூரியில் இருக்கிறானே, இவனுக்கு என்ன கேடு - அவன் தான் அந்தக் கல்லூரியில் இருக்கிறானே, அவனுக்கு என்ன

பிளவை? இவன் எவ்வளவு பெரிய 'சோர்சு' கொண்டு வந்திருக்கிறானோ - அவன் யார் யாரைக் காக்கா பிடித்து வைத்திருக்கிறானோ? நம்மைப் பிடித்த ஏழரை ஆட்டையான் சனியனாக எல்லாப் பயல்களும் வந்து தொலைத்தான்களே! போதாக் குறைக்கு அவள் வேறு வரவேண்டுமா? அவள் பெண்ணாயிருப்பதால் அவளுக்குக் கிடைத்துவிடுமோ?'' என்று உள்ளத்தில் அழுக்காறு (பொறாமை) கொண்டு கொதித்துக் கொந்தளித்துக் கொண்டிருந்தார்கள். வேறு எந்த வேலைக்கு எவர் போட்டியிட்டாலும் இத்தகைய உணர்வு தோன்றுவது இயல்பே. பலரை ஒன்று கூட்டி இப்படி ஒரு நிலைமை ஏற்படச் செய்யும் 'இன்டர்வியூ' முறை என்பது அப்பப்பா பொல்லாதது. அறிமுகம் ஆனவர் வர்களுக்குள்ளேயுங்கூட அன்பைக் கெடுத்து, அலைச்சலை யும் புகைச்சலையும் உண்டாக்குகின்ற அந்த முறை அம்மம்மா கொடிது கொடிது! இதைவிட்டால் வேறுவழி யில்லையோ?

இத்தனை பேருள் வெற்றியாருக்கோ? அத்தனை பேரும், 'கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று' புரியப்போகும் போர்வீரர்களாக அமர்ந்திருந்தனர். அந்தக் காலத்தில் திருமணத்திற்காகச் 'சுயம்வரம்' நடந்ததென்றால், இந்தக் காலத்தில் வேலைக்காக 'இன்டர் வியூ' நடக்கிறது. அந்தக் காலத்தில் எப்படித்தான் சுயம்வரத்திற்கு ஆட்கள் வந்தார் களோ தெரியவில்லை. சுயம்வரம் என்றால்:— ஒரு நாட்டின் அரசகுமாரிக்குத் திருமணம் செய்யவேண்டுமாயின், மண மகனைத் தேர்ந்தெடுப்பதற்காக, 'அவனி ஐம்பத்தாறு தேயத்து' அரசகுமாரர்களுக்கும் அழைப்பு அனுப்புவார்கள். அரசகுமாரர்கள் அனைவரும், மணமகளான அரசகுமாரி யின் அரண்மனையில் குறித்த காலத்தில் வந்து கூடுவர். அவர்கள் எதிரே, கைகளில் மாலை ஏந்திக்கொண்டு அரச குமாரி அன்னநடை போட்டு வருவாள். அவளுடைய

உயிர்த்தோழி, அங்கு வந்தமர்ந்து மணமகள் நமக்குத்தான் என்று மனப்பால் குடித்துக் கொண்டிருக்கும் அரசகுமாரர்களின் ஊர், பேர், கல்வி, செல்வம், வீரம், இன்னும் பல தகுதி திறமைகளை அவளுக்கு விளக்குவாள். அதாவது, 'இவர் வானத்தை வில்லாக வளைப்பார் - அவர் மணலைக் கயிறாகத் திரிப்பார் - அதோ இருக்கிறாரே அவர் சல்லடையில் தண்ணீர் கொண்டு வருவார்' என்றெல்லாம் ஏதேதோ இல்லதும் உள்ளதுமாகச் சொல்லிவைப்பாள். அப்படியெல்லாம் அரசகுமாரர்கள் தங்களைப் பற்றி முன்கூட்டி விளம்பரப்படுத்தி யிருப்பார்கள். அவ்வளவும் கேட்டறிந்த பின்னர் அரசகுமாரி தனக்குப் பிடித்தமான ஒருவர் கழுத்தில் மாலையிடுவாள். அதன் பின்னர் திருமணம் நிகழும், மற்ற அரச குமாரர்கள் மூட்டை முடிச்சுகளைக் கட்டிக்கொண்டு இன்னொரு இடம் போய்ப் பார்ப்பார்கள், இதற்குப் பெயர் தான் சுயம்வரம்.

இந்தச் சுயம்வர முறை மிகவும் மானக்கேடான ஒரு முறையல்லவா? மணமகள் ஒருவனுக்கு மாலையிட்ட பின்பு, மற்ற அரசகுமாரர்களின் முகம் எப்படியிருக்கும்? அதன் பிறகும் அவர்கள் உயிரோடு உலவுகின்றார்களே! சோறும் வேறு தின்னுகிறார்களே! அதுதான் வியப்பு! அதற்குமேல் வியப்பினும் வியப்பு, அவர்கள் அந்த உடம்பைத் தூக்கிக் கொண்டு வேறொரு சுயம்வரத்திற்குச் செல்வதாகும்.

இந்தச் சுயம்வரத்திற்கும், இந்தக் காலத்தில் நடக்கும் 'இன்டர்வியூ' முறைக்கும் என்ன வேறுபாடு? ஒரு வேலைக்குப் பலர் விண்ணப்பம் அனுப்புகின்றனர். அதில், தங்கள் படிப்பு, பட்டம், தகுதி, திறமை, அனுபவங்களை வானளாவக் கொட்டிக் குவிக்கின்றனர். அவர்களுள் இருபது அல்லது முப்பது பேரை நேரில் அழைத்துக் கேள்வி பல கேட்டு உலுக்குகின்றனர் தேர்வுக் குழுவினர். ஒருவர் தேர்ந்தெடுக்கப் படுவார். அவருக்குத் தகுதி இருந்தாலும்

இருக்கும் - இல்லாமலும் போகும். மற்றவர்கள் போக்கு வரவு - மற்ற படிச்செலவு என்ன ஆயிற்று என்று கணக்குப் பார்த்து வெம்பி வெதும்பிப் புழுங்குவர்.

''இந்த முறை நன்றாக இருக்கிறதா? பலரையும் அழைத்துத் தொல்லை கொடுக்க வேண்டுமா? வேலைக்காக அழைப்பவர்கள், எல்லோருக்கும் போக்குவரவு படிச்செலவு கொடுக்கட்டுமே. 'மலிந்தால் தானாகக் கடைத்தெருவுக்கு வரும்' என்ற முறையில், பட்டதாரிகள் பலர் இருப்பதால், அவர்களை அவர்கள் செலவில் அழைத்து ஆட்டிப் படைப்பதா? சிலவிடங்களில், விளம்பரமும் இன்டர்வியூவும் ஒரு நாடகமாகப் போய்விடுவதும் உண்டு. இந்தச் சடங்கு தேவையில்லையே. தங்களுக்கு வேண்டியவரா யிருக்கிற அல்லது நம்பிக்கைக்கு உரியவராயிருக்கிற ஒருவரை நேரடியாக அமர்த்திக் கொள்ளலாமே. தம்மிடம் நேர்மை யிருந்தால், யார் எது வேண்டுமானாலும் நினைத்துக் கொண்டு போகட்டுமே'' - என்றெல்லாம் சில பட்டதாரிகள் எண்ணி, வெறும்வாயை மென்று கொண்டிருந்தனர்.

அப்போது பணியாள் ஒருவர் வந்து, ''இங்கே அன்றில் என்ற பெயர் உடையவர் யார்? அவரை இவர் பார்க்க வேண்டுமாம்'' - என்று கேட்டுக்கொண்டே ஒரு பெரியவரை அழைத்து வந்தார். அன்றில் எழுந்து, அந்தப் பெரியவரிடமிருந்து ஒரு பொருளை வாங்கிக் கொண்டு அமர்ந்து கொண்டாள். அந்தப் பெரியவர் போய்விட்டார். ஏதேனும் நற்சான்றிதழை (சர்டிபிகேட்) தங்கியிருக்கும் வீட்டில் மறந்து வைத்துவிட்டு வந்திருக்கலாம். அதனை எடுத்து வந்து வீட்டுப் பெரியவர் கொடுத்திருக்கலாம்.

அன்றில் என்ற பெயரைக் கேட்டதும், அங்கு இருந்தவரிடையே சிறுசிறு முணுமுணுப்பு ஏற்பட்டது. அங்கும் இங்குமாக ஒருவரோடொருவர் ஏதேதோ பேசி மகிழ்ந்தனர்.

''என்ன, அன்றிலா! புதுப்பெயரா யிருக்கிறதே! அன்றிலைப் பற்றி இலக்கியத்தில்தான் படித்திருக்கிறோம் — நேரில் பார்த்ததில்லையே! ஐயா, நீங்கள் அன்றில் பறவையைப் பார்த்திருக்கிறீர்களா? இல்லாவிட்டால் இதோ இருக்கிறது - பார்த்துக் கொள்ளுங்கள்! அப்புறம் பறந்துவிடப் போகிறது!'' என்று இருவர் பேசிக்கொண்டனர். ''அன்றில் எப்போதும் இணைபிரியாதிருக்கும் என்று சொல்வார்களே - இதன் துணை எங்கே?'' என்று வேறு இருவர் வேடிக்கை செய்து கொண்டனர். ''இது ஒரு சுயம்வர மண்டபம் போல் இருக்கிறதல்லவா? அன்றில்தான் அரசகுமாரியாகிய மணமகள் - மற்றவர்கள் பலநாட்டு அரசகுமாரர்கள்'' என்று பேசிக்கொண்டு மற்றும் இருவர் மகிழ்ந்தனர். ''இவள் எவ்வளவு அழகானவள் — அடக்கமானவள்! இவள் பெயர் எத்துணை கவின் உடையது — கவர்ச்சியானது! இப்படி யொரு படித்த — அழகான — அடக்கமான பெண் நமக்கு மனைவியாக வாய்ப்பதரிது'' என்று வாயில் உமிழ்நீர் ஊறிற்று ஒருசிலர்க்கு.

அன்றில் என்னும் பெயர், அங்கிருந்தவர்களின் மூளைகட்கு நன்கு வேலை கொடுத்திருப்பதை அன்றில் நன்றாகப் புரிந்து கொண்டாள்; அவர்கள் பேசிக்கொள்வது காதில் தெளிவாக விழாவிட்டாலும், தன் பெயரைப் பற்றித்தான் 'திறனாய்வு' (Criticism) செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது வரையிலும் திட்டவட்டமாகத் தெரிந்து கொண்டாள். அவள் யாரைப் பார்த்தாலும், அவர் தன்னைப் பார்த்துக் கொண்டிருப்பதை மறுமுறையும் கண்டாள். அறவணன் மட்டும், மணிமேகலை என்னும் காவியத்தில் வருகின்ற அறவண அடிகளாகவே காட்சி யளித்தார். அன்றில் எத்தனைமுறை ஏறிட்டுப் பார்த்தும் அவர் அவளை ஒருமுறை கூட பார்க்கவேயில்லை. அவளுக்கு அவர் காட்சிக்கு அரியராகிவிட்டார். தன்னை அடிக்கடிப்

பார்த்துக் கொண்டிருக்கும் மற்றவரிடையே தன்னை ஒரு சிறிதும் பொருட்படுத்தாது புறக்கணித்த அறவணன் அவளுக்கு இமயத்தின் எவரெஸ்டாக உயர்ந்துவிட்டார். நேற்றுப் புகைவண்டியில் வந்த போது அவருடன் சரியாகப் பேசாமைக்கு வருந்தினாள். அவர் ஒரு முறையாவது தன்னைப் பார்க்கமாட்டாரா என்று ஏங்கித் தவங் கிடந்தாள். அவரது அசையா உறுதியை அறிந்தபோது அவளுக்கு அழுகை வந்துவிடும்போல் இருந்தது. அவருடன் பேசவேண்டும் - பழகவேண்டும் என்று அவாக்கொண்டாள்; அதற்காகத் தக்க வாய்ப்பை எதிர்நோக்கிக் காத்திருந்தாள்.

பத்து மணியானதும், தேர்வுக் குழுவினர் முன்பு ஒவ்வொருவராக அழைத்துச் செல்லப்பட்டனர். என்னென்னவோ கேள்விகள் கேட்கப்பட்ட பின்னர் அவரவரும் அவ்விடத்தினின்றும் அகலத் தொடங்கினர்.

அன்றிலும் அறவணனும் அடுத்தடுத்து அழைக்கப் பட்டதால், அவர்கள் அக்கட்டடத்தைவிட்டகன்றதும் ஒரே நேரத்தில் நிகழ்ந்தது. கல்லூரியின் வெளிவாயிலில் எதிர்பாராவிதமாய் இருவரும் எதிரும் விழியுமாகப் பார்த்துக் கொள்ளும்படியான தவிர்க்கமுடியாத நிலைமை ஏற்பட்டு விட்டது. இதுதான் தக்க நேரம் என்றுணர்ந்த அன்றில் அறவணனை நோக்கி, ''நாம் இருவரும் இங்கேதான் வரப் போகிறோம் என்பது, நேற்றுப் புகைவண்டியில் வந்தபோது தெரியாமல் போயிற்றே'' - என்று பேச்சுக் கொடுத்தாள். அதற்கு அறவணன், ஆமாம் என்று தலையை அசைத்து விட்டு ஒரு வண்டியைப் பிடித்துக்கொண்டு போயே போய் விட்டார். அன்றில் உள்ளம் கன்றிவிட்டது. ஆனால் அவள் ஒரு வகையில் தனக்குத்தானே திருப்தி பட்டுக் கொண்டாள். 'நேற்று நாம் புகைவண்டியில் நடந்து

கொண்ட விதத்தினால் ஏற்பட்ட குறையை இன்று நிறை செய்துவிட்டோம்' என்ற மனத்திருப்திதான் அது. அவளுக்கு அறவணனைப் பற்றி அக்கறை ஒன்றும் இல்லை. அவர்மேல் அன்போ - அல்லது - காதலோகூட கிடையாது. 'ஒரு படித்த பெண், ஒரு படித்த ஆடவர் பேச்சுக்கொடுத்தால் இப்படித்தானா பட்டிக்காட்டுத்தனமாய் நடந்துகொள்வது', என்று அவர் தன்னைப் பற்றி மட்டமாக மதித்துவிடாமல் இருக்கவேண்டும் – என்ற ஒரே தாழ்வுச்சிக்கல் (Inferiority) எண்ணந்தான் அவளை இவ்வளவு தூரம் ஆட்டிப்படைத்தது. இனியொரு முறை அறவணனைக் காணவேண்டுமென்ற கவலையோ - அவரோடு பேசி அளவளாவ வேண்டுமென்ற ஆர்வமோ அவளுக்கு இல்லை. நேற்று இல்லாமல், இன்றைக்கு ஒரு மணி நேரமாய் அவளுக்கு இருந்து வந்த ஒரு சுமை இப்பொழுது இறங்கிவிட்டது. மனநிறைவுடன் இல்லம் ஏகினாள்.

அன்றிலைப் போலவே அறவணனும் தனக்குத்தானே திருப்திபட்டுக் கொண்டார். புகைவண்டியில் ஒரு புதிய இளம் பெண்ணிடம் தானாக வலியச் சென்று பேச்சுக் கொடுத்த செயல் அதுவரை உறுத்திக்கொண்டே யிருந்தது. மேலும் அந்தப் பெண்ணிடமிருந்து சரியான முறையில் பதில் வராது போகவே, தான் ஏதோ தகாத முறையில் நடந்து கொண்டதாக - பெரிய தவறு செய்து விட்டதாக அஞ்சித் தன்னுள்தானே வருந்திக்கொண்டிருந்தார்; இனி எப்போதும் எந்தப் பெண்ணிடமும் காரணமின்றி வலிந்து பேசக்கூடாது என்று உறுதியும் எடுத்துக் கொண்டிருந்தார். அந்த உறுதியின் ஒரு கூறுதான் இன்று அன்றிலிடம் நடந்து கொண்ட மாதிரியாகும். மேலும், தன்னை ஓர் அற்பன் அயோக்கியன், கயவன் - கசடன் என்று அன்றில் இழிவாக எண்ணியிருப்பாள் என்ற ஐயமும் அச்சமும் அறவணனை ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்தன. ஆனால் இன்று

அவளை நேரிட்டுப் பார்க்காத நெஞ்சுறுதியின் மூலம் - அவள் பேசியும் தான் வாய்விட்டுப் பேசாத வைரம் பாய்ந்த மனவுறுதியின் மூலம், தன்னைத் தூயவன் என்று அவள் எண்ணும்படிச் செய்துவிட்டார். அது போதும். நேற்றி விருந்து அவர் உள்ளத்தை உறுத்தி வருத்திக்கொண்டிருந்த ஒரு பெரும்புண் இன்று ஆறிவிட்டது. இனி அவள் தொடர்பான கவலை அவருக்கு ஒன்றும் இல்லை. ஆனால், நேற்று நம்மை ஏறிட்டுப் பார்க்காதவளை இன்று நாம் பார்க்கக் கூடாது - நேற்று நம்முடன் பேசாதவளோடு இன்று நாம் பேசக்கூடாது என்ற வரட்டு வைராக்கியமோ - பழிவாங்கும் உணர்வோ அறவணனுக்கு இருந்ததில்லை. நேற்று செய்த தவறை, இன்றைய ஒழுங்கு நீர்மையால் கழுவித் தூய்மை செய்துவிடவேண்டும் என்ற ஒரே நல்லெண்ணந்தான்! அதில் வெற்றியும் பெற்றுவிட்டார். அதனால் அகமகிழ்வுடன் தங்குமிடம் சேர்ந்தார்.

# 4

மறுநாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் சென்னை எழும்பூர்ப் பெருநிலையத்திலிருந்து 10-45 மணிக்குப் புறப்பட்ட இராமேசுரம் பயணிகள் வண்டி 11-14 மணிக்குத் தாம்பரம் நிலையத்தில் வந்து நின்று, மீண்டும் 11-17 மணிக்குப் புறப்படத் தயாராயிருந்தது. அப்போது ஓர் இளைஞர் வேகமாக ஓடி வந்தார். புகைவண்டி அசையத் தொடங்கியது, மூன்றாவது வகுப்புப் பெட்டி ஒன்றின் கதவைத் திறந்தார்-திறக்க முடியவில்லை; மீண்டும் திறந்தார்-முடியவில்லை; மீண்டும் மீண்டும் திறந்து திறந்து பார்த்தார் — முடியவேயில்லை. வண்டியோ நகர்கிறது. இந்தக் காட்சியை உள்ளிருந்தவாறு பார்த்துக்கொண்டிருந்த ஒரு பெண் இரக்கப்பட்டு, தன் இருக்கையிலிருந்து கதவண்டை வந்து, ஏதோ ஒரு பிடியைத் திருப்பிப் பார்த்தாள். நல்ல வேளையாகக் கதவு திறந்து கொண்டது. உடனே இளைஞர் ஏறிக்கொண்டார்.

வண்டியில் ஏறிய இளைஞர், கதவு திறக்க உதவி செய்த பெண்ணைக் கண்டதும் திடுக்கிட்டார். இதுவரையும் கதவைத் திறப்பதிலேயே அவருடைய கண்களும் கருத்தும் இருந்தன - திறக்க உதவிக்கொண் டிருந்த உருவத்தைக்கூட கவனிக்கவில்லை. வண்டியில் ஏறக்கொண் டிருந்தபோது தான் கவனிக்கத் தொடங்கினார். இரண்டு உருவங்களும் எதிர் எதிராய்ச் சந்தித்துக் கொண்டன. அறவணனும் அன்றிலுந்தான் அவ்வுருவங்கள்.

கதவு திறக்க உதவிய அன்றிலுக்கு அறவணன் நன்றி சொல்லியாக வேண்டுமே. அவர் வாய் திறந்து பேசத் தயங்கினார் — இல்லையில்லை — என்ன செய்வதென்று ஒன்றும் ஓடாமல் திகைத்தார். நேற்றுக்கு முன்தினம் திருச்சி நிலையத்தில் அவள் வண்டியேறுவதற்குக் கதவு

திறக்கத் தான் உதவிய போது, அவள் வாய்திறந்து பேசாது கண் பார்வையாலேயே நன்றி தெரிவித்தாள் என்றாலுங்கூட, அப்போது அவள் தந்தையார் அவளுக்குப் பதிலாக வாய்திறந்து 'ஏழரை கட்டையில்' பேசி நன்றி தெரிவித்தார். இப்போது இங்கே அறவணனுக்குப் பதில் அன்றிலுக்கு நன்றி சொல்ல யாரும் இல்லையே. இவர் என்ன பெண் பிள்ளையா? எனவே ஒரு விதமாக அன்றிலை நோக்கி, ''உங்களுக்கு மிகவும் நன்றி'' என்றார். 'இருக்கட்டும்' என்றாள் அவள்.

பின்னர் அன்றில் தனது இருக்கையில் போய் அமர்ந்து கொண்டாள். அவள் அமர்ந்திருந்த பலகையில் அவளைத் தவிர வேறு யாரும் இல்லையாதலாலும், அதற்கு எதிர்ப் பலகையில் நாட்டுப் புறத்துக் கிழவர் ஒருவரும் கிழவி ஒருத்தியும் தம் பேரப்பையன் ஒருவனுடனும் மூட்டை முடிச்சுகளுடனும் அண்டா அடுக்குகளுடனும் நிரம்பி வழிந்து கொண்டிருந்ததாலும், அன்றில் இருந்த பலகையி லேயே அறவணனும் அமர்ந்து கொண்டார். அன்றிலும் அறவணனும் இடைவெளிவிட்டு அமர்ந்திருந்தாலும், அவர்கட் கிடையிலே அவர்களின் கைப்பெட்டிகள் இரண்டும் ஒன்றோடொன்று முட்டி மோதிக்கொண்டிருந்தன. வந்து அமர்ந்த ஐந்து நிமையம் (நிமிடம்) வரையிலும் அறவணன் எதிர்ப் பலகையில் கண் செலுத்தினார். கிழவனும் கிழவியும் ஒருவருக்கொருவர் வெற்றிலைபாக்கு சுண்ணாம்பு புகையிலை கொடுத்து வாங்கிக் கொள்வதையும், கொஞ்சிக் குலவுவது போல் அன்புரிமை கொண்டாடிக் கொள்வதையும் அறவணனும் அன்றிலும் பார்த்துச் சுவைத்தபடியே தாங்களும் ஒருவரை யொருவர் பார்த்துப் புன்னகைபூத்துக் கொண்டார்கள்.

வண்டி பெருங்களத்தூர் நிலையம் போய் நின்றது. அங்கே கிழவர் குடும்பம் இறங்கிக் கொண்டது. கிழவர் குழுவினர் இறங்குவதற்குள்ளாகவே பலகணியின் வழியாக மூட்டை முடிச்சுகளை உள்ளே எறிந்து கொண்டிருந்த ஒரு திருமணக் கூட்டம் உடனடியாக ஏறி, எள்விழ இடமில்லாத படி எல்லாப் பகுதியையும் பிடித்துக் கொண்டது. அத் திருமணக் கூட்டத்தினர் ஏறியபோது, குறிப்பிட்ட அந்தப் பகுதியில் உள்ளேயிருந்தவர்கள் அன்றிலும் அறவணனுந் தாம். விலகி அமர்ந்திருந்த அவ்விருவரும், புதுக்கூட்டம் வந்து நெருக்கியதும் சிறிது நெருங்கி அமர்ந்துகொண்டார்கள். அதாவது, பலகணி (சன்னல்) ஓரமாக அன்றிலும் அவளை அடுத்து அறவணனுமாக உட்கார்ந்திருந்தார்கள். அறவணனை அடுத்து, புதுக்கூட்டத்தினருள் சிலர் புளிக் கட்டுபோல் ஒட்டிக் கொண்டிருந்தார்கள். அன்றிலுக்கும் அறவணனுக்கும் நேராக எதிர்ப்பலகையில் புதுப்பெண்ணும் புதுமாப்பிள்ளையும் உட்கார்ந்திருந்தனர். அவர்களை யடுத்தும் புளிக்கட்டுகள் இருந்தன. பெண்ணும் பிள்ளையும் மாப்பிள்ளை இல்லத்தில் மணமுடித்துக் கொண்டு, பெண் வீட்டிற்கு மருவுக்காகச் செல்கின்றனர் போலும்!

பெண்ணும் பிள்ளையும் அன்றில் - அறவணன் கண்களுக்கு விருந்து கொடுத்துக் கொண்டிருந்தார்கள். பெண் பெரும்பாலான நேரம் தலைகுனிந்து கொண்டிருந்தாள். அவள் அடிக்கடி தன்னைப் பார்க்கமாட்டாளா என்று ஏங்கி மாப்பிள்ளை அவளை அடிக்கடிப் பார்ப்பார். மாப்பிள்ளையின் ஐந்தாறு பார்வைக்கு ஒருமுறை பெண் அவரை ஓரக் கண்ணால் பார்ப்பாள். அப்போது மாப்பிள்ளை சிரிப்பார்- அவள் உதடுகளும் மெல்ல மலரும். அடுத்தடுத்து இந்தக் காட்சியைக் காணும்போதெல்லாம், அன்றிலும் அறவணனும் தாங்களும் ஒருவரையொருவர் நோக்கிப் புன்னகை உதிர்ப்பர்.

வண்டி ஓடிக் கொண்டிருந்தது. அங்கேயிருந்த கொடுவாள் மீசைக்காரர் ஒருவர் அறவணனை நோக்கி, ''ஏன் தம்பி! நீங்கள் எந்த ஊருக்குப் போகிறீர்கள்?'' என்று கேட்டார். ''திருச்சிக்கு'' என்று அறவணன் சொன்னார். அதைத் தொடர்ந்து அங்கிருந்த ஒரு பெரியம்மா அன்றிலை நோக்கி, ''ஏம்மா! நீ எந்த ஊருக்குப் போகிறாய்?'' என்று கேட்டார்கள். ''நானும் திருச்சிக்குத்தான்'' என்று அன்றில் பதில் சொன்னாள். கொடுவாள் மீசைக்குச் சினம் வந்துவிட்டது. பெரியம்மாவை நோக்கி, ''கணவனும் மனைவியும் ஓர் ஊருக்குப் போகாமல் வெவ்வேறு ஊருக்கா போவார்கள்? இது என்ன கேள்வி? திருச்சிக்குப் போவதாகக் கணவன் முதலில் சொன்னபிறகு மனைவியை வேறு கேட்க வேண்டுமா?'' என்று கொடுவாள் மீசைக்காரர் கடிந்து கொண்டார். ''ஓ, அவர்கள் புருழ்சனும் பெண்சாதியுமா! நான் தனித்தனி என்று தவறாக நினைத்துவிட்டேன்'' என்று பெரியம்மா கொடுவாள் மீசையின் கூற்றுக்கு முத்திரை யிட்டார்கள். அங்கிருந்த அனைவரும் அன்றிலையும் அறவணனையும் கணவன்-மனைவி என முழுக்கமுழுக்க நம்பிவிட்டார்கள்.

அங்கிருந்தவர்களின் தவறான முடிவுக்கு அன்றிலும் அறவணனும் மறுப்பு ஒன்றும் சொல்லவில்லை. என்ன வென்று சொல்வது? இருவருமே வெட்கப்பட்டனரென் றாலும், அன்றிலின் முகம் அளவு மீறிச் சிவந்துவிட்டது. அந்த நேரத்தில் அவளைப் பார்க்க அறவணனுக்கு அச்சமா யிருந்தது. அவள் ஏதாவது எண்ணிக்கொண்டால் என்ன செய்வது? இருப்பினும், சிறிது நேரம் கழித்து அவர் அன்றிலைப் பார்த்தபோது, அவளும் தன்னைப் பார்ப்பது தெரிந்தது. அப்போது இருவருமே, அங்கிருந்த மக்களின்

அறியாமையைப் புலப்படுத்தும் அசட்டுச் சிரிப்புடன் கண்களை மெதுமெதுவாக மூட முயன்றனர்.

சிறிது நேரம் கழித்து ஒருவர் அறவணனை நோக்கி 'மணி என்ன?' என்று கேட்டார். அறவணன் கைக் கடிகையாரத்தைப் பார்த்தபோது மணி நின்றுவிட்டிருந்தது. இப்போது அவர், கேட்டவர்க்கு மணி சொல்லியாக வேண்டும் – தானும் சாவி கொடுத்து மணியைத் திருத்திக் கொள்ள வேண்டும். அதற்காக, கையில் கடிகையாரம் கட்டியிருக்கிற இன்னொருவருடைய துணையை நாட வேண்டும். அங்கே அண்மையில் அன்றில் கையில்தான் கடிகையாரம் இருந்தது. அவளை மணி கேட்கலாமா – கூடாதா என்று அறவணன் தயங்கினார். 'ஏன், கேட்டா லென்ன? நேற்றுக் கல்லூரி வெளி வாயிலில் அவளாகவே வலிய வந்து நம்மிடம் பேசினாளே. நாம்தானே சரியாகப் பேசவில்லை? அதுகுறித்து அவள் மனம் புண்பட்டிருக்குமோ? முந்தாநாள் புகைவண்டியில் அவள் நம்மிடம் சரியான முறையில் பேசாததனால் நம் மனம் புண்பட்டது போலத் தானே, நேற்று நாம் பேசாததனால் அவள் மனம் புண்பட் டிருக்கும்? அதனை ஈடுகட்ட இப்பொழுது நாம் பேசினால் என்ன? மேலும் மணி கேட்பதில் தவறு ஒன்றும் இல்லையே'– என்ற முடிவுக்கு வந்தவராய், அன்றிலை நோக்கி 'மணி என்ன ஆகிறது?' என்று கேட்டார். 'மணி பதினொன்றே முக்கால்' என்றாள் அவள். மணி கேட்டவருக்கும் திருப்தி யாயிற்று – அறவணனும் தன் கைக் கடிகையாரத்தைத் திருத்திக்கொண்டார்.

இந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்தாற்போல் மற்றொன்று நிகழ்ந்தது; வண்டியில் ஒருவன் சோடா கிரஷ் கொண்டு வந்து விற்றான். அறவணன் ஒரு சோடா கேட்டார். 'பத்துக்காசு சில்லறையாக இருக்கிறதா?' என்று சோடாக்

காரன் கேட்டான். 'இல்லை, இருபத்தைந்து காசு (நான்கணா) திட்டாக இருக்கிறது' என்று அறவணன் சொன்னார். 'அப்படியென்றால் என்னிடம் ஐந்து காசுக்கு மேல் சில்லறை இல்லை' - என்று சொல்லிச் சோடாக்காரன் நழுவத் தொடங்கினான். உடனே அன்றில், 'இதோ என்னிடம் சில்லறை இருக்கிறது' என்று சொல்லி, பத்துக் காசை எடுத்துச் சோடாக்காரன் கையில் கொடுத்தாள். அவன் ஒரு சோடாவைத் திறந்து அன்றில் கையிலேயே கொடுத்துவிட்டான். அவள் அதை அறவணன் பக்கம் நீட்டினாள். அவர் வாங்காமல், 'நீங்கள் சாப்பிடுங்கள்' என்றார். 'எனக்கு வேண்டாம்' என்று அவள் அவர் பக்கத்தில் வைத்துவிட்டாள். அறவணன் அதைக் கையில் எடுத்துக்கொண்டு, 'இன்னொரு சோடா கொடு' என்று சோடாக்காரனிடம் கேட்டார். 'எனக்கு வேண்டவே வேண்டாம்' என்றாள் அன்றில். 'இருக்கட்டும் நீ கொடு' என்றார் அறவணன். சோடாக்காரன் இன்னொன்றை எடுத்துத் திறந்து அன்றில் கையில் கொடுத்தேவிட்டான் - அவளும் வாங்கிக் கொண்டாள். உடனே அறவணன், சோடாக்காரனிடம் முன்னமே இருந்த ஐந்து காசு, அன்றில் தந்த பத்துக்காசு - ஆகிய பதினைந்து காசுகளை வாங்கிக் கொண்டு, தன்னிடமிருந்த இருபத்தைந்து காசுத் திட்டை அவனிடம் கொடுத்தார். சோடா குடித்து முடிந்ததும், காலிப் புட்டிகளை வாங்கிக் கொண்டு அவன் அவ் விடத்தினின்றும் அகன்றான். அங்கிருந்த திருமணக் கூட்டத்தாருக்கு இதைக் கவனித்துக் கொண்டிருக்க நேரம் இல்லை. அடுத்த நிலையத்தில் இறங்குவதற்கு வேண்டிய ஆயத்தங்களை அவர்கள் செய்து கொண்டிருந்தார்கள். சோடா நிகழ்ச்சியின் பிறகு, அன்றிலுக்கும் அறவணனுக்கு மிடையே ஒருவகை அன்பு அரும்பத் தொடங்கியது.

புகைவண்டி சிங்கப்பெருமாள் கோயில் நிலையத்தில் போய் நின்றது. திருமணக்கூட்டம் இறங்கிக்கொண்டது.

அங்கே புதிதாக யார்யாரோ ஏறினர். தனக்கும் அன்றிலுக்கும் இடையே இப்போது நல்ல சூழ்நிலை உருவாகியிருப்பதால் அவளிடம் அறவணன் பேச்சுக்கொடுத்தார்:

''நீங்கள் திருச்சிக்குச் செல்கிறீர்களா?''

''ஆமாம்''

''திருச்சியே சொந்த ஊரா? அல்லது வேறு ஏதாவது...''

''திருச்சியே சொந்த ஊர்தான்.''

''திருச்சி நகரமா? அல்லது அதைச் சார்ந்த ஏதேனும், சிற்றூரா?''

''திருச்சி சந்திப்பை ஒட்டி எங்கள் இருப்பிடம் உள்ளது. நீங்களும் திருச்சிக்குத்தான் செல்கிறீர்களா?''

''ஆமாம்! நானும் உங்கள் ஊருக்குத்தான் வருகிறேன்''.

''அப்படியென்றால் உங்கள் சொந்த ஊர்...?''

''காரைக்குடி''

''காரைக்குடிக்குத் திருச்சி வழியாகத்தானே செல்ல வேண்டும்? இந்த வண்டியே நேராகக் காரைக்குடிக்குச் செல்லுமே! நீங்கள் திருச்சியில் இறங்க வேண்டியது கூடத் தேவையில்லையே!''

''உண்மைதான்! என்றாலும், எனக்குத் திருச்சியில் கொஞ்சம் வேலை இருப்பதால் ஒருநாள் தங்கிப்போவேன்'' என்று இருவரும் பேசிக்கொண்டே வந்தபோது, புகைவண்டி 12-20 மணிக்குச் செங்கல்பட்டு நிலையம் வந்து சேர்ந்தது, அங்கே இருபது நிமையம் நிற்கும்.

நண்பகல் உணவு கொள்ளவேண்டிய நேரம் இது. இந்தச் செங்கல்பட்டு சந்திப்பு நிலையத்தையும் - இந்த இருபது நிமைய இடைவெளி நேரத்தையும் தவறவிட்டால், உணவு கொள்ள வேறு வாய்ப்பே இல்லை. அதனால் அறவணன் சொன்னார்:

''போய்ச் சாப்பிட்டுவிட்டு வந்துவிடலாம் என்றெண்ணு கிறேன்''

''போய்ச் சாப்பிட்டு வாருங்கள்''

''நீங்கள் சாப்பிடவில்லையா?''

''ஆண்களைப்போல் இரைக்க இரைக்க ஓடி இரைக்க இரைக்கச் சாப்பிட்டு வர என்னால் முடியாது. அதனால், நான் சென்னையிலுள்ள பாட்டியின் வீட்டிலிருந்து புறப்படும் போதே என் பாட்டி உணவு தயாரித்துக் கொடுத்திருக் கிறாள். உங்களுக்குத் தடையில்லை என்றால் நீங்களும் உண்ணலாம்''

''இருக்கட்டும்; நான் போய் நிலைய உணவு விடுதியில் சாப்பிட்டு வந்து விடுகிறேன்'' என்று சொல்லி அறவணன் கீழே இறங்கிச் சென்றார்.

அன்றில் தான் கொண்டு வந்திருந்த உணவுப் பொட்டலத்தை எடுத்துப் பிரித்தும் பிரிக்காததுமாய் இருக்கும்போதே அறவணன் திரும்பி வந்து விட்டார்.

''அதற்குள்ளாகவா சாப்பிட்டு வந்து விட்டீர்கள்?'' என்று கேட்டாள்.

''ஆமாம்'' என்று அவர் பதில் சொன்னார்.

அவர் இன்னும் சாப்பிட்டிருக்க முடியாது என்பதை அவர் முகம் அவளுக்குத் தெரிவித்தது. அறவணன் வண்டிக்குள் வந்து எதையோ தேடிக் கொண்டிருந்தார்.

''என்ன தேடுகிறீர்கள்?'' என்று அன்றில் கேட்டாள்.

''என் பணப்பை காணவில்லை. நான் வண்டியை விட்டு இறங்கியபோது, எவனோ இடித்ததுபோல் தெரிந்தது. அவன்தான் பையை (மணிபர்ஸ்) அடித்துக் கொண்டு போயிருக்க வேண்டும்''

''அப்படியென்றால் நீங்கள் சாப்பிடவில்லையல்லவா?''

''ஆமாம். கட்டணம் செலுத்தி உணவுச்சீட்டு வாங்கு வதற்காகப் பணப்பையை எடுக்கப்போனபோது திருட்டுப் போனது தெரிய வந்தது. இங்கே தேடலாம் என்று வந்தேன் - இங்கேயும் கிடைக்கவில்லை. சரி, போனால் போகிறது - என்ன செய்வது!''

''அப்படியானால் நீங்களும் என்னுடன் சாப்பிடுங்கள். என் பாட்டி நிறைய உணவு வைத்திருக்கிறாள். முழுவதும் என்னால் சாப்பிட முடியாது. இது நம் இருவருக்கும் போதுமானது''

''வேண்டாம் வேண்டாம் - எனக்கு அவ்வளவாகப் பசியில்லை. நீங்கள் சாப்பிடுங்கள்''

''நீங்கள் கூச்சப்படுகிறீர்கள் என்று நினைக்கிறேன். அதற்குக் காரணமே இல்லை. நாம் இருவரும் ஒரு படிப்புப் படித்தவர்கள்-ஒரே வேலை பார்க்கத் தகுதி உடையவர்கள். நான் பெண்ணாயில்லாமல் உங்களைப் போலவே ஆணா யிருந்தால் நீங்கள் என்னுடன் நட்பு கொண்டு சாப்பிடுவீர்கள் அல்லவா? அவ்வாறே என்னை ஒரு நண்பன் எனக்கொண்டு சாப்பிடும்படி கேட்டுக்கொள்கிறேன். அப்புறம் உங்கள் விருப்பம்! மேற்கொண்டு உங்களை வற்புறுத்த நான் விரும்பவில்லை.''

''சரி கொஞ்சமாகக் கொடுங்கள்.''

உணவு முடிந்தது. பேச்சுத் தொடர்ந்தது. அறவணன் அன்றிலைக் கேட்டார்:-

''நீங்கள் எந்த ஊரில் எம்.ஏ. படித்தீர்கள்?''

''சென்னையில் எங்கள் பாட்டி வீடு இருப்பதால் அங்கே தங்கி, சென்னைக் கல்லூரியில் படித்தேன்.''

''நீங்கள் எந்த ஊரில்...?''

''நான் மதுரையில் படித்தேன். நீங்கள் இப்போது எந்தக் கல்லூரியிலாவது வேலை பார்க்கிறீர்களா?''

''ஊம் - திருச்சியில் வேலை பார்க்கிறேன். நீங்கள் _ ?''

''நான் காரைக்குடியில் வேலை பார்த்துக்கொண்டிருக் கிறேன். நேற்றுச் சென்னைக் கல்லூரிக்குச் சென்று வந்தோமே - அந்த வேலை உங்களுக்குக் கிடைக்கலாமென்று நம்புகிறீர்களா?''

''அது எனக்குக் கிடைக்கும் என்று எப்படி நம்ப முடியும்? உங்களுக்குக் கிடைத்தாலும் கிடைக்கலாம்.''

''இல்லை; உங்களுக்குக் கிடைக்கலாம் என்றே எண்ணுகிறேன்.''

''யாருக்குக் கிடைக்கிறதோ — பொறுத்திருந்து பார்ப்போமே!''

இப்படியாகச் சிறிது நேரம் பேச்சு நிகழும். பின்னர் நெடுநேரம் பேச்சின்றி அமைதி நிலவும். மீண்டும் சிறிது நேரம் பேச்சு கிளைக்கும்.

பிற்பகல் 4-28 மணிக்கு வண்டி விழுப்புரம் சந்திப்பில் வந்து நின்றது. சிற்றுண்டி - தேநீர் அருந்த வேண்டிய நேரமும் இது-இடமும் இது. அங்கே வண்டி இருபத்திரண்டு நிமைய நேரம் நிற்கும். ஆதலால், இதைவிட்டால் வேறு வாய்ப்பில்லை. நண்பகல் பன்னிரண்டரை மணிக்குச் செங்கல்பட்டில் சாப்பிட வேண்டுமென்று இறக்கை கட்டிப் பறந்த அறவணன், இப்போது சிற்றுண்டி அருந்தவேண்டு மென்ற உணர்வேயில்லாமல் அசைவற்றுக் காணப்பட்டார். அவருக்குத்தான் இறக்கை ஒடிந்துவிட்டதே - பணம் களவு போய்விட்டதே. எப்படி சிற்றுண்டி சாப்பிடுவது? செங்கல் பட்டில் ஒருவர் உணவை இருவர் பகிர்ந்து கொண்டதால் பசியும் கடுமையாக வேலை செய்கிறது. என்ன செய்வது?

எதிரேயிருந்த சிற்றுண்டிக் கடையில் சிலர் உண்டு கொண்டிருந்ததை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது அவரை நோக்கி, உண்மையாகவே பசி உணர்வு கொண்டிருந்த அன்றில் கூறினாள்:-

''இங்கே சிற்றுண்டி அருந்தி விடலாமே! இதை விட்டால், வேறு இடமோ - நேரமோ இல்லையே!''

''நீங்கள் சாப்பிடுங்கள்! எனக்குப் பசியில்லை. அதோடு, இடைவேளையில் சிற்றுண்டியருந்தும் வழக்கமும் எனக் கில்லை. எனவே நீங்கள் போய்ச் சாப்பிட்டுவிட்டு வரலாம்''.

''ஏன், நீங்களும் சாப்பிடலாமே?''

''இல்லையில்லை; எனக்கு வேண்டாம். நீங்கள் சீக்கிரம் போய்ச் சாப்பிடுங்கள்''.

''கடையில் இருக்கும் கும்பலையும் பரபரப்பையும் பார்த்தால் என்னால் போய்ச் சாப்பிட முடியாதுபோல் தெரிகிறது. அதனால் எனக்கும் ஒன்றும் வேண்டாம்''.

''அப்படியானால் நீங்கள் இறங்கிப் போக வேண்டிய தில்லை. உங்களுக்கு நான் வாங்கி வந்து தருகிறேன்''.

''அப்படியே செய்யுங்கள்''.

''உங்களுக்கு என்னென்ன வாங்கிவர வேண்டும்''.

''எனக்குப் பசியும் தாகமும் அதிகமாயிருப்பதால், இரண்டு இனிப்பு, இரண்டு வடை, இரண்டு உப்புமா, இரண்டு அளவு தேநீர் வாங்கிக்கொண்டு வாருங்கள்'' என்று சொல்லி அன்றில் அறவாணனிடம் பணம் கொடுத்தாள். அவர் அவற்றை வாங்கிவந்து அவளிடம் கொடுத்து விட்டு அமர்ந்து கொண்டார். இரண்டிரண்டு வாங்கி வரச் சொன்ன போதே, தனக்கு ஒவ்வொன்று தந்து உண்ணும்படி வற்புறுத்துவாள் என்று அறவாணன் புரிந்து

கொண்டார். அவ்வாறே நடந்தது. அவரால் மறுக்க முடியவில்லை. மறுத்தால், மதிப்பு அறியாதவன் என்றும் ஒரு காட்டுப் பூச்சி என்றும் தன்னை அவள் நினைத்துக் கொண்டால் என்ன செய்வது? அன்றில் எப்போதும் பயணம் செய்யும்போது இடை வழியில் இடைவேளையில் சிற்றுண்டி யருந்தும் வழக்கம் வைத்துக் கொள்வதில்லை என்பதும். தன்னிடம் பணம் இல்லாமையை அறிந்து இரக்கப்பட்டுத் தனக்காகவே அவள் இப்போது சிற்றுண்டி அரங்கம் (பலகாரக் கச்சேரி) நடத்தினாள் என்பதும் அறவணனுக்கு எப்படித் தெரியும்?.

சிற்றுண்டி விருந்து சிறப்பாக நடந்தேறியது. நண் பகலில் உணவு பற்றாக்குறையால் துண்டு விழுந்த இடத்தை இப்போது இனிப்பும் காரமும் தேநீரும் நிரப்பிவிட்டன. அறவணனுக்கு வயிறு நிறைந்தும், இப்படி ஒரு நிலைமை நேர்ந்தது குறித்து மனம் நிறையவில்லை; இதற்கு முன் பழகியறியாத ஒரு புதுப்பெண்ணிடம் உணவு பெற்று உண்ண வேண்டி வந்ததே என உள்ளுக்குள் புழுங்கிப் பொருமினார். அந்த உள்ளத்தின் புழுக்கத்தை அவரது முகத்தைக் கொண்டு குறிப்பாய் - நுட்பமாய்ப் புரிந்து கொண்ட அன்றில், தன் கொவ்வைச் செவ்வாயின் குமிண் சிரிப்பினாலும், குவளைக் கண்களின் குறுகுறு பார்வை யாலும், குனித்த புருவங்களின் கோணல்மாணல்களாலும், மலர்ந்த முகத்தின் மகிழொளியாலும் அறவணனுக்கு ஆறுதல் அளித்தாள்.

வண்டி விழுப்புரத்தைக் கடந்து ஓடிக்கொண்டிருந்தது. அன்றிலின் எண்ணமெல்லாம் அடுத்து அறவணனுக்கு ஆக வேண்டியதைக் கவனிப்பதிலேயே இருந்தது. அவர்மேல் அவளுக்குக் காதலோ - கனிவோ இருப்பதாக எவரும் சொல்லாவிடினும், இரண்டு பெண்களுக்கிடையே - அல்லது

இரண்டு ஆண்களுக்கிடையே இருப்பது போன்ற ஒருவகை நட்புணர்வு அவளிடம் காணப்பட்டது என்பதை யாரும் மறுக்க முடியாது.

''நம்மைப் போலவே அவரும் படித்தவர் - நம்மைப் போலவே அவரும் ஒரு கல்லூரியில் விரிவுரையாளராகப் பணி புரிகிறார். மூன்று நாளாக அறிமுகம் ஆகிவிட்டார். இருவரும் ஒரே வண்டியில் - ஒரே பெட்டியில் பயணஞ் செய்து, ஒரே கல்லூரிக்குச் சென்று, ஒரே வண்டியின் ஒரே பெட்டியில் திரும்பிக் கொண்டிருக்கிறோம். இந்த நிலையில் அவர் பணப்பையைத் தொலைத்து விட்டார்; உணவுக்குக்கூட வழியில்லாது திண்டாடுகிறார். அவர் இரவு சாப்பிட்டாக வேண்டும்-திருச்சியில் தங்கி ஏதோ வேலையைக் கவனிக்க வேண்டும் - பின்பு பயணச்சீட்டு (டிக்கட்) எடுத்துக் கொண்டு காரைக்குடிக்குச் செல்ல வேண்டும்-இவ்வளவுக்கும் அவர் பணத்துக்கு எங்கே பேவார்? கூச்சப்பட்டவர்போல் தோன்றும் அவர் வாயைத் திறந்து யாரிடம் பணம் கேட்பார்? அவரை நாம்தான் கவனிக்க வேண்டும். பெண் களுக்கு இருக்கவேண்டும் என்று பெரியவர்கள் கூறியுள்ள அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகியவற்றை நாம் பார்த்துக்கொண்டிருந்தால் ஒன்றும் நடக்காது. நம்மைப் பற்றி யார் என்ன எண்ணிக் கொண்டாலும் சரி - அல்லது அறவணனே நம்மைத் தவறாகப் புரிந்துகொண்டாலும் சரி - கவலையில்லை. மனிதருக்கு மனிதர் என்ற முறையில் - அதிலும் படித்த பெண்ணாகிய நாம் நமது கடமையைச் செய்தேயாக வேண்டும்'' - என்றெல்லாம் அன்றில் எண்ணிக்கொண்டு வந்தாள்.

மாலை 6-23 மணிக்கு வண்டி விருத்தாசலம் சந்திப்பு வந்து சேர்ந்தது. அங்கே எட்டு நிமைய நேரம் நிற்கும். இந்த வண்டி இரவு 10-40 மணிக்குத் தான் திருச்சி சேரும் ஆதலாலும், இடையில் வேறு வசதியின்மையாலும், இரவு

உணவுக்காகச் சிற்றுண்டிகள் சிலவற்றை விருத்தாசலம் சந்திப்பிலேயே அன்றில் வாங்கி வைத்துக் கொண்டாள். அவள் வீட்டிற்குச் சென்று இரவு பதினொரு மணிக்குமேல் கூடச் சாப்பிடலாம்-திரைப்படம் பார்த்து விட்டு வந்து சாப்பிடவில்லையா? - மேலும் அவள் இந்த வண்டியில் வந்து விடுவாள் என்பதும் வீட்டாருக்குத் தெரியும். ஆனால் அறவணனுக்காகவே அவள் சிற்றுண்டி ஏற்பாடு செய்து வைத்துக் கொண்டாள்.

எட்டுமணியளவில், வண்டியை விட்டு இறங்கத் தேவை யில்லாமலேயே இரவு உணவு முடிந்தது. அறவணனுக்கு எப்படியாவது ஏதாவது கொஞ்சம் பணம் கொடுத்தனுப்ப வேண்டும் என அன்றில் முயன்றாள். அதற்கேற்றவாறு பேச்சைத் தொடர்ந்தாள்:-

''நீங்கள் இன்றிரவு திருச்சியில் எங்கே போய்த் தங்குவீர்கள்?''

''எங்கேயாவது பார்த்துத் தங்க வேண்டியதுதான்''.

''திருச்சியில் தங்கியிருக்கும்போது வேண்டிய செலவிற் கும், பிறகு காரைக்குடி போக வண்டிச் செலவிற்கும் பணத்திற்கு என்ன செய்வீர்கள்?''

''தெரிந்தவர் யாரையாவது பார்த்துக் கேட்க வேண்டியது தான்''.

''நான் கொஞ்சம் பணம் தருகிறேன் தயை செய்து மறுக்காமல் பெற்றுக்கொள்ளுங்களேன்.''

''உங்கள் உதவி மனப்பான்மைக்காக மிகவும் நன்றி! தயை செய்து என்னை மன்னிக்கவேண்டும். எனக்காக நீங்கள் கவலைப்படவேண்டாம். திருச்சி சந்திப்பில் உறவினர் ஒருவர் இருக்கிறார். அவரிடம் நான் வேண்டியதை வாங்கிக்

கொள்வேன். நீங்கள் எனக்கு மூன்று வேளை உணவு கொடுத்ததே போதும் அந்த உதவியை என்றும் மறவேன். அதற்கு எவ்வாறு கைம்மாறு புரிவதென்று எனக்கு ஒன்றும் புரியவில்லை. தயைசெய்து என் வேண்டுகோள் ஒன்றை நீங்கள் மறுக்கக்கூடாது.''

''என்ன அது?''

''நான் சென்னையில் 'பிரெஞ்சு ஆசான்' என்னும் புத்தகம் இரண்டு படிகள் வாங்கினேன்; எனக்கு ஒன்று-என் நண்பர் ஒருவருக்கு ஒன்று. எனவே, அவற்றுள் ஒன்றைத் தங்களுக்கு என் அன்பளிப்பாக வழங்க விரும்புகின்றேன். அந்தப் புத்தகத்தின் துணை கொண்டு நாம் பிரெஞ்சு மொழி கற்றுக்கொள்ளலாம். பிரெஞ்சு, ஆங்கிலத்திற்கு அடுத்தபடியாக ஓர் உயர்ந்த உலகமொழி யல்லவா? எனவே, தயைசெய்து தாங்கள் தட்டாது பெற்றுக் கொள்ள வேண்டும்.''

''உங்கள் அன்புக்கு மிகவும் நன்றி! நான் எவரிடத்தும் எப்போதும் எதுவும் பெற்றுக்கொண்டதில்லை. ஆயினும் உங்களிடத்தில் அதனைப் பெற்றுக்கொள்ளத் தடையில்லை. ஆனால் நானும் அந்தப் புத்தகத்தை நேற்றுச்சென்னையில் வாங்கிவிட்டேனே. அதனால். உங்கள் நண்பருக்கே நீங்கள் அந்தப் புத்தகத்தை அன்பளிப்பு செய்யலாம். தயைசெய்து என்னை மன்னிக்கவேண்டும்.

சரி நல்லது, அப்படியே செய்கிறேன். இரவு எங்கே தங்குவேன்-பணத்துக்கு என்ன செய்வேன் என்று என்னைப் பற்றி நீங்கள் இவ்வளவு அக்கறை எடுத்துக்கொண்டீர் களே! ஆனால் நான் உங்களைப் பற்றி ஒன்றும் அக்கறை எடுத்துக் கொள்ளவில்லையே.''

'இரவு' பதினொரு மணிக்கு நீங்கள் புகைவண்டி நிலையத்திலிருந்து தனியாக எப்படி வீட்டிற்குப்போவீர்கள்?'

ஓ அதுவா! அதைப் பற்றிய கவலை எனக்கில்லை. என் தந்தையார் கோவை சென்றுள்ளார். ஊர் திரும்பிவிட்டிருந்தால் அவர் வருவார்-இல்லாவிடின் வேறு யாராவது புகைவண்டி நிலையத்திற்கு வந்திருப்பார்கள்.''

''நீங்கள் இந்த வண்டிக்கு வருவது அவர்களுக்கு எப்படி தெரியும்?''

''நான் வீட்டிலிருந்து முந்தாநாள் புறப்பட்ட போதே, இன்றைக்கு இந்த வண்டியில் வந்துவிடுவதாகச் சொல்லிப் புறப்பட்டேன். என் தாயாருக்கு உடல் நலம் இல்லாததால், சென்னையில் வேலை முடிந்ததும் மறுநாளே புறப்பட்டு வரவேண்டும் என்று சொல்லியனுப்பினார்கள். இல்லாவிடின், இப்போது கோடை விடுமுறையாயிருப்பதற்கு, இன்னும் சில நாட்கள் சென்னையில் தங்கிவருவேன்'', என்று சொல்லி, முகம் தூய்மை செய்து வருவதற்காக, அந்த வண்டிப் பெட்டியின் மற்றொரு பகுதிக்கு அன்றில் சென்றாள். அறவணனுக்கு மனம் ஒன்றும் சரியில்லை; தன்னை ஒரு பிச்சைக்காரன் போல் எண்ணித் தனக்குத் தானே வெட்கி உள்ளங் கூசி உடல் குன்றினார். அன்றிலிடம் உணவு வாங்கி உண்டது அவரது உயிரை வாள்போல் ஈர்த்தது. அதற்காக ஏதேனும் ஒரு கைம்மாறு செய்து விடவேண்டும் என்று துடித்தார். அவளிடம் உணவு வாங்கி உண்டதுங்கூட, பிறகு ஏதேனும் ஒரு பதில் உதவி செய்துவிடலாம் என்ற நம்பிக்கையால்தான்! ஆனால் அவளோ, கொடுத்த புத்தகத்தை எடுத்துக் கொள்ளாது மறுத்துவிட்டாள். இப்போது என்ன செய்வது!

எப்போதும் அறவணன் ஒருவரிடம் ஓர் உதவி பெற்றால் திரும்ப அவருக்குப் பதிலுதவி செய்வதற்குரிய காலத்தை எதிர்நோக்கிக் காத்திருப்பார்; வாய்ப்பு வந்தபோது அவ்வுதவியைச் செய்துவிட்டுத் தான் மறுவேலை

பார்ப்பார். இல்லாவிட்டால் அவருக்குத் தலைவெடித்து விடும்!

இவ்வாறு பதிலுதவி செய்யவேண்டியது தேவை தானா? – கட்டாயந்தானா? அப்படியென்றால் உலகத்தில் அன்பு என ஒன்றுமே கிடையாதா? பண்பு என எதுவுமே இல்லையா? பதிலுதவி செய்வது என்பது, ஒன்று கொடுத்து ஒன்று வாங்கும் ஒருவகைப் பண்டமாற்று வாணிகம் அல்லவா? உலகம் இப்படியே போய்க்கொண்டிருந்தால், உயிர்களுக்குள் உறவு–ஒற்றுமை - ஒப்புரவு என ஒன்றுமே இல்லையா? எல்லாம் எழுத்தாளர்களின் ஏட்டோடு சரியா? கவிஞர்களின் கற்பனைக் கனவோடு முடிந்துவிட்டனவா? இவையெல்லாம் அறவணனுக்கு ஏன் தெரியவில்லை?

தெரியும்·அறவணனுக்கு நன்றாகத் தெரியும். இந்தத் துறையில் அவர் இதற்கு முன்பே கொட்டுப்பட்டிருக்கிறார். தான் விரும்பாமல் இருந்தும், தற்செயலாகத் தனக்கு வேண்டாத-தேவையில்லாத உதவியைச் செய்த சிலர், தன்னைப் பற்றி என்ன எண்ணுகிறார்கள் - தன்னை எப்படி நடத்துகிறார்கள் – என்பதை அவர் நன்றாக அறிந்து வைத்திருக்கிறார்.

ஒருவன் நமக்கு மூன்று காசுக்கு மோர் வாங்கிக் கொடுத்துவிட்டால், ஏதோ இமயமலையையே நமக்கு எழுதி வைத்து விட்டதாக நினைக்கிறான். அவன் எண்ணுகிறபடி யெல்லாம் நாம் இயங்க வேண்டும் — ஏன் - மூன்று காசுக்கு மோர் வாங்கிக் கொடுத்து விட்டானே? அவன் சொல்வனவெல்லாம் கேட்க வேண்டும் — ஏன் — மூன்று காசுக்கு மோர் வாங்கிக் கொடுத்து விட்டானே! அவன் செய்கின்றவற்றையெல்லாம் பாராட்ட வேண்டும் - ஏன்-மூன்று காசுக்கு மோர் வாங்கிக் கொடுத்து விட்டானே! பொய்ச் சான்று சொல்லச் சொன்னால் சொல்ல வேண்டும்-

தகாத செயல் செய்யச் சொன்னால் செய்ய வேண்டும். மூன்று காசுக்கு மோர் வாங்கிக் கொடுத்த மூன்றாவது மணி நேரமே பதில் உதவிக்கு வந்து விடுவான். நாம் செய்ய வில்லையென்றால், செய்ந்நன்றி கொன்ற சிறுநரி-நன்றி மறந்த நாய் என்றெல்லாம் பட்டங்கள் பல சூட்டிவிடுவான். அவன் சொல்வதற்கேற்ப, நன்றி மறந்த நயவஞ்சகர்களும் இருக்கத்தானே செய்கின்றார்கள். எனவே, அவன் மூன்று காசுக்கு மோர் வாங்கிக் கொடுத்திருந்தால், நாமும் மூன்று ஒன்பது காசுக்கு மோர் வாங்கி, அவன் வேண்டாமென மறுத்தாலும். அவன் வாயில் குழாய் வைத்தாவது வயிற்றில் ஊற்றிவிட வேண்டும். இல்லாவிடின், அவன் நம்மை நினைக்கும் போதெல்லாம் மூன்று காசு மோரையும் நினைப்பான்-நம்மைக் காணும்போதெல்லாம், மூன்று காசு மோர் எனப் பெரிய எழுத்தில் எழுதி நம் நெற்றியில் ஒட்டி யிருப்பதாக அவன் கண்களுக்குத் தெரியும் - நம்மோடு பேசும் போதெல்லாம், அவன் வாய் மூன்று காசு மோரைப் பற்றி முணுமுணுத்துக் கொண்டிருக்கும். அவன் மட்டுமல்ல-அவன் உறவினரும் பங்குக்கு வருவர். ''இவன் நம் அண்ணனிடம் மூன்று காசு மோர் குடித்தவன் – அவன் நம் தம்பியிடம் மூன்று காசு மோர் குடித்தவன் - இவன் நம் மாமாவிடம் மூன்று காசு மோர் குடித்தவன் - அவன் நம் மைத்துனனிடம் மூன்று காசு மோர் குடித்தவன்'' — என்று அவன் பங்காளி களும் சம்பந்திகளுங்கூட நம் தலையை உருட்டுவார்கள். அவனிடம் மூன்று காசு மோர் வாங்கிக் குடித்ததற்காக,அவன் உறவினர்க்கும் நாம் நல்லவராய் - நன்றி உடையவராய் நடந்து கொள்ளவேண்டும். அவர்கள் ஏசினாலும் பேசினாலும் கேட்டுக்கொள்ள வேண்டும் - அவர்களையும் திருப்திபடுத்த வேண்டும். எல்லாம் மூன்று காசு மோர் செய்யும் வேலை.

அம்மம்மா! மூன்று காசு மோருக்கே இந்தப் பாடு என்றால், இன்னும் பெரிய உதவியாயிருந்தால் என்ன பாடோ? நாம் வேண்டாம் என மறுத்தும் நமக்குத் தேவையில்லாதிருந்தும் அவனாக வலிய வந்து செய்த சிறு உதவிக்கே இவ்வளவு கடமைப்பட்டிருக்கிறோம் என்றால், நாமாகக் கெஞ்சி, ஒரு நடைக்கு ஒன்பது நடை அவன் வீட்டிற்குக்காவடி எடுத்து, ஆடிப்பாடி, குழைந்து கும்பிட்டுப் பெற்ற பெரிய உதவிக்கு எவ்வளவோ கடமைப்பட்டிருக் கிறோமே!

பிறரைச் சொல்வது ஏன்? நம் பெற்றோரே-நமக்குத் தெரியாமல் நாம் விரும்பாமல் தாங்களாகவே நம்மைப் பெற்ற நம் பெற்றோரே-வலியப் பெற்ற காரணத்திற்காகப் பேணி வளர்க்கக் கடமைப்பட்டுள்ள நம் பெற்றோரே தாங்கள் செய்த உதவியை நம்மிடம் சொல்லிக்காட்டு கிறார்களே! ''உன்னை அப்படி வளர்த்தேனடா-இப்படி வளர்த்தேனடா! உனக்கு அவ்வளவு செய்தேனடி-இவ்வளவு செய்தேனடி!'' என்று பெற்றோரே பிள்ளைகளை ஏசிப்பேசி இடித்துக்காட்டுகின்றார்களே! அப்பப்பா, ஒருவரிடம் உதவி பெறுவது மிகக் கொடிது? அந்த உதவியைத் திரும்பச் செய்யாதது அதனினும் மிக மிகக் கொடிது கொடிது!

எனவே, இவற்றை யெல்லாம் முன் கூட்டியே பட்டறிந்து வைத்திருந்த அறவணன், தான் அன்றிலிடம் பெற்ற உதவிக்குப் பதிலுதவி செய்துவிடவேண்டும் என்று துடியாய்த் துடித்ததில் வியப்பென்ன? அந்த உதவி எந்த உருவத்தில் இருப்பது? உணவுக்காகச் செலவிட்டிருக்கும் மூன்று அல்லது மூன்றரை ரூபாயை அஞ்சல் (மணியார்டர்) மூலம் அனுப்புவது அழகன்று-அது மதிப்புமாகாது. ஒரு படித்த பெண்ணுக்குப் புத்தகத்தைவிட வேறு பொருள் கொடுப்பதும் பொருந்தாது-முறையாகாது. கொடுக்கும் புத்தகத்தையோ பெற மறுக்கிறார் - என்ன செய்யலாம்?

அறவணன் அதற்கு ஒரு வழி கண்டுபிடித்து விட்டார்: அன்றில் முகம் தூய்மை செய்து வர எழுந்து சென்றிருந்த போது, அவளது கைப்பை ஒன்றில் அந்தப் புத்தகத்தை அவள் அறியாதபடி வைத்துவிட்டார். ஒருவரிடம் உணவு வாங்கி உண்டதனால் ஏற்பட்ட கறையைக் கழுவிவிட்டோம் என்று பெருமூச்சு விட்டார். இப்பொழுது தான் பழைய அறவணனாக-முழு அறவணனாக ஆனதாக அவருக்குப் பட்டது.

'பிரெஞ்சு ஆசான்' என்னும் புத்தகம் இரண்டு வாங்கினதாக அறவணன் சொன்னது முழுப்பொய். அவர் ஒன்றுதான் வாங்கியிருந்தார். 'உங்களுக்கு வேண்டுமே' என்று அன்றில் மறுத்துவிட்டால் என்ன செய்வதென்று கருதியே, இரண்டு வாங்கினதாகப் புளுகிவைத்தார். தன்னிடம் பெற்ற உதவிக்கு ஈடாக அதாவது உணவின் விலையாக இந்தப் புத்தகத்தைக் கொடுக்க இவர் முயலு கிறார் என்பதை நன்றாகப் புரிந்து கொண்ட அன்றில் அறவணனுக்கு மேல் ஓர் அண்டப் புளுகு புளுகியிருக்கிறாள். அதாவது, தானும் அப்படி ஒரு புத்தகம் சென்னையில் வாங்கியிருப்பதாக அன்றில் சொன்னது திடீர்ப் புளுகுதான். அவள் அப்படியொன்றும் வாங்கியிருக்க முடியாது. தன் பதிலுதவியைத் தட்டிக்கழிக்கவே அவள் அப்படிப் பொய் கூறியுள்ளாள் என்று அறவணன் புரிந்து கொண்டுதான், அவளறியாமல் அந்தப் புத்தகத்தை அவள் பைக்குள் வைத்து விட்டார்.

அறவணனும் அன்றிலும் உரையாடிக் கொண்டும்-உறவாடிக்கொண்டும் வந்ததைப் பக்கத்திலும் எதிரிலும் அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்தவர்கள் அவர்களைப் பற்றிப் பலவிதமாக எண்ணினர். கணவன் மனைவி எனச் சிலர் எண்ணினர். காதலர்கள் என மற்றுஞ் சிலர் கருதினர். இப்போது தான் இங்கே தான் காதல் பிறக்கிறது என ஒரு

சிலர் நினைத்தார்கள். ''இவர்களுக்கு வெட்கமில்லையா -. இவர்கள் உடம்பில் சூடுசுரணை ஒன்றும் இல்லையா? பலர் முன்பா காதலைக் காட்ட வேண்டும்?' என்று எள்ளி ஏளனஞ் செய்தனர் ஒருசாரார். இடையிடையே ஏறி இறங்கிக்கொண்டிருக்கும் இந்த மக்கள் என்ன எண்ணிக் கொள்வார்களோ என்று - களங்க மற்ற அன்றிலும் அறவணனும் கவலைப்படாமலும் இல்லை-கலங்கத்தான் செய்தனர்.

புகைவண்டி பொன்மலை நிலையத்தைத் தாண்டித் திருச்சிராப்பள்ளி சந்திப்பை நோக்கி ஓடிக்கொண்டிருந்தது. இன்னும் சிறிது நேரத்தில் இருவரும் பிரியப் போகின்றனர். அறவணன் அன்றிலுக்குத் தன் இறுதி நன்றியைத் தெரிவித்துக்கொள்ளலானார்:-

''இடைவழியில் பணத்தைத் தொலைத்து விட்ட நான், நீங்கள் இல்லாவிட்டால் பட்டினி கிடந்திருப்பேன். நீங்கள் செய்த நன்றியை என்றும் மறவேன். தயை செய்து உங்கள் முகவரியைச் சொல்லுங்கள்-ஊர்போய்ச் சேர்ந்ததும் உங்களுக்குக் கடிதம் எழுதவேண்டும்.''

''என் முகவரி எதற்கு? கடிதம் எதற்கு? உதவி உபகாரம் நன்றி எல்லாம் இதோடு இருக்கட்டும். நான் உங்களுக்கு ஒன்றும் பெரிய உதவி செய்துவிட வில்லையே. நீங்கள் ஏன் வீணாய்த் தொல்லைப்படுகிறீர்கள்?''

''உதவி செய்தவர்களை மறக்க முடியுமா? கடிதம் எழுதாமல் இருக்க முடியுமா?''

''தயை செய்து மறந்து விடுங்கள்! கடிதத் தொடர்பு ஒன்றும் வேண்டாம்!''

''மன்னிக்க வேண்டும்! நீங்கள் என்னைத் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறீர்கள் என்று எண்ணுகிறேன்''

''நீங்கள் தான் என்னை மன்னிக்கவேண்டும், நீங்கள் எனக்குக் கடிதம் எழுதினால் அதனை எங்கள் வீட்டில் உள்ளவர்கள் பார்த்து விட்டால், அவர்கள் என்னைத் தவறாகப் புரிந்து கொள்வார்கள் அல்லவா?''

''உண்மைதான்! நான் பெரிய தவறு செய்ய இருந்தேன் – மன்னித்து விடுங்கள். கடிதம் எதுவும் எழுத மாட்டேன், உங்களை மறந்து விடுகிறேன்.''

என்று பேசிக்கொண்டிருந்தபோதே, இரவு 10–40 மணிக்குப் புகைவண்டி திருச்சிராப் பள்ளி சந்திப்பில் வந்து நின்றது.

''போய் வருகிறேன்''

''போய் வாருங்கள்! நானும் போய் வருகிறேன்''.

''போய் வாருங்கள்''

என்று விடைபெற்றுக் கொண்டு அறவணனும் அன்றிலும் பிரிந்தார்கள். தன்னை வரவேற்று அழைத்துப் போக, நிலையத்திற்கு வந்திருந்த தந்தையாரோடு சேர்ந்து கொண்டு அன்றில் நடந்துகொண்டிருந்தாள். அறவணனோ, சட்டைப்பையில் வைத்திருந்த பயணச் சீட்டைக் (டிக்கட்) கையில் எடுத்து வைத்துக்கொண்டு பணம் போனாலும் இதுவாவது தப்பிப் பிழைத்ததே என்றெண்ணியபடி நடந்து கொண்டிருந்தார். ஒருவர்க் கொருவர் உருவம் மறையும் வரையிலும் அன்றிலும் அறவணனும் திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்றார்கள். யாரையம்மா பார்க்கிறாய்? என்று அன்றிலின் தந்தை மாசிலாமணி கேட்டார். 'யாரையும் இல்லையப்பா?' என்று சொல்லிவிட்டு ஒரு முறை அன்றில் திரும்பிப் பார்த்தாள். அப்போது அறவணன் உருவம் தெரியவேயில்லை.

# 5

நள்ளிரவு ஒரு மணிக்குமேலும் புகைவண்டி ஓடிக்கொண்டிருக்கிறது. அதில் அன்றிலும் அறவணனும் பயணஞ் செய்து கொண்டிருக்கின்றனர். அன்றில் உணவு அளிக்க அறவணன் உண்ணுகிறார். இருவரும் ஏதோ பேசிக்கொண்டிருக்கின்றனர். மீண்டும் வண்டி ஓடுகிறது. அன்றில் உணவு அளிக்கிறாள்-அறவணன் உண்ணுகிறார். மீண்டும் மீண்டும் புகைவண்டி ஓடிக்கொண்டேயிருக்கிறது — அன்றில் உணவளித்துக் கொண்டேயிருக்கிறாள் - அறவணன் உண்டு கொண்டேயிருக்கிறார். இரவில் எத்தனை மணிக்கு மேல் அன்றில் உணவு கொடுப்பது! எத்தனை மணிக்கு மேல் அறவணன் உண்ணுவது! இரவில் எத்தனை முறை அன்றில் உணவு கொடுப்பது! எத்தனை முறை அறவணன் உண்பது! இது நடக்கக் கூடியதா?

ஆம், நடந்தது! அன்றிலின் வீட்டில் அவள் படுக்கையறையில் அவளது கற்பனைக் கண் முன்பு, புகைவண்டி ஓடிக் கொண்டேயிருக்கிறது. அவள் உணவு படைத்துக் கொண்டேயிருக்கிறாள். அறவணன் உண்டு கொண்டேயிருக்கிறார். இருவரும் ஏதேதோ பேசியபடியிருக்கிறார்கள்.

அன்றிலுக்கு உறக்கம் கொள்ளவில்லை. அன்று புகைவண்டியில் நடந்த நிகழ்ச்சிகள் யாவும் மாறி மாறி அவளுக்குத் திரைப்படம் காட்டிக் கொண்டிருந்தன.

அன்றில் தன் அப்பா, அண்ணன் ஆகியவரைத் தவிர்த்து வேறு எந்த ஆடவரோடும் நெருங்கிப் பழகியதில்லை. அவள் மிகவும் கூச்சப்பட்டவள்-நாணங் கொண்டவள். எம்.ஏ படித்துவிட்டு ஒரு கல்லூரியில் வேலை பார்த்துக் கொண்டிருக்கும் அவள், சில சமயம் ஆடவர் கூட்டத்துள் அகப்பட்டுக் கொள்வாள். தொழில் முறையாலும், கலைகல்வி-

மொழி இலக்கியம் இவற்றின் பேராலும் அப்படியொரு நெருக்கடி அடிக்கடி நேர்வதுண்டு. அந்த நேரத்திலுங் கூட அவள் விலகியே நிற்பாள்; கேட்ட வரையிலும் பதில் சொல்வாள். தேவையில்லாமலேயே வலிய வந்து பேச்சுக் கொடுத்து வம்புக் கிழுக்கும் ஆடவர் சிலரின் தீய குறிப்பைப் புரிந்து கொண்டு அவர்களைப் பொருட்படுத்தாது புறக்க ணித்து விடுவாள். அதனால் அவள்மேல் கடுப்புக் கொண்ட குறும்புக்கார இளைஞர்கள், 'இவள் என்ன பேசா மடந்தையோ? ஆண்வாடையே படாதவளோ? ஆயிரம் தலைவாங்கி அபூர்வ சிந்தாமணியோ' என்று கிண்டல் செய்வதுண்டு. அதற்காகக் கவலைப்படுவதில்லை. ஆடவ ரோடு ஆடவர்போல் அணுகிநின்று சிரித்துப் பேசி மகிழும் சில இளம் பெண்களின் போக்கைக் கண்டு அவள் அரு வருப்பு கொள்வாள்-அவர்தம் அறியாமைக்கு அஞ்சுவாள்-அவர்தம் துணிவைப் பாராட்டாது இரக்கப்படுவாள். ஒரு கட்டிளங் கன்னியும் காளையும் என்னதான் கள்ளங் கபடின்றிப் பழகினாலும், அது நாளடைவில் அணு அணுவாய் உருமாறி 'அங்கேதான்' போய் நிற்கும் என்பது அன்றிலின் எண்ணம் போலும்,

இவ்வளவு விழிப்பாய் இருந்து வந்த அன்றில், இன்று ஓர் அயல் ஆடவரோடு நெருங்கிப் பழகிவிட்டாள். அவள் விரும்பவில்லைதான்-எதிர் பார்க்கவில்லை தான்- ஆனால் அப்படியொரு நிலைமை நேர்ந்து விட்டது. அறவணன் அருகில் இருந்தபோது, அவரைக் காதலராக-கணவராக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற எண்ணமே அன்றிலுக்கு எழவில்லை. மனிதருக்கு மனிதர்-படித்தவருக்குப் படித்த வர்-கல்லூரி விரிவுரையாளருக்கு விரிவுரையாளர் செய்ய வேண்டிய கடமை என எண்ணியே அவள் அவருக்கு உதவி செய்தாள். அஃதன்றி, காதலோ - காமமோ ஒன்றுமில்லை. ஆனால் அவரைப் பிரிந்த பின்பு, அவளது

எண்ணம் முழுவதும் அவரையே மையமாக வைத்துச் சுற்றிச் சுழன்று கொண்டிருந்தது. அவளுக்கு இது முற்றிலும் - நூற்றுக்கு நூறு புது அனுபவமே.

எப்போதும் உள்ள வீட்டில்தான் இப்போதும் இருக்கிறாள் - எப்போதும் உள்ள பெற்றோருடன்தான் இப்போதும் இருக்கிறாள். ஆனால் தனியாய் இருப்பது போன்ற ஒருவகை உணர்வை அன்றில் அனுபவித்துக் கொண்டிருந்தாள். அந்நேரத்தில் அவளுக்கு வீடு வெறிச்சோடிக் காணப்பட்டது. அறவணனைப் பிரிந்த பின்புதான். அவரது அழகிய தோற்றமும், அவரது அரிய பண்பும் அன்றிலுக்குப் பளிச்சிட்டுத் தெரிந்தன. ஒரு சில மணி நேரத்தில் அவர் அவளை முற்றும் கவர்ந்து விட்டார். அதனால் அவள் ஒருவகைப் பிரிவுத் துன்பத்தைச் சுவைத்துக் கொண்டிருந்தாள் - ஆம், அந்த உணர்வு ஒருவகைச் சுவையாகவே இருந்தது. இதுதான் ஆண் - பெண் உணர்வின் இயல்பு போலும்!

அந்நேரம் அன்றிலின் உள்ளம் ஒரு நிலையதாய் இருந்தது என்றும் சொல்வதற்கில்லை; மாறி மாறி எழும் பல்வகை உணர்வுகளுக்கிடையே சிக்குண்டு நெருக்குண்டு சாறாகப் பிழியப்பட்டது. ‘அறவணன் இத்துணை அழகும் இனிய பண்பும் உடையவராக இருந்தாரே’ என்று அவள் உள்ளம் ஒரு சமயம் வியக்கும்; ‘அவர் நம்மைப் பற்றி என்ன எண்ணிக்கொண்டிருப்பாரோ’ என்று ஒரு சமயம் வெட்கப்படும்; ‘எந்த ஆடவரோடும் நெருங்கிப் பழகாத நாம், நம் பெண்மையை மறந்து, மென்மையைத் துறந்து, முன்பின் அறியாத எவனோ ஒருவனோடு இன்று நெருங்கிப் பழகிவிட்டோமே; அவன் யார் - நாம் யார்? அவனுக்கு உணவும் அளித்தோமே’ என்று ஒரு சமயம் வேதனைப் படும்-வேகம் கொள்ளும். ‘இல்லையில்லை; அறவணனைப் போன்ற அரும்பெறல் ஆடவர் ஒருவரின் உறவு நமக்குக்

கிடைப்பதரிது' என்று மீண்டும் அவர்மேல் விருப்பங் கொள்ளும். ஆம்! கிளைக்குக் கிளை தாவும் குரங்கை உள்ளத்துக்கு ஒப்புமைப் படுத்திச் சொல்லிப் போனவர்கள் எவ்வளவோ அனுபவசாலிகள்தாம்.

அன்றிலின் ஓயாத உள்ளப் போராட்டத்திற்குக் காரணம் இல்லாமலும் இல்லை. அவள் பள்ளியிறுதித் தேர்வில் (எஸ். எஸ். எல். சி.) வெற்றி பெற்றவுடனேயே அவள் தகப்பனார் மாசிலாமணி அவளது திருமணத்திற்கு ஏற்பாடு செய்தார். மேலும் படிக்க வேண்டும் என்று ஆர்வங்கொண்டிருந்த அன்றிலுக்கு அப்போது திருமணத்தில் விருப்பம் இல்லை என்றாலும், பெற்றோர் செய்யும் ஏற்பாட்டை மறுக்கும் துணிவு இல்லை.

தாங்களாகப் பெண் கேட்க வந்த சில மாப்பிள்ளை வீட்டார்களை மாசிலாமணிக்குப் பிடிக்கவில்லை. பெண்ணின் தகுதி தரத்திற்கு ஏற்ற பிள்ளை கிடைத்தால் தானே அவர் ஒத்துக்கொள்ள முடியும்? அழகுக்கு ஆசைப் பட்டு வந்து பெண் கேட்கும் ஐயனார் கோயில் உருப்படிகளுக்கு எப்படிப் பெண் கொடுக்க முடியும்? அதாவது, கையொடிந்து கால் பிளந்து மூக்குடைந்து மூளை சிதறிய ஐயனார் கோயில் குதிரை வீரருக்கு, அறிவும் அழகும் ஒருங்கே நிறைந்த ஓர் உயிரோவியத்தை மனம் வந்து எவ்வாறு மனைவியாக்க முடியும்? மாப்பிள்ளை பணக்காரன் வீட்டுப் பிள்ளையாய் இருந்தால் போதுமா? அவனுக்கு வேறு தகுதி திறமைகள் வேண்டாவா? குடும்ப உரிமையின்படி அவனுக்குக் கிடைக்கவிருக்கும் சொத்து அவனுடைய தந்தையோ பாட்டனோ சம்பாதித்ததல்லவா? இப்போது தந்தைக்கா பெண் பார்க்கிறார்கள்? இல்லையே! அல்லது பாட்டனுக்கா பெண் பார்க்கிறார்கள்? இல்லவே யில்லையே! இந்தப் பையனுக்கல்லவா பெண் பார்க்கிறார்கள்? எனவே,

இவனுக்கென்று ஏதேனும் தனித் தகுதி இருக்க வேண்டாவா? ஆடம்பரமாக உண்டு உடுத்து ஊர் சுற்றி வரும் 'மாபெரும் சாதனைக்காகவா' அன்றில்களை மாசிலா-மணிகள் மணஞ்செய்து கொடுக்க முன்வருவார்கள்? எவ்வளவோ நகைகள் போடுவதாகச் சொல்லிக் கொண்டு வந்த உதவாக் கரைகளை மாசிலாமணி உதறித் தள்ளி விட்டார். பெண்ணுக்கேற்ற அழகும் ஆற்றலும் படிப்பும் பண்பும் உள்ள மாப்பிள்ளையாகத் தேடினார்.

அன்றிலுக்கேற்ற அழகு மாப்பிள்ளை - அறிவு மாப்பிள்ளை அப்போது கிடைக்காமலும் இல்லை. ஆனால், தேடித் தேடிப் போய்ப் பார்த்த மாப்பிள்ளைமார்களின் பெற்றோர்கள் பேராசைக்காரர்களாக இருந்தார்கள். பெண் வீட்டுக்காரர் வலிய வந்ததனால் மாப்பிள்ளை வீட்டார்க்கு இளப்பமாய் விட்டது போலும்! காசுக்கு ஒன்று பிசுக்கு பத்து என்ற கதையாய், மாசிலாமணியை நோக்கி, ''நீங்கள் உங்கள் பெண்ணுடன்; இன்னின்ன பொருள்களை லாரி லாரியாய் - கூட்சு கூட்சாய் - கப்பல் கப்பலாய்க் கொண்டு வந்து கொட்டிக் கோபுரம்போல் குவிக்க வேண்டும்'' என்று பட்டியல் (லிஸ்ட்) நீட்டினார்கள். அரசாங்கத்தார் அச்சிட்டுள்ள பணத்தாள்கள் (கரன்சி நோட்) அத்தனையை யும் கொடுத்தாலுங் கூட - ஒரு பெரிய தீவு முழுவதையும் எழுதி வைத்தாலுங்கூட அவர்களுக்குத் தெவிட்டாது போலும்! மாசிலாமணி இவ்வளவுக்கு எங்கே போவார்?

''பெண் கேட்க வரும் சில பேரறிவாளர்கள், பெண்ணுக்கு ஏராளமாக நகை போட வேண்டும் - வீடு, நிலம் எல்லாம் எழுதி வைக்க வேண்டும் - கையிலும் ஐயாயிரம் பத்தாயிரம் என்று தர வேண்டும் - ஆடம்பர மாகத் திருமணமும் செய்து வைக்க வேண்டும்'' என்று பட்டியல் போட்டு அட்டவணை கொடுக்கிறார்களே, இவர்கள், பெண்ணுக்கென்று என்ன செய்யப் போகிறார்

களாம்? அந்தப் பெண் இவ்வளவு கொடுத்து இந்த மாப்பிள்ளையைத் திருமணம் செய்து கொள்ள வேண்டிய தில்லையே. அந்த உடைமைகளையெல்லாம் வைத்துக் கொண்டு, தானே வாழ்க்கையை நடத்திக் கொள்ளலாமே? அவளுக்குப் பிள்ளைப்பேறு அளிப்பதைவிட இந்த மாப்பிள்ளையால் வேறு எதுவும் செய்ய முடியாது போலும்! அவளிடமிருந்து வீடு நிலம் காசு பணம் பெற்று நடத்தும் வாழ்க்கை ஒரு வாழ்க்கையா? நீ ஓர் ஆண்பிள்ளை - இவ்வளவு நாள் பிறந்து வளர்ந்து படித்து ஆள் ஆனதற்கு என்ன பொருள்?

வாழ்க்கை நடத்த ஓர் ஆணுக்கு ஒரு பெண் தேவை - ஒரு பெண்ணுக்கு ஓர் ஆண் தேவை. இருவரும் ஈடு தாழ்த்தி யில்லாத இணையாக - மாற்றுக் குறையாத மாணிக்கங் களாகத் திகழ வேண்டும். ஒருவரை யொருவர் விலை கொடுத்து வாங்குவதா திருமணம்? இல்லையே! மாப்பிள்ளைக்குச் சரியான விலை பெண் மட்டுந்தானே! பெண்ணுக்குச் சரியான விலை மாப்பிள்ளை மட்டுந்தானே! இதை விடுத்து, மேலும் எதிர்பார்ப்பது எப்படி முறை யாகும்? அருள் கூர்ந்து அன்பர்கள் இதனைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சட்டத்தினால் மக்களைத் திருத்துவது ஒருபுறம் இருக்க, உண்மையாகவே மக்களின் மனத்திலும் நல்ல மாற்றம் ஏற்பட வேண்டும். இல்லையேல், ஒருசிலர், சட்டத்தின் கண்களில் மிளகாய்ப்பொடியைத் தூவிவிடவுங் கூடும். ஒருவேளை, திருமணச் செலவிற்குக்கூட மாப்பிள்ளைக்கு வசதி இல்லையென்றால், பெண்வீட்டார் திருமணம் செய்து வைக்கலாம். அதற்குமேல் அவர்களுக்குத் தொல்லை கொடுக்கக் கூடாது. இதில் பெண் வீட்டாரும் விழிப்பாய் இருக்க வேண்டும்; மேல் விழுந்துகொண்டு போய்த் தங்களை மாப்பிள்ளை வீட்டாரின் 'பூகம்ப' வாய்க்கு இரையாக்கிக் கொள்ளக்கூடாது'' - என்று

மாசிலாமணி எத்தனையோ பேர்க்கு அறிவுரை கூறியிருக்கிறார். அவரா இப்பொழுது ஏமாந்து போவார்? மாசிலாமணி அப்படியொன்றும் பெரிய செல்வரல்லர்; ஓரளவே வசதி உடையவர். ஓர் உயர்தர அலுவலாளராயிருந்து ஓய்வு பெற்றவர். நன்கு தமிழ் கற்றவர். அவர் குடும்பமே வாழையடி வாழையாகத் தமிழ் கற்ற குடும்பம். அந்தக் குடும்பத்தில் பிறந்ததனாலேயே அன்றிலுக்கு அந்த அழகுப் பெயர் வைக்கப்பட்டது. எனவேதான், நல்ல முறையில் வளர்க்கப்பட்ட தம் மகளுக்கேற்ற மாப்பிள்ளையை மாசிலாமணி தேடிக்கொண்டிருந்தார். ஆனால், விலைப் பொருளாக ஒரு மாப்பிள்ளையை ஏற்றுக்கொள்வதற்கு அவர் விரும்பவில்லை.

இந்நிலையில் குளித்தலை என்னும் ஊரிலிருந்து ஒரு மாப்பிள்ளை ஏற்பாடு செய்யப்பட்டார். திருமணத்திற்கு முதல் கட்டமாகக் கைத்தாம்பூலம் மாற்றிக் கொள்வதற்காக மாப்பிள்ளை வீட்டிலிருந்து மூன்று பேர் பெண் வீட்டிற்கு வந்தார்கள். பெண்ணுக்குச் சீர்வரிசை மிகுதியாகச் செய்ய வேண்டும் என்று கண்டித்துக் கேளாததால், அவர்களின் உறவுக்கு மாசிலாமணியும் ஒத்துக்கொண்டிருந்தார். ஆனால் அவர்கள் கைத்தாம்பூலம் மாற்றிக் கொள்ள வந்தபோது திடீர்ப்புரட்சி செய்தார்கள். அதாவது, ''தங்கள் பையன் பி. இ. படித்து விட்டுத் தகுந்த வேலையில் இருப்பதால், ஏராளமான சீர் வரிசைகளுடன் பெண் கொடுப்பதாக எத்தனையோ பேர்கள் போட்டி போட்டுக் கொண்டு வருகிறார்களாம். அதனால் குறைந்தது நூறாயிரம் ரூபாய் பெறுமானத்திற்காவது ஏதாவது செய்தால் தான் தங்கள் பிள்ளைக்கு அன்றிலை மண முடித்துக் கொள்வார்களாம், இல்லாவிடின் இப்போது கைத்தாம்பூலம் மாற்றிக்கொள்ள முடியாதாம்'' என்று ஒரு திடீர் அணுகுண்டைத் தூக்கிப் போட்டார்கள். ''அந்த அளவிற்குச் செய்ய எனக்கு

வசதியில்லை. சென்ற வாரமே சொல்லியிருந்தால் நான் உங்கள் உறவுக்கு ஒத்துக்கொண்டிருக்க மாட்டேனே. இப்போது தாம்பூலம் மாற்றுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் செய்த பிறகு திடீரென இப்படிக் கேட்கிறீர்களே- இது முறையா? எனவே, போன வாரம் பேசி முடிவு செய்தவண்ணம் தாம்பூலம் மாற்றிக் கொள்ள வேண்டியது தான்'' என்று மாசிலாமணி சொன்னார், வந்தவர்கள் ஒத்துக் கொள்ள வில்லை. நூறாயிரத்திற்குத் தோது செய்தால் தான் திருமணத்திற்கு உடன்படுவோம் என்று ஒரே பிடியாய் இருந்தார்கள். மாசிலாமணியின் மகனும் அன்றிலின் அண்ணனுமான இளந்திரையன் என்பவனும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தான்-ஒன்றும் நடக்கவில்லை. திருமணம் வேண்டுமானால் நாங்கள் செய்து வைக்கிறோம் என்று தந்தையும் மகனும் தெரிவித்துக்கொண்டார்கள். அதற்கும் மாப்பிள்ளை வீட்டார் மசியவில்லை. அப்படியானால் நீங்கள் வந்தவழியே போகலாம் என்று வழி காட்டி விட்டார் மாசிலாமணி. வந்தவர்கள் எழுந்து நகரத் தொடங்கினர்.

இளைஞனாகிய இளந்திரையனால் இந்தக் கொடுமையைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. மாப்பிள்ளை வீட்டார் வந்து தங்கள் மானத்தை வாங்கி விட்டதாக உணர்ந்தான் அவன். அவர்களை வறிதே அனுப்பக் கூடாது - தகுந்த தண்டனை கொடுத்தே அனுப்ப வேண்டும் என்று அவனது இள உள்ளம் எண்ணியது. உடனே அவன் மாப்பிள்ளையின் தந்தையாகிய தாண்டவராயன் மேல் பாய்ந்து அவரைத் 'தாக்கு தாக்கு' என்று தாக்கினான். அடி பொறுக்க மாட்டாத அவர் 'குய்யோ முறையோ' என்று கூவினார். அப்போது மாசிலாமணி இது முறையன்று என்று மைந்தனின் கன்னத்தில் நான்கு அறை அறைந்து அவனை விலக்கிவிட்டு, அடிவாங்கியவரிடம்

மன்னிப்புக்கேட்டுக் கொண்டார். அப்போது இளந்திரையன் தந்தையை நோக்கி, ''அவர்களிடம் மன்னிப்புக் கேட்காதீர்கள் அப்பா! நான் செய்தது சரிதான். அவர்கள் செய்ததே தவறு. இங்கே அடி வாங்கினால்தான், இனி எங்கேயும் சென்று பத்தாயிரம் இருபதாயிரம் என்று மூச்சு விடமாட்டார்கள். இது இவர்களுக்கு மட்டுமன்று-உலகில் பெண் வீட்டாரின் உயிரை உறிஞ்சும் மாப்பிள்ளை வீட்டார் எல்லோருக்கும் ஒரு பெரிய பாடமாக இருக்கட்டும்!'' என்று இடிமுழக்கம் செய்தான். ''சரிதான் நிறுத்துடா! நம் வீடு தேடி வந்தவர்களை இப்படித்தான் நடத்துவதா? நீ என் மகனா? இனி என் முகத்திலே விழிக்காதே-வீட்டை விட்டு வெளியே போய்விடு'' என்று மாசிலாமணி மகனைக் கடிந்து பேசிவிட்டு மாப்பிள்ளை வீட்டார் பக்கம் திரும்பினார். அவர்கள் அங்கே இருந்தால்தானே! நழுவி விட்டார்கள். அந்தோ! நூறாயிரமும் கிடைக்கவில்லை-பெண்ணும் கிடைக்கவில்லை - உதை கிடைத்ததுதான் மிச்சம்.

மகனது அடாத செயலை எண்ணி எண்ணி மாசிலாமணி மனம் புழுங்கினார். 'இளங்கன்று அச்சம் அறியாது' என்றபடி அவன் இப்படிச் செய்துவிட்டானே. இனி யார் நம் வாயிற்படி தேடிப் பெண்ணுக்கு வருவார்கள்? இதைக் கேள்விப்பட்டால் எவருமே நம் வீட்டுப் பக்கம் தலை வைத்தும் படுக்கமாட்டார்களே என்று மாழ்கினார் மாசிலாமணி.

தாண்டவராயனை இளந்திரையன் அடித்து விட்டானே தவிர, அவனுக்கும் மனம் அமைதி கொள்ளவில்லை. 'ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு' என்பதுபோல நாம் நடந்து விட்டோமே என்று தன்னைத் தானே நொந்து கொண்டான். 'உன் நண்பன் யார் என்று சொல்லு - பிறகு நீ யார் என்று நான் சொல்லுகிறேன்' என்ற முது

மொழிப்படி, இந்தக் கொடுஞ்செயல் நண்பன் ஒருவனிடமிருந்து இளந்திரையனுக்குத் தொற்றிக் கொண்டது. அவனுடைய நண்பன் நக்கீரன் என்பவனுக்கு ஒரு தங்கை உண்டு. அவளுக்குத் திருமணமான ஆண்டில் மாப்பிள்ளை தீபாவளி மருவுக்காக வந்திருந்தார். தனக்கு வைர மோதிரம் வாங்கிப் போடவேண்டும் என்று வற்புறுத்தினார். 'இப்போது வசதியில்லை; பிறகு ஆகட்டும்' என்று மாமனார் சொல்லிப் பார்த்தார். கேட்டால்தானே. 'வைர மோதிரத்தை வைத்தால்தான் காஃபியைக் கையால் தொடுவேன்' என்று மருமகப்பிள்ளை அடம் பிடித்தார். அது பொறாத நக்கீரன், 'உனக்குக் காஃபியும் கிடையாது- கல்லிழைத்த மோதிரமும் கிடையாது - கன்னத்தில் அறைதான் ' கிடைக்கும்' என்று சொல்லிக்கொண்டே மாப்பிள்ளையின் கன்னத்தில் ஓர் அறைவிட்டான்; 'இன்னது கொடுத்தால்தான் கை நனைப்பேன்' என்று முரட்டுத்தனம் செய்கின்ற மாப்பிள்ளைகள் எல்லோருக்கும் இது ஒரு பாடமாக இருக்கட்டும்' என்று ஆர்ப்பரித்தான். இது முறையா?

இந்த நிகழ்ச்சியை நக்கீரன் வாயிலாக அறிந்து வைத்திருந்த இளந்திரையன், இப்போது தங்கள் வீட்டுக்கு வந்திருந்த தாண்டவராயனது முதுகைக் கவனித்து அனுப்பி விட்டான். அதன் விளைவை அவன் அறிவானா?

அந்த ஆண்டு அன்றிலுக்குத் திருமணம் கூடிவரவில்லை. வேறு ஊர்களிலிருந்து பெண் பார்க்க வந்த மாப்பிள்ளை வீட்டார்களை யெல்லாம், தாக்குண்ட தாண்டவராயன் கலைத்துக் கொண்டேயிருந்தார். 'என் உயிர் இருக்கும் வரைக்கும் மாசிலாமணியின் மகளுக்குத் திருமணம் ஆகி விடாமல் கலைத்துக் கொண்டேயிருப்பேன்' என்று தாண்டவராயன் சூள் (சபதம்) எடுத்துக் கொண்டார். அவ்வாறே அந்த ஆண்டு அவர் வெற்றி பெற்று விட்டார்.

திருமணம் கை கூடாதது அன்றிலுக்கு ஒருவகையில் நன்மையாகவே முடிந்தது, அவள் சென்னைக்கு வந்து தாயைப் பெற்ற பாட்டி வீட்டில் தங்கி ஒரு கல்லூரியில் இடைநிலை (இன்டர் மெடியட்) வகுப்பில் சேர்ந்து படிக்கலானாள். திருச்சியில் தன் திருமண முயற்சியின் சார்பாக நடந்த நிகழ்ச்சிகள் அவளுக்கு வேதனை யளித்த தோடு, திருமணத்திலேயே ஒருவகை வெறுப்பையும் அளித்திருந்தன, இப்போது சென்னையில் வந்து தங்கிப் படிப்பது அவளுக்குப் பெரிய ஆறுதலாக இருந்தது. தன் அண்ணன் தாண்டவராயனைத் தாக்கியதால் ஏற்பட்ட களங்கமும் கவலையும் மறையட்டும் என்று கருதியே அவள் திருச்சியில் படிக்காமல் சென்னைக்கு வந்து விட்டாள். அங்கே இரண்டாண்டு படித்துக் 'கல்லூரி இடை நிலை (இன்டர்மெடியட்) வகுப்புத் தேர்விலும் வெற்றி பெற்றாள்.

இரண்டாண்டுகட்குப் பிறகு மீண்டும் மாசிலாமணி அன்றிலின் திருமணத்திற்கு முயற்சி எடுக்கத்தொடங் கினார். அன்றில் வயதுக்கு வந்து நான்கு ஆண்டுகள் ஆகி விட்டன. இனியும் அவளுடைய திருமணத்தைத் தள்ளிப் போடுவதற் கில்லை. மேலும். அவள் அண்ணன் இளந்திரையனுக்கும் திருமணம் செய்து வைக்க வேண்டும், 'கன்னியிருக்கக் காளை மணை ஏறக் கூடாது' என்றபடி மகள் அன்றிலின் திருமணத்தை முதலில் முடித்துப் பின்னர் இளந்திரையன் திருமணத்தைக் கவனிக்கவேண்டும் என்று மாசிலாமணி திட்டமிட்டிருந்தார், அதனால் உடனடியாக அன்றிலின் திருமணத்தை அந்த ஆண்டே எப்படியாவது முடித்து விடவேண்டும் என்று காப்பு கட்டிக் கொண்டார்.

இரண்டாண்டுக்கு முன்பு இருந்ததைவிட இப்போது அன்றில் ஓரளவு துணிவு உடையவளாகக் காணப்பட்டாள்.

ஏட்டுப்படிப்போடு உலகியல் படிப்பும்-அதாவது அனுபவப் படிப்பும் பெற்றிருந்தாள். இரண்டாண்டுக்கு முன் ஒரு கல்லுக்கோ அல்லது புல்லுக்கோ தன்னை மனைவியாக்கி இருந்தாலும், தன் பெற்றோர் விருப்பத்தைத் தட்டாமல் ஒத்துக் கொண்டிருந்திருப்பாள். 'கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்' என்பது நம் நாட்டின் தலை எழுத்தாயிற்றே! ஆனால் இப்பொழுது மாப்பிள்ளை தேர்ந்தெடுப்பதில் தன் கருத்தையும் தெரிவிக்கும் அளவுக்கு அன்றில் பட்டறிவு பெற்றிருந்தாள். பட்டணத்தில் படித்தவள் அல்லவா?

தந்தையார் திருமணமுயற்சி தொடங்கியதுமே, எனக்கு இப்போது திருமணம் தேவையில்லை. நான் மேலும் படிக்க விரும்புகிறேன், அண்ணன் திருமணத்தை நடத்தி விடுங்கள் என்று அன்றில் சொன்னாள். அதற்கு மாசிலாமணி ஒத்துக் கொள்ள வில்லை. அன்றிலுக்கு மாப்பிள்ளை தேடினார். அவர் நோக்கப்படி மாப்பிள்ளை அமர்வது அரிதாகவே இருந்தது. ஒரு மாப்பிள்ளை மாசிலாமணிக்குப் பிடிக்காமல் போய்விடும். இன்னொரு மாப்பிள்ளை அவர் மனைவிக்குப் பிடிக்காமல் போகும். மற்றொரு மாப்பிள்ளை இளந்திரையனுக்குப் பிடிக்காமல் இருக்கும். வேறொரு மாப்பிள்ளை அன்றிலுக்கு ஆகாமற் போகும். மேலும் ஒரு மாப்பிள்ளை இருவர்க்குப் பிடித்து இருவர்க்குப் பிடிக்காமலும் இருக்கும். மற்றும் ஒரு மாப்பிள்ளை யாருக்குமே பிடிக்காமல் போகும். என் செய்வது! எல்லோருக்கும் பிடிக்கும் மாப்பிள்ளை எங்கிருந்து கிடைக்க முடியும்? பொம்மையா என்ன - நினைத்தபடி செய்து கொள்வதற்கு! சிறிது ஏறத்தாழவும் இருக்குந்தான்! தீட்டித் தீட்டிப் பார்த்தால் முடியுமா?

எல்லாத் தத்துகளையும் தாண்டிக் கொண்டு ஒரு நல்ல மாப்பிள்ளை வந்தார். அவர் பி.ஏ.,பி.எல்., படித்துவிட்டுப்

புதிதாக வழக்கறிஞர் (வக்கீல்) வேலை தொடங்கி யிருக்கிறார். அவரைப் பொறுத்த வரையிலும் பெண் வீட்டார் எல்லாருக்கும் எல்லா வகையிலும் மனநிறைவு தான். ஆனால் அவர்கட்குப் பெரிய தலைவலியாகத் தாண்டவராயன் இருந்தார். புரையோடிய புண்ணாக அவர் அழிவு வேலை செய்தார். அன்றிலின் மேலும் அவள் குடும்பத்தார் மேலும் இல்லாததும் பொல்லாததுமாக மாசுமறுக்கள் பல கற்பனையால் படைத்து மாப்பிள்ளை வழக்கறிஞர் காதுவரையும் எட்டவிட்டார். அதனால் அந்த வாய்ப்பும் கத்தரித்துக் கொண்டது.

அடுத்தடுத்து நேர்ந்துபோன இத்தகு நிகழ்ச்சிகள் சில அன்றிலின் எண்ணத்தில் ஒரு பெரிய திருப்பத்தை உண்டாக்கின. மண வாழ்க்கையையே அவள் வெறுத்தாள். ஒரு பெண் திருமணம் செய்து கொள்ளாமல் தனியாக வாழ முடியாதா? வாழக் கூடாதா? அப்படி எத்தனையோ பெண்கள் வாழ்கிறார்களே-என்றெல்லாம் என்னென்னவோ கணக்குப் போட்டுப் பார்த்தாள்; தான் நீண்டநேரம் சிந்தித்துப் போட்ட கணக்குக்கு ஏதோ விடையைக் கண்டு பிடித்தாள். அவள்வரைக்கும் அது சரியான விடையாகவே தென்பட்டது. அதாவது:

''பெண்கள் கொடிகள் என்றும், அக்கொடிகள் படர் வதற்குரிய கொடிமரங்கள் ஆண்கள் என்றும் சமூகம் பேசுவதோடு, எழுதியும் வைக்கப்பட்டிருக்கிறது. கொழு கொம்பின்றிக் கொடி படராதாம் - தரையில் படர முடியாதாம். இந்தக் கொள்கையின்படி, மரம் விழுந்தால் கொடியின் வாழ்வும் போயிற்று. ஏன் - பெண்ணைக் கொடியாகச் சொல்லாமல், தனித்து நின்று வாழும் செடியாகச் சொன்னால் என்ன? ஆண்பனைக்கு எதிராகப் பெண்பனை என ஒன்றிருப்பது போல், பெண்ணைத் தனி

மரமாகச் சொன்னால் என்ன? ஆணின் துணை இன்றிப் பெண் வாழமுடியாதபோது, பெண்ணின் துணை இன்றி ஆண்மட்டும் வாழ முடியுமா? அப்படி ஆண் வாழமுடியும் என்றால், ஏன் பெண் மட்டும் வாழ முடியாது - வாழக் கூடாது? சில பெண்மணிகள் வாழ்ந்து காட்டியுள்ளார்களே.''

''நம் நாட்டில் திருமணம் செய்துகொள்ளாமலேயே ஆண்கள் வாழ முடிந்தும் பெண்கள் வாழமுடியாத 'நிலை ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக இருந்து வந்தது என்னவோ உண்மைதான்! அதற்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றை வெளியிடத் தயங்கக் கூடாது - கீறித்தான் ஆற்ற வேண்டும். அவை:-

1. பெண்கள் ஆண்களினும் உடல் வலிமையற்றவர்கள்; அதனால் ஆணுக்கொரு நீதி - பெண்ணுக்கொரு நீதி.

2. மக்களுள் உயர்சாதி, இழிசாதி என எப்படியோ வகுக்கப்பட்டிருப்பதால், உயர் சாதியினர் இழிசாதியினரை அடிமைப்படுத்தி அடக்கியாண்டு வருவது போல, ஆணினம் பெண்ணினத்தைத் தன் விருப்பம்போல் அடக்கியாண்டு வருகிறது.

3. உடல் வலிமைக் குறைவு காரணமாகவும், அடிக்கடி நேரும் பிள்ளைப்பேறு காரணமாகவும், ஓய்வு ஒழிவின்றிப் பிள்ளைகளைக் கண்ணும் கருத்துமாகக் காத்து வளர்ப்பதிலேயே நேரத்தைச் செலவிட வேண்டியிருப்பது காரணமாகவும், தனியாகத் தொழில் செய்து பொருள் ஈட்டும் வாய்ப்பு பெரும்பாலும் பெண்களுக்கு இருக்க முடிவதில்லை; அதனால், உழைத்துப் பொருளீட்டும் வாய்ப்புடைய ஆண்களைச் சார்ந்து பெண்கள் வாழவேண்டியிருக்கிறது,

4. நம் நாட்டில் பெற்றோர்கள் ஆண் குழந்தைகளை மட்டுமே தங்கள் சொத்தாக-தங்கள் செல்வமாகக் கருது

கின்றார்கள். பெண் குழந்தைகளையோ, எங்கோ போக வேண்டிய பொருளாக - எவருக்கோ உரிய பொருளாக எண்ணுகிறார்கள். பெண் குழந்தைகளைப் பெருஞ் சுமை யாகவும் கருதுகிறார்கள். ஏனென்றால், எதிர்காலத்தில் அவர்களால் வருமானம் கிடைக்கப் போவது இல்லை யல்லவா? மேலும், ஆண்பிள்ளைகளுக்குத் தம் செல்வத்தைச் சரிநிகராகப் பங்கிட்டளிப்பதைப் போலப் பெண்பிள்ளை களுக்கு அளிப்பதில்லை. அதனால் ஒரு பெண், வேறு ஆடவன் ஒருவனை நம்பியே வாழவேண்டியிருக்கிறது.

5. வாழையடி வாழையாக மேற்கூறியவாறே வாழ்ந்து பழகிப்போன குருதியிலே (இரத்தத்திலே) ஊறிப்போன பழக்கமும் ஒரு பெரிய காரணமாகும்.

இப்படிப் பல காரணங்களால் பெண்கள் மணஞ்செய்து கொள்ளாமல், ஆடவரைப்போல் தம் விருப்பப்படி நடந்து கொள்ளும் வாய்ப்புக்கு இடமில்லாது போயிற்று.''

''ஆணின் துணை இன்றிப் பெண் தனித்து வாழ முடியாது-வாழக்கூடாது என்கிறார்களே, அப்படியே ஒரு பெண் ஒருவனை மணந்து கொண்டாலும், நம் நாட்டைப் பொறுத்தவரைக்கும், கடைசிவரையும் அவளது நிலையான வாழ்விற்கு உறுதியான பொறுப்பு (உத்தரவாதம்) உண்டா? இல்லையே. தாலி கட்டின மறு விநாடியே கணவன் இறந்து விட்டாலும், அவள் வேறொருவனை மறுமணஞ் செய்து கொள்வதற்கு நம் நாட்டு மரபு இடந்தராதே-அவள் ஆண் துணையின்றித் தனியாகத் தானே காலத்தைப் பிடித்துத் தள்ளிக் கழித்துத் தொலைக்க வேண்டும்! ஒரு பெண் ஆண் துணை இன்றித் தனியாக இருக்க முடியாது - இருக்கக் கூடாது என்கிறார்களே, இளமையில் கணவனை இழந்த பிறகு மட்டும் தனியாக இருக்க முடியுமா? இருக்கலாமா? திருமணமாகிக் கணவனையிழந்த பிறகு தனியாக இருக்க

முடிவதைப் போல, திருமணம் செய்து கொள்ளாமலேயே தனியாக இருக்க முடியாதா - இருக்கக் கூடாதா? ஆனால், திருமணமாகிக் கணவன் இறந்துவிடின் அவனது சொத்தை வைத்துக் கொண்டு காலம் கழிக்கலாம் என்று சொல்லக் கூடும். இந்த ஏழை நாட்டில் எத்தனைக் குடும்பங்களில் சொத்து இருக்கிறது? கணவனை இழந்த பெரும்பாலான பெண்கள் தம் சொந்த உழைப்பின் மூலமே காலம் தள்ளு கிறார்கள் என்பதை மறந்துவிடுவதற்கில்லை. மற்றும், கணவனை இழந்த பெண்களுக்கு மறுமணம் செய்து கொள்ளும் வாய்ப்பை மனமார அளிக்காத இந்நாட்டில் - மற்றும் கைம்பெண் என்று கூறி நல்ல நிகழ்ச்சிகளிலிருந்து ஒதுக்கும் இந்த நாட்டில் - அவர்களைப் பார்த்துவிட்டுப் போனால் காரியம் கெட்டுவிடும் என்று அஞ்சுகிற இந் நாட்டில் - அவர்களுடைய அழகினைச் சிதைத்துப் பேயுருவம் கொள்ளச் செய்திருக்கிற இந்நாட்டில் - பெண்கள் திருமணம் செய்து கொள்ளாமல் 'நித்திய சுமங்கலி'களாக இருந்தால் தான் என்ன? - என்ற வேகம் ஏன் வராது?

இப்படியே எல்லாரும் திருமணம் செய்து கொள்ளா திருப்பின் ஒழுக்கம் எப்படி நிலைக்கும் - உலகம் எவ்வாறு வளரும்? - என்ற கேள்வி எழலாம். எல்லாரும் இப்படி இருக்கமாட்டார்கள். ஒருசிலர்தான் இருக்க முடியும். எனவே, ஆண்களில் சிலர் மணம் இன்றி இருப்பதுபோல் தாமும் இருக்கப் பெண்களுள் சிலர் விரும்பினாலும் சமூகம் அதற்கு இடம் தரவேண்டும் - என்பதுதான் இங்கே வேண்டற்பாலது. சமூகம் இடம்தர வேண்டும் என்றால் என்ன? மணமின்றி வாழும் பெண்களை யாரும் ஏளனக் கண்ணுடன் பார்க்கக்கூடாது - ஐயப்பாடு (சந்தேகம்) கொண்ட பார்வையுடன் நோக்கக் கூடாது. அப்படி யென்றால், ஒரு பெண் திருமணம் செய்துகொள்ளாமலேயே உயர்ந்த முறையில் - சிறந்த நெறியில் உறுதியாக வாழ்ந்து

காட்ட முடியும். யாரோ இரண்டொருவர் தவறுவதைப் பற்றிப் பெரிதாக எடுத்துக்கொள்ளக் கூடாது-என்றெல்லாம் அன்றில் பலப்பல எண்ணியிருக்கக் கூடுமல்லவா? படித்தவளாயிற்றே - பட்டணத்தில் பழகியவளாயிற்றே. என்னவோ ஏதோ! தனக்குத் திருமணமே வேண்டாம்; காலமெல்லாம் கன்னியாகவே இருந்துவிட வேண்டும் என்ற முடிவுக்கு எப்படியோ வந்துவிட்டாள்; தன் முடிவைப் பெற்றோர்க்கும் தெரிவித்தாள்.

அன்றில் தானாக இந்த முடிவுக்கு வந்துவிடவில்லை. அப்படியென்றால், அவளது படிப்பும் பட்டண வாழ்க்கையும் அதற்குக் காரணமா? இல்லை - அவை இல்லை. படித்த பெண்கள் அனைவருமா - பட்டணங்களில் வாழும் பாவையர் எல்லோருமா திருமணமின்றி வாழ்கின்றனர்? இல்லையே. படித்த - பட்டணங்களில் வதிகின்ற நங்கையர் ஒருசிலர் மணமின்றி யிருப்பதைப் பார்த்தமையால்தான் அன்றிலுக்கும் அத்தகு உணர்வு தொற்றிக்கொண்டது என்று எவரும் சொல்ல முடியாது. அவளது முழுமாற்றத்திற்கும் முக்கியக் காரணம் பெண்கேட்க வருபவரின் இமாலயப் பேராசையும் அதைத் தாங்கமுடியாத அவளது குடும்பச் சூழ்நிலையுமே. அவளது திருமண முயற்சியின் காரணமாக நிகழ்ந்துள்ள நிகழ்ச்சிகள் அவள் மனத்தில் வெகுவேலை செய்திருந்தன. இதுவே அவளது முடிவுக்கு முதற் காரணம். கூட, படிப்பும் பட்டண வாழ்க்கையும் துணைக் காரணமாகச் சேர்ந்துகொண்டன என்று வேண்டுமானால் சொல்லலாம்.

இவ்வாறு திருமணமே வேண்டாம் என்றிருந்த அன்றிலின் வாழ்க்கையில் அறவணனது தொடர்பு ஒரு புதிய திருப்பத்தை உண்டாக்கியிருப்பதாக அவள் உள் மனம் உணர்ந்தது. அவ்வுணர்வு பெருகி, திருமண வேட்கையாகவும் தலையெடுக்கத் தொடங்கியது. அன்றில் தன் நிலையை எண்ணித் தானே நாணினாள். இதுதான்

காமத்தியற்கை போலும் என்று தனக்குத்தானே இரங்கினாள். தமிழ் கற்ற அவளுக்கு அப்போது மணிமேகலையின் வரலாறு நினைவுக்கு வந்தது! பூம்புகாரில் கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்தவள் மணிமேகலை. கோவலன் கொலையுண்டதைப் பொறாத மாதவி புத்தத் துறவி (பிக்குணி) யானாள். பச்சிளங் குருத்தாகிய மகள் மணிமேகலையையும் துறவு பூணச் செய்தாள். ஒரு நாள் இறைவழிபாட்டிற்கு மலர் கொய்வதற்காகத் தோழி சுதமதியுடன் மணிமேகலை மலர்வனம் புக்காள். அவளை அடைய வேண்டும் என்று அவாக் கொண்டிருந்த அவ்வூர் அரசிளங்குமரனாகிய உதயகுமரன் என்பான் அவளைப் பின் தொடர்ந்தான். அவனது வருகையை அறிந்த மணிமேகலை அச்சங் கொண்டு ஆங்கிருந்த ஒரு பளிங்கு அறையினுள் புகுந்து தாளிட்டுக் கொண்டாள். அரசகுமரன் சுதமதியிடம் என்னென்னவோ சொல்லிப் பார்த்தான் - பயனில்லை. பின்னர், 'சீ, இந்தப் பழம் புளிக்கும்' என்ற கதையாய், மணிமேகலையைக் கடிந்து இழித்துப் பேசி விட்டு அவ்விடம் விட்டகன்றான். அதன் பின் பளிங்கு அறையிலிருந்து வெளி வந்த பாவை மணிமேகலை சுதமதியை நோக்கி 'இளவரசு என்னை இழித்துப் பேசியும், அவர் பின்னேயே என்மனம் செல்லுகிறதே! **இதுவோ அன்னாய் காமத்து இயற்கை!'** என்று தன் மனத்தின் அவல நிலையை வெட்ட வெளிச்ச மாக எடுத்துச் சொன்னாள்.

அன்று மணிமேகலைக்கு ஏற்பட்ட அனுபவம் - அவளது மனத்திற்கு நேர்ந்த சோதனை, இன்று தனக்கு நேர்ந் திருப்பதை அன்றில் ஆழ உணர்ந்தாள். துறவறத்தில் ஈடு பட்டிருந்த மணிமேகலையின் மனமே உதயகுமரன் பின்னே சென்றபோது, அன்றிலின் மனம் அறவணன்மேல் சென்றதில் வியப்பில்லையே. தன்னை இழித்துப் பேசிய உதயகுமரன் பின்னே மணிமேகலையின் மனம் சென்றபோது, தன்னோடு

அன்புடன் பழகிய அறவணன் மேல் அன்றிலின் மனம் சென்றதில் வியப்பில்லையே. இளம் பெண் துறவியாகக் காவியப் புலவனால் படைக்கப்பட்ட மணிமேகலை இறுதி வரையும் மனத்தோடு போராடிக் காம உணர்வைக் கட்டுப் படுத்த வேண்டியிருந்தது. ஆனால் அந்தக் கட்டாயம் அன்றிலுக்கு வேண்டியதில்லையே. இவள் வாழப் பிறந்தவ ளாயிற்றே.

இப்போது அன்றிலுக்குள்ள கவலை யெல்லாம், அறவணன் தன்னை ஏற்றுக் கொள்வாரா என்பதைப் பற்றித்தான். ஏன்? "புகைவண்டியிலிருந்து பிரியவேண்டிய நேரம் வந்தபோது, ஊர் சென்றதும் நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதுவதாக அவர் சொன்னபோது, ஒரு தொடர்பும் வேண்டாம் என்று கொல்வதுபோல் மறுத்து விட்டோமே; அதனால் அவர் தொடர்பை நாம் வெறுக்கிறோம் என் றெண்ணி அவர் நம்மை மறந்து விட்டிருப்பாரோ? அன்றியும், அவர் நமக்கு அன்பளிப்பாக ஒரு புத்தகம் கொடுக்க முயன்றபோது, நாம் அதனைப் பெற்றுக்கொள்ள மறுத்து விட்டோமே. இவ்வாறு பல வகையிலும் அவரைக் கொல்லாமல் கொன்றுவிட்டோமோ அவர் நம்மைப்பற்றி என்ன நினைப்பாரோ?

ஒருவேளை, நாமாக அவருக்கு வலிந்து உணவளித்த தால், அவர், நாம் வலிய விரும்புவதாக எண்ணி, தவறான நடத்தை உடையவள் என நம்மைப்பற்றித் தாழ்வாக எண்ணிக்கொள்வாரோ? ஐயோ, என் உள்ளம் நாணுகிறதே! பெண்கள் உடன் பிறந்தார் போன்று அன்புடன் பேசி ஏதேனும் ஒன்று கொடுத்தாலும், தம் கட்டழகிற்கு மயங்கிக் காம உணர்வு கொண்டு இப்படிப் பெண்கள் செய்ததாக எண்ணிக் கொண்டு, தவறான குறிப்புடன் அணுகுவது, ஆண்கள் உலகத்திற்கு ஒரு பெருஞ் 'சாபக்' கேடாயிற்றே.

இத்தகைய உலகில் பெண்களும் விழிப்பாகத்தானே இருக்க வேண்டும்?

எப்படியிருந்தபோதிலும் அவர் நம்மை மட்டமாக எண்ணிக்கொண்டிருக்க மாட்டார். உயர்ந்த பண்புடையவள் என்றே கருதியிருப்பார். அவரிடம் அந்த நல்ல பெயர் வாங்கும் முறையிலேயே நாம் நடந்துகொண்டிருக்கிறோம். ஆணாகிய அவர் பெண்ணாகிய நம்மைவிட மிகவும் கூச்சம் உடையவராகத் தெரிகிறாரே. நாம் உணவளித்தபோது அதை ஏற்றுக்கொள்ள எவ்வளவோ கூச்சப்பட்டாரே! அவருக்கு உணவு நல்கியதில் நமக்கு எத்துணை மகிழ்ச்சி! அவர் உண்டதைக் கண்டபோது நமக்கு எத்துணை மன நிறைவு! இந்த மகிழ்ச்சியே இத்துணை பெரிதென்றால், அவர் நம்மைக் காதலியாக ஏற்றுக் கொண்டால் - இது நடக்குமா? - அதன் பின்பு நாம் அவருக்கு உணவுபடைக்கும் போது உண்டாகும் மகிழ்ச்சியை நம்மால் தாங்கவே முடியாதே!

அவரை மீண்டும் எப்போது காண்பேன்? எங்கே காண்பேன்? அவர் ஒரு மூடராயிருக்கக் கூடாதா? ஒரு முரடராயிருந்திருக்கக் கூடாதா? அப்படியிருந்திருந்தால், அவரைப் பிரிந்ததனால் நமக்கு இவ்வளவு வேதனை ஏற்பட்டிராதே! ''மூடரது தொடர்பே மிகவும் இனியது; ஏனெனில் பிரிய வேண்டியது நேர்ந்தால் ஒரு கவலையும் உண்டாகா தல்லவா'' - என்னும் கருத்துடைய

''பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்
பீழை தருவதொன் றில்''

என்னும் வள்ளுவர் குறளின் நயத்தை அன்று கற்றபோது அறிந்து சுவைக்க முடியவில்லையே. இன்றுதானே அதன் உள்நயத்தை உணர முடிகின்றது'' –

என்றெல்லாம் பல எண்ணியவாறு அன்றில் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாள். உறக்கம் கொள்ளாததால், ஏதேனும் ஒரு நூலையாவது எடுத்துப் படித்துப் பார்க்கலாம் என்றெழுந்து தன் கைப்பையைத் துழவினாள். அவளறியாது அறவணன் வைத்திருந்த 'பிரெஞ்சு ஆசான்' என்னும் நூல் அப்போது அவளுக்குத் தட்டுப்பட்டது. ''ஆ! நாம் வேண்டாமென்று மறுத்தும், நமக்குத் தெரியாமல் எப்படியோ இந்தப் புத்தகத்தை நம் பைக்குள் வைத்துவிட்டிருக்கிறாரே! நம்மிடம் உணவு பெற்று உண்ட கடனைக் கழிப்பதற்காகவே அந்த உயர்ந்த பண்பாளர் இந்த வேலையைச் செய்திருக்கிறார்-என்று நெஞ்சம் உருகினாள். மீண்டும் மீளாத எண்ணத்தில் ஆழ்ந்தாள்.

எவ்வளவு நேரம் ஆகியிருக்குமோ தெரியாது. இறுதியாக அந்த நூலை மார்போடணைத்தபடி அன்றில் உறக்கத்தில் ஆழ்ந்தாள்.

# 6

அன்றிலிடம் பிரியாவிடை பெற்றுச் சென்ற அறவணன், திருச்சி சந்திப்பு நிலையத்தில் அலுவல் பார்க்கும் தம் எட்டின உறவினர் ஒருவரின் இல்லம் ஏகித் தங்கினார்.

அங்கு அவருக்கு அன்றைய இரவு 'சம்பூர்ண இராமாயணம்' ஆக அன்று — 'சம்பூர்ண' அன்றிலாகவே கழிந்தது. மாடியில் படுத்துறங்க அவருக்கு வசதி செய்து தரப்பட்டிருந்தது. ஆனால் அவர் படுக்கையில் படுக்கவே இல்லை. ஆங்கிருந்த ஒரு சாய்வு நாற்காலியில் சிறிது நேரம் சாய்ந்து கொண்டிருப்பார்; சிறிது நேரம் மொட்டை மாடியில் உலாத்துவார்; சிறிது நேரம் நின்றபடியே, புகைவண்டி சந்திப்பு நிலையத்திலிருந்து அன்றில் பிரிந்துபோன திசையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருப்பார். பொன்னை உருக்கிப் புதிதாய் ஊற்றிய வண்ண வார்ப்பட வடிவப் பெண் சிலை ஒன்று உயிர் பெற்று எழுந்து உலவியது போன்ற அன்றிலின் தோற்றத்தை எண்ணி எண்ணிப் பெருமூச்செறிவார்.

அன்றிலாவது படுக்கையில் படுத்தபடி எண்ணக் கடலில் தத்தளித்தாள். அறவணனோ, மது வுண்டு மயங்கியவர் போலத் தள்ளாடிக் கொண்டிருந்தார். அன்றிலைப் பிரிந்த பின்பே அவளது அருமை அவருக்குத் தெரிய வந்தது.

இழந்த செல்வம் திரும்புமா? செல்வம் இருக்கும்போது சிலருக்கு அதன் அருமை தெரிவதில்லை. எல்லாம் இழந்து ஒருவேளை உணவுக்கும் வழியில்லாமல் போன பின்புதான் ஒரு காசு ஓராயிரமாகத் தெரியும். கண் இருக்கும்போது அதன் அருமை புரிவதில்லை. கண்ணென ஒரு பொருள் இருப்பதாகவும் அது வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாததாகவும் பலர் எண்ணிப் பார்ப்பதில்லை. கண் போன பின்புதான் அதன் அருமை பெருமை தெரியவரும்.

அன்றிலைப் பொறுத்த வரையில், அறவணனது நிலையும் அன்னதே. அன்றில் இன்றி இனி வாழ முடியாது என்ற அளவுக்கு அவரது உணர்வு உயர் கட்டத்தை எட்டத் தொடங்கியது.

இலக்கியங்களில் பெண்களின் உரு திருவைப் புலவர்கள் புனைந்திருப்பதைப் படிக்கும்போதெல்லாம், 'இவ்வளவும் வெறுங் கற்பனை; இந்தப் புலவர்கட்கு வேறு வேலை யில்லை போலும்' என்று எளிமையாக எண்ணி வந்த அறவணன், இவ்வாறு அன்றிலின் உரு திருவை அகத்தில் உன்னுந்தோறும் உன்னுந்தோறும், 'புலவர்கள் எழுதி யிருப்பது புனைந்துரை யன்று - நூற்றுக்கு நூறு முழு உண்மையே? இன்னும் கேட்டால், பெண்டிரின் அருமை பெருமையினை இன்னும் எந்தப் புலவரும் முழுமையாகச் சொல்லி முடிக்கவில்லை; எவராலும் சொல்லவும் முடியாது; சொல்லவும் தெரியாது' என்றெல்லாம் எண்ணத் தொடங்கி விட்டார்.

அறவணனின் காதல் உள்ளம் இந்த அளவுக்குப் போய் விட்டது வியப்பே.

இவ்வாறு அன்றிலின் அருமை பெருமை உயர்கட்டத்தில் அறவணனால் உணரப்பட்டாலும் ஒருவகையில் அவள் அவருக்குப் புரியாத புதிராகவும் காணப்பட்டாள். 'அவள் நம்மேல் காதல் கொண்டுள்ளாள் - இல்லையா? அவள் நமக்குக் கிடைப்பாளா - மாட்டாளா?'-என்று அறவணனது உள்ளம் ஒரு நேரம் ஊசலாடும்; இன்னொரு நேரம், 'அவள் நமக்குக் கட்டாயம் கிடைப்பாள்; நம்மேல் அவளுக்குக் காதல் இல்லையெனில், இவ்வளவு பரிந்து நமக்கு உணவு அளித்திருக்க மாட்டாள்; எனவே, என்றைக்காயினும் அன்றில் நம்மவளே' - என்று ஒரு துணிவுக்கு வரும். இல்லையில்லை; புகைவண்டியிலிருந்து நாம் அவளைப் பிரிந்த

போது, 'கடிதம் எதுவும் எழுதாதீர்; இனி என்னோடு எந்த வகையிலும் தொடர்பு கொள்ளாதீர்' என அவள் கண்டிப் பாய்த் தீர்த்தறுத்துச் சொல்லிவிட்டதால், இனி அவள் நமக்குக் கிடைக்கவே மாட்டாள். எட்டாப் பழத்திற்குக் கொட்டாவி விடுவதேன் என்றும் அறவணன் உள்ளம் மாறி மாறி எண்ணும்.

பின்னர் ஒருவர்க்கொருவர் உதவிக் கொள்ளுதல் என்ற அடிப்படையிலேயே அவள் நமக்கு உணவு கொடுத்திருக் கிறாள். இதை நாம் தவறாக எடைபோட்டு அவள் நம்மேல் இமயமலை யத்தனை காதல் கொண்டிருக்கிறாள் என்று எண்ணி ஏமாந்துவிடக் கூடாது. ஆடவர்க்கு இப்படியொரு கெடுமதி இருக்கவே கூடாது. எனவே, நாம் அவளை முற்றிலும் மறந்துவிட வேண்டும் - என்ற உறுதியான உணர்வு அறவணனை ஆட்கொண்டு விட்டது. அதன்படி அன்றிலை மறக்க முயன்றுகொண்டே அறவணன் மறுநாள் தம் ஊர் போய்ச் சேர்ந்தார்.

# 7

சில வாரங்கள் சென்றதும், சென்னைக் கலைக்கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் பதவியை ஒப்புக்கொள்ளும்படி அறவணனுக்கு ஆணை வந்தது. எதிர்பாரா வியப்புடனும் மகிழ்ச்சியுடனும் அவர் அவ்வேலையை ஏற்றுக்கொண்டார். சென்னைக் கல்லூரியில் சிறப்புடன் தமிழ்ப்பணியாற்றி வந்தார்.

கல்லூரி தொடர்பான பணிகளுக்கிடையே, ஞாயிற்றுக் கிழமைகளில் வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்கட்குச் சென்று அறிவுப் பசியை அடக்கி வரவேண்டுமென்பது அறவணனது பேரவா. ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை, மகாபலிபுரம் சென்றுவரத் திட்டமிட்டு, சென்னையிலிருந்து மகாபலிபுரம் செல்லும் பேருந்து வண்டி புறப்படும் இடத்தை அடைந்தார்.

வண்டி புறப்பட இன்னும் சிறிது நேரம் இருந்தது. அவ்வமயம் பெண்டிர் இருவர் அவ்வண்டியில் ஏறிக் கொண்டிருந்தனர். இருவருள் ஒருவர் இளம்பெண்; மற்றொருவர் ஓரளவு வயதானவர். அந்நேரம் ஓரிளைஞன் இரைக்க இரைக்க ஓடிவந்து, வயதான அம்மையாரை நோக்கி, 'அம்மா அம்மா! வேலூரில் தாத்தாவுக்கு உடம்பு மிகவும் கடுமையா யிருப்பதாகத் தந்தி வந்திருக்கிறது. அப்பா உங்களை உடனே புகைவண்டி நிலையத்திற்கு அழைத்துவரச் சொன்னார். நீங்கள் மகாபலிபுரம் போக வேண்டாம்' - என்று பதட்டத்துடன் சொன்னான். உடனே அந்த அம்மையார் தன்னுடன் இருந்த இள நங்கையைப் பார்த்து, 'நீங்கள் மகாபலிபுரம் போய் வாருங்கள். புறப்பட்ட பயணத்தை நிறுத்த வேண்டாம். நான் வேலூருக்குப் போகிறேன். தயவுசெய்து என்னை மன்னித்து விடுங்கள்' என்று கூறினார். அதற்கு அவ்விள

நங்கை, 'நான் மட்டும் தனியாக எப்படிப் போய்வர முடியும்? இன்னொரு முறை பார்த்துக் கொள்ளலாம். நான் வேறு வண்டி பார்த்து என்வீடு போய்ச் சேருகிறேன்' என்று சொன்னாள். 'சரி உங்கள் விருப்பம்' என்று சொல்லி அந்த அம்மையார் மகனுடன் புறப்பட்டு விட்டார். இளநங்கையோ செய்வதறியாது சில விநாடிகள் திகைத்தாள்.

அப்போது அங்கு வந்து நின்ற அறவணனைத் தற்செயலாய் அந்நங்கை கண்டு 'நீங்களா?' என்று பெரு வியப்புடன் கேட்டாள். அறவணனும் இந்தச் சந்திப்பை எதிர்பார்க்கவேயில்லை. அன்றில் அங்கு வந்திருப்பாள் என்று அவருக்கு எப்படித் தெரியும்! அறவணன் ஆவலுடன் பேச்சு தொடங்கினார்.

''நீங்கள் மகாபலிபுரம் புறப்பட்டீர்களா?''

''ஆமாம்! அதுவும் தடைப்பட்டுவிட்டது. துணையாக வந்த அந்த அம்மா ஏதோ தந்தி வந்ததாக ஆள் வந்ததால் போய்விட்டார்கள். தனியாக நான் எப்படிப் போவது? முன்பு நான் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த போது, மகிழ்வுச் செலவாக (Excursion) ஒரு நாள் மாணவிகளை மகாபலிபுரம் அழைத்துப் போக ஏற்பாடாகியிருந்தது. அந்த நாள் பார்த்து எனக்கு உடல் நலமில்லாததால் நான் போகாமல் நின்று விட்டேன். பிறகு, போகவேண்டும்-போகவேண்டும் என்று இப்படியே தள்ளிக்கொண்டு வந்து விட்டது. அன்றைக்குத்தான் அப்படியென்றால், இன்றைக்கு இப்படியாகிவிட்டது''

''ஏன், அந்த அம்மா வராவிட்டால் நீங்கள் மட்டும் போய் வர முடியாதா? வண்டியில்தான் எவ்வளவோ பேர் துணைவருகிறார்களே''

''இருந்தாலும் தக்க துணையின்றி எப்படி நான் தனியாகப் போய் வருவது?''

''மன்னிக்க வேண்டும் நானும் மகாபலிபுரம் போவ தற்குத்தான் வந்திருக்கிறேன். என்னுடன் வர உங்களுக்குத் தடை இல்லையென்றால் வரலாம், நேரமாகிறது, விரைவில் சொன்னால் இரண்டு பயணச் சீட்டுகள் வாங்கிக்கொண்டு வண்டியில் ஏறிவிடலாம்''.

''பயணச் சீட்டுகள் புதிதாக வாங்க வேண்டியதில்லை. நாங்கள் இருவரும் முன்னமேயே வாங்கிக்கொண்டுதான் வண்டியில் ஏறத்தொடங்கினோம் அந்த அம்மாதான் திடீரெனப் போய் விட்டார்களே. இரண்டு பயணச் சீட்டு களும் இதோ என்னிடந்தான் உள்ளன.''

''சரி நல்லது! உங்கள் முடிவு என்ன? வண்டி புறப் படும் நேரம் நெருங்கிவிட்டதுபோல் தெரிகிறது. ஏறிக் கொள்ளலாமா?

''... ... ... ... ...?''

''ஏன் தயங்குகிறீர்கள்! விரைவில் சொல்லுங்கள்''.

''சரி புறப்படுவோம்''

ஒருவிதமாக அறவணனும் அன்றிலும் வண்டியில் ஏறிக்கொண்டார்கள். வண்டிக்குள் இருவர் இருவராக அமரும் இருக்கைகள் சில இருந்தன. அவற்றுள் ஒன்றைச் சுட்டிக்காட்டி அதில் அமரும்படி வண்டியின் 'வழிசெலுத்தி (கண்டக்டர்) சொன்னார். அன்றிலும் அறவணனும் ஒரே இருக்கையில் பக்கத்தில்-பக்கத்தில் நெருங்கி இணையாக அமரச் சிறிது தயங்கினர். உடனே சற்று வயதான அவ் வழி செலுத்தி, இருவரையும் நோக்கி 'கணவனும் மனைவியும் ஒன்றாய் உட்காரவா இவ்வளவு வெட்கம்! பார்த்தால் இந்தக் காலத்து நாகரிகம் உடையவர்களாகத் தெரிகிறது-ஆனால் இவ்வளவு கூச்சப்படுகிறீர்களே!'-என்று ஒரு போடு போட்டார். அதற்குள் வண்டி உலுக்கல் -

குலுக்கலுடன் புறப்பட்டு விட்டது. அந்த உலுக்கல்-குலுக்கலானது, அறவணனையும் அன்றிலையும் எதிர்பாரா வகையில் இடித்து மோதிக் கொள்ளச்செய்து இருக்கையில் தள்ளிவிட்டது. வண்டி போய்க் கொண்டிருந்தது. வழியில் இருவர்க்கிடையே பேச்சு மிகுதியாக எழவில்லை. வண்டி செங்கற்பட்டு வழியாகத் திருக்கழுக்குன்றத்தை நெருங்கியது. திருக்கழுக்குன்றம் வரையிலுமே பயணச்சீட்டு எடுத்திருப்ப தாக அன்றில் அறவணனிடம் தெரிவித்தாள். வண்டி திருக்கழுக்குன்றத்து மலையடிவாரத்தில் வந்து நின்றதும் இருவரும் இறங்கிக் கோண்டனர். மலையுச்சிக்குச் சென்று 'கழுகு வழிபாடு' கண்டுவிட்டு, நண்பகல் உணவைக் கழுக்குன்றத்திலேயே முடித்துக்கொண்டு பின்னர்ப் பிற்பகல் வண்டியில் மகாபலிபுரம் செல்வதே அனைவர்க்கும் வழக்கம்.

உயர்ந்த புலவர்களின் இலக்கியங்கள்போல் ஆழமுடைய தடாகங்களும் பெரியோரின் உள்ளம்போல் உயர்ந்த மலை யுச்சியும் திருக்கழுக்குன்றத்திற்குத் தனியழகு தருபவை. மலைச் செடிகொடிகளிடையே தோய்ந்து வரும் மென் காற்றும், மலையடிவாரத்து இன்சுவைத் தண்ணீரும் உடல் சோர்ந்தோர்க்கும் உள்ளம் சோர்ந்தோர்க்கும் மாநலம் பயப்பவை. ஆனால், இரவில் மட்டுமல்ல - பகலிலுங்கூட, படுப்பதற்கு மட்டுமல்ல - உட்கார்ந்திருப்பதற்குங் கூட, திருக்கழுக்குன்றத்தில் கொசுவலை கட்டிக் கொள்ள வேண்டும் என்பதை மட்டும் மறக்க முடியாது.

அறவணன், அன்றில் இருவருமே திருக்கழுக்குன்றமோ மகாபலிபுரமோ இதுவரை பார்த்ததில்லையாதலின், மிகவும் ஆவலுடன் மலையுச்சியை நோக்கி ஏறத் தொடங்கினர். கால்கள் ஏறுகின்றன. வாய்களும் பேசுகின்றன.

''வண்டியில் பலர் இருந்ததால் ஒன்றும் பேச முடிய வில்லை. உங்களுடன் ஓர் அம்மா வந்து திரும்பிப் போய்

விட்டார்களே - அவர்கள் யார்? நீங்கள் எப்போது சென்னைக்கு வந்தீர்கள்?''

''நான் சென்னைக்கு வந்து ஒரு திங்கள் ஆகிறது. சென்னை மகளிர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியை வேலை கிடைத்திருக்கிறது. இப்போது அவ்வேலைதான் பார்த்து வருகிறேன். என்னுடன் வந்த அம்மாவும் எங்கள் கல்லூரியில்தான் வேலை பார்க்கிறார்கள். அவர்கள் வரலாற்றுப் பேராசிரியை. பெயர் நீலாம்பிகை அம்மையார். அவர்களின் துணையுடன் திருக்கழுக்குன்றமும் மகாபலி-புரமும் பார்த்துவிடலாம் என்று புறப்பட்டேன். வந்த இடத்தில் உங்களைக் காணும் வாய்ப்பு கிடைத்தது''.

''அப்படியா! நீங்கள் மகளிர் கல்லூரியில் வேலை பார்ப்பதே எனக்குத் தெரியாதே! மிக்க மகிழ்ச்சி! நாம் முன்பு அரசினர் கலைக்கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் வேலைக்காக நேர்முகக் காட்சித் தேர்வுக்காக வந்தோமே - அந்த வேலை எனக்குக் கிடைத்துவிட்டது. இப்போது நான் அந்தக் கலைக்கல்லூரியில்தான் வேலைபார்த்து வருகிறேன். உங்களுக்குத் தெரியுமோ-தெரியாதோ!''.

''எனக்கு அது தெரியும். ஆனால் உங்களுக்கு ஒரு விவரம் தெரியுமோ-தெரியாதோ?'',

''என்ன அது?''

''நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கும் வேலை முதலில் எனக்குத்தான் கிடைத்தது. இரண்டு வாரத்தில் வந்து வேலையை ஒப்புக்கொள்ளும்படி எனக்கு ஆணையும் வந்து விட்டது. பின்னர் நெருக்கத்தில் ஒரு விவரம் கேள்விப் பட்டேன்; அரசிதழிலும் (gazette) படித்துப் பார்த்தேன்.''

''என்ன விவரம் அது?''

''வேலைக்கு என்னைத் தேர்ந்தெடுத்து விட்டார்கள். நான் வேலையை ஒப்புக் கொள்ளவில்லையென்றால்,

எனக்கு அடுத்தபடியாக இன்னொருவர் — அவரும் ஒத்துக் கொள்ளவில்லையென்றால், அவருக்கு அடுத்தபடியாக மற்றொருவர் என இருவர் பெயர்கள் 'அடுத்தவர் பட்டியல்' (waiting list) வரிசையில் குறிப்பிடப்பட்டிருந்தன. அவ்விரு பெயர்கட்குள்ளும் அறவணன் என்னும் தங்கள் பெயரே முதலில் இருக்கக் கண்டேன். தங்கள் பெயரைக் கண்டதுமே, தங்களுக்குத்தான் அந்த வேலை கிடைக்கவேண்டும் என விரும்பினேன். அதனால், 'நான் அந்த வேலைக்கு வர வில்லை' என எழுதிவிட்டேன். பின்னர் அந்த இடம் உங்களுக்குக் கிடைத்திருக்கிறது.''

''இவ்வளவு விவரம் எனக்குத் தெரியாதே. நான் அரசிதழைப் பார்க்கவுமில்லை; யாரையும் இதுகுறித்து வினவவுமில்லை. எப்போதும்போல் இயற்கையாக இருந்து கொண்டிருந்தேன். இந்த வேலை கிடைக்கும் என்ற உறுதியும் எனக்கு இருக்கவில்லை. எதிர்பாரா வகையில் வேலையை ஏற்றுக் கொள்ளும்படி ஆணை வந்ததும் மகிழ்ச்சியுடன் சென்னைக்குப் புறப்பட்டுவிட்டேன். ஆனால், உங்களுக்குக் கிடைத்த இந்த நல்ல வாய்ப்பை எனக்காக நீங்கள் இழந்துவிட்டதை யறிந்து வருந்துகிறேன். அதே நேரத்தில், எனக்காக விட்டுக்கொடுத்த உங்கள் பேரன்புக்கு என்ன கைம்மாறு புரிவது என்றறியாது திகைக்கிறேன். என்னவிருந்தாலும் எனக்காக நீங்கள் இவ்வளவு செய் திருக்கக்கூடாது. உலகில் வேறு எவரிடமும் இந்த அளவு எதிர்பார்க்க முடியவே முடியாது!''

''இருக்கட்டும், எனக்குத்தான் மகளிர் கல்லூரியில் இதே போன்ற வேலை கிடைத்துவிட்டதே! இதற்காக நீங்கள் ஒன்றும் தொல்லைப்பட்டுக்கொள்ள வேண்டாம்.''

என்று அன்றிலும் அறவணனும் உரையாடிக்கொண்டே, எதிர்கால வாழ்க்கைப் படிகளை ஒவ்வொன்றாக ஏறிக்

கடக்கத் தொடங்கியவர்கள் போலக் கழுக்குன்றத்து மலைப் படிகளைக் கடந்து உச்சியை அடைந்தனர். அங்கே பல்வேறு ஊர்களிலிருந்து வந்த நூற்றுக்கணக்கான மக்கள் கழுகுக் காட்சிக்காகக் காத்திருந்தனர். கழுகு வழிபாட்டுக்காட்சியைப் பற்றி ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமாகப் பேசினர்.

'நாள்தோறும் இரண்டு கழுகுகள் காசியிலிருந்து புறப் பட்டு இராமேசுவரம் சென்று திரும்பும் வழியில் கழுக் குன்றம் வந்து காட்சி தந்துவிட்டுக் காசிக்குச் சென்று விடுமாம்'' என்றார் ஒருவர்.

'இல்லையில்லை; இரண்டும் இமயமலையிலிருந்து புறப் பட்டுக் கன்னியாகுமரி சென்று நீராடிவிட்டுக் கழுக்குன்றம் வந்து உணவு எடுத்துக்கொண்டு சென்று விடுமாம்' என்றார் இன்னொருவர்.

'இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இதே கழுகுகள் வருகின்றனவாம்' - என்றார் மற்றொருவர்.

'இரண்டாயிரம் ஆண்டுகள் என்றென்ன! இந்தக் கழுகு களுக்கு இறப்பே இல்லையாம். எல்லாக் காலத்திலும் இந்தக்கழுகுகளே வருகின்றனவாம்'-என்றார் வேறொருவர்.

'இவையெல்லாம் உண்மையாக இருக்கமுடியுமா? இந்தக் காலத்திலும் இப்பேர்ப்பட்ட நம்பிக்கை இருக்கிறதே!' என்று கசந்து கொண்டார் ஒரு பேர்வழி.

'எல்லாம் முழுப் பொய்! வடிகட்டிய மூட நம்பிக்கை! எந்தக் கழுகும் எங்கிருந்தும் வரவில்லை - எங்கும் செல்லவு மில்லை. இந்த மலைக்கு எதிரே அதோ இருக்கிறதே ஒரு குன்று! அந்நக் குன்றிலிருந்துதான் கழுகுகள் வருகின்றன' - என்று கடிந்து பேசினார் ஒரு வம்பர்.

எது உண்மை என்று இருந்து பார்த்து விடுவோமே என அன்றிலும் அறவணனும் கழுகுகளை ஆவலுடன் எதிர் நோக்கிக் கொண்டிருந்தனர்.

கழுகுகளோ கொஞ்சத்தில் வந்தபாடில்லை. ஓர் ஐயர் குறிப்பிட்ட ஒரு பாறையில் அமர்ந்து சோறும் தண்ணீரும் வைத்துக்கொண்டு, கழுகுகளின் வரவை நோக்கி, எதிர்க் குன்றின் பக்கம் வைத்தகண் வாங்காது பார்த்துக் கொண்டிருந்தார். மக்களின் ஆவலைத்தூண்டுவதற்காகவோ என்னவோ கழுகுகள் வரவேயில்லை. ஆனால் எதிர்க் குன்றில் கழுகுகளின் நடமாட்டம் பலர் கண்களுக்குத் தெரிந்தது. ஐயர் கழுகுகளை அழைக்கும் நோக்குடன் அவை இருக்கும் பக்கமாகத் துணியால் விசிறினார்; ஒரு தட்டைக் 'கல கல' வென்று தட்டி ஒலியெழுப்பினார். இந்நிலையில் ஒரு கழுகு மெல்லப் பறந்துவந்து ஐயர் இட்ட உணவில் சிறிது உட்கொண்டது. அதைத் தொடர்ந்து மற்றொரு கழுகும் வந்து அதனுடன் பங்கு கொண்டது. சிறிது நேரத்தில் இரண்டு கழுகுகளும் பழைய இடம் நோக்கிப் பறந்து சென்றன. உடனே மக்கள், கழுகுகள் உண்டு எஞ்சிய உணவைப் போட்டி போட்டுக் கொண்டு வாங்கினர். அங்கே ஒரு சிலரால் மக்களுக்குத் தண்ணீர் (தருமம்) அறமும் நீர்மோர் அறமும் செய்யப்பட்டன. அங்கே தென்னாட்டு மக்களைக் காட்டிலும் வடநாட்டு மக்களே அன்று மிகுதியாகக் காணப்பட்டனர்.

அன்றிலும் அறவணனும் எல்லாவற்றையும் மகிழ்வுடனும் வியப்புடனும் பார்த்துவிட்டு மலையினின்றும் இறங்கி ஊரை அடைந்தனர். ஓர் உணவுக் கடையில் உணவு கொண்டனர். உடனே புறப்பட்ட ஒரு பேருந்து வண்டியில் ஏறி மகாபலிபுரம் போய்ச் சேர்ந்தனர்.

# 8

பேருந்து வண்டி மகாபலிபுரம் சேர்ந்ததும் அறவண னும் அன்றிலும் இறங்கி நடக்கத் தொடங்கினர். அப் போது அங்கே அவர்கள் முதலாவதாகக் கண்ட காட்சி, ஓர் இள நம்பியும் ஓர் இள நங்கையும் கைகோத்துக் கொண்டு வந்த கவின் பெறு காட்சியே! இள நம்பி அறவணனைக் கண்டதும் ‘அலோ மிஸ்டர் அறவணன்’ என்று கூறிக் கை குலுக்கினான். இள நங்கை வணக்கம் கூறி அன்றிலைத் தழுவிக் கொண்டாள்.

இந்த இருவரும் அண்மையில் திருமணம் செய்து கொண்டவர்கள். மகிழ்வுச் செலவாக மகாபலிபுரம் காண வந்துள்ளனர். இள நம்பிக்கு அறவணனைத் தவிர அன்றிலைத் தெரியாது; அதுபோலவே, இள நங்கைக்கு அன்றிலைத் தவிர அறவணனைத் தெரியாது.

இள நம்பியும் அறவணனும் கல்லூரியில் சேர்ந்து படித் தவர்கள். அவ்வாறே, இள நங்கையும் அன்றிலும் ஒரு கல்லூரியில் படித்தவர்கள். பழைய நட்பினால் அவன் அறவணனையும் அவள் அன்றிலையும் நலம் வினவினர்.

‘‘அறவணா! எனது திருமண அழைப்பிதழ் உனக்கு வந்து சேர்ந்திருக்கும் என நம்புகிறேன். நீ ஏன் என் திருமணத்திற்கு வரவில்லை? போனால் போகிறது. உனது திருமண அழைப்பிதழாவது எனக்கு அனுப்பியிருக்கக் கூடாதா? நண்பர்களுக்குக்கூட தெரிவிக்காமல் திருமணம் செய்து கொண்டிருக்கிறாயே! தெரிவித்தால் திருமண விருந்திற்கு வந்துவிடுவோம் என்ற அச்சமா?’’

என்று இளநம்பி அறவணனை நோக்கிக் கேட்டுக் கேலி செய்யலானான். அவ்வாறே இள நங்கையும் அன்றிலைக் கேட்டுக் கேலி செய்தாள்.

''ஏன் ஒருவர்க் கொருவர் எட்டிச் செல்கிறீர்கள்? எங்களைப்போல் கைகோத்து இணைந்து செல்லலாமே! இந்தக் காலத்திலும் - அதிலும் படித்தவர்கட்குள்ளும் இவ்வளவு கூச்சமா?''

என்று கூறிக்கொண்டே, இளநம்பி அறவணன் கையையும், இளநங்கை அன்றிலின் கையையும் பிடித்து இழுத்து வந்து இணையச் செய்தார்கள். அந்த நேரத்தில் ஒரு பேருந்து வண்டி அங்கிருந்து புறப்படத் தொடங்கியது. அதைக் கண்ட நம்பியும் நங்கையும், 'எங்கள் வண்டி புறப்படுகிறது. நாங்கள் வருகிறோம். வணக்கம்' என்று கூறித் தாங்களாகவே விடைபெற்றுக்கொண்டு சென்றுவிட்டனர்.

அங்கிருந்த சிறுவர் - சிறுமியர் இந்தக் காட்சியை ஒரு நாடகம்போல் கண்டு களித்துச் சுவைத்துக் கொண்டிருந்தனர். அறவணனும் அன்றிலும் அவ்விடத்தை விட்டு மெல்ல நழுவத் தொடங்கினர். அன்றில் அழாக் குறையாய் ஏன், உள்ளுக்குள் அழுது விட்டாள் என்றே கூறலாம்போல் கண் கலங்கிய நிலையில் துவண்டு தள்ளாடி நடவாமல் நடந்து கொண்டிருந்தாள். அளவு மீறிய மான உணர்வு அவளை அலைக்கழித்துக் கொண்டிருந்தது.

திடீரென வந்த இருவர் தன்னைத் தவறாகப் புரிந்து கொண்டதற்காக நாணத்தின் உயர் எல்லைக்கோட்டில் நின்று நடுங்கிக்கொண்டிருக்கும் அன்றிலை ஏறிட்டுப் பார்க்கவும் அறவணனுக்கு அச்சமாயிருந்தது. அந்த நிலையில் அவர் அவளோடு பேசுவது எப்படி? தன்னுடன் வர நேர்ந்ததனால்தான் அவளுக்கு இந்தக் கெட்ட பெயர் வந்தது என்பதாக அவள் எண்ணித் தன்னை வெறுப்பாளோ என்னவோ என எண்ணி அறவணன் மிகவும் தொல்லைப் பட்டார்.

ஒருவர்க் கொருவர் உரையாடாமல் சென்றுகொண் டிருந்தனர். அன்றிலின் முகம் நாணத்தால் சிவந்து காணப் பட்டது. அறவணன் முகம் ஒருவகைத் திகிலால் வெளுத் திருந்தது. போகப் போக, எட்டி நடந்தவர் சிறிது இணைந்து நடக்கத் தொடங்கினர். பார்த்துக் கொள்ளாது நடந்தவர் ஏறிட்டுப் பார்க்கத் தொடங்கினர். முதல் பார்வை வெற்றென இருந்தது. அடுத்த பார்வையில், முகங்களில் இருந்த சிவப்பும் வெளுப்பும் மறைந்துபோயின. மூன்றாவது பார்வையில் புன்னகையும் சேர்ந்துகொண்டது. இப்போது எல்லாம் சரியாய்ப் போக, பழைய நிலைக்குத் திரும்பி விட்டனர். அமைதியான குளத்து நீரில் கல்லெறிந்தால் நீர்ப்பரப்பின் நிலைமையில் மாறுதல் ஏற்படுகிறது; நீர்ப் பரப்பு பழைய அமைதி நிலையை அடையச் சிறிது நேரம் ஆகத்தானே செய்கிறது!

அன்றிலுக்கும் அறவணனுக்கும் ஏற்பட்ட அனுபவம், திருமணம் ஆகாத ஆணும் பெண்ணும் இணைந்து சென்றால் எந்தப் பெயருக்கும் தயாராயிருக்க வேண்டும் என அவர் களை எச்சரித்ததல்லாமல், நம் நாட்டின் தூய்மையான ஆண்-பெண் உறவு சார்பான நாகரிகத்திற்கு ஓர் அறை கூவலாகவும் இருந்தது.

''தங்களைக் கணவனும் மனைவியுமாகப் பிறர் எண்ணினாலும் தவறில்லை; ஆனால் கள்ளக் காதலர்களாக எவரேனும் எண்ணி விட்டால் என்ன ஆவது? முன்பின் அறியாதவர் அவ்வாறு எண்ணினாலும் தொலைந்து போகிறது! ஆனால், தன்னைப் பற்றித் தெரிந்தவர் எவரேனும், தவறாகக் கயிறு திரித்துத் தன் தந்தைக்கும் தமையனுக்கும் தெரிவித்து விட்டால் என்ன செய்வது?'' என்பதாக அன்றில் அடைந்திருக்கும் கலக்கத்தைப் புரிந்து கொண்ட அறவணன், அன்றிலை நோக்கி, ''உங்களுக்கு மனம் சரியில்லையென்றால், நீங்கள் தனியாகவே

மகாபலிபுரத்தைச் சுற்றிப் பார்க்கலாம்'' எனக்கூறி வழி வகுத்துத் தந்தார். ''இந்தப் பொல்லாத சமுதாயத்தில் ஒரு பெண் தனியாக அலைவதைக் காட்டிலும், எந்தப் பெயர் வருவதானாலும் ஒரு துணையோடு பயணம் செய்வதே மேல்'' என்ற உறுதியான முடிவுக்கு இப்போது தான் வந்துவிட்டதாக அன்றில் கூறினாள். அதன் பிறகே அறவணனது உள்ளம் அமைதி பெற்றது. இவ்வாறு அறவணனைப் போலத் தூய உள்ளம் உடையவராக எத்தனை இளைஞர்களை இவ்வுலகில் காண வியலும்?

இந்த நேரத்தில் இருவரையும் வழிகாட்டிகள் சிலர் வளைத்துக் கொண்டனர். மகாபலிபுரத்தைப் பற்றிய விவரங்களைத் தாம் தாம் விளக்குவதாக ஒவ்வொருவரும் போட்டி போட்டுக் கொண்டு முந்தினர். அவர்களுள் தக்க ஒருவரை இருவரும் தேர்ந்தெடுத்துக் கொண்டனர். அந்த வழிகாட்டி, மகாபலிபுரத்துச் சிற்பங்களைப் பற்றித் தொடர்ந்து சொற்பொழிவு செய்துகொண்டு வந்தார். மலைப்பாறைச் சிற்பங்கள், பஞ்சபாண்டவர் தேர்கள், கல்யானை, வெண்ணெய்க் கல், கலங்கரை விளக்கு, சிற்பக் கல்லூரி, கோயில்கள் முதலியவற்றைப் பற்றியெல்லாம் வழிகாட்டி சக்கைப்போடு போட்டார். அளவு மீறிய அவருடைய விளக்கங்களைக் கேட்டுக் கேட்டுப் புளித்துப் போன அறவணனும் அன்றிலும் ஒரு தொகையைப் பரிசாக அளித்து நன்றியும் செலுத்தி அவரை அனுப்பிவிட்டனர். சுற்றிய களைப்பு தீரச் சுவை நீர் பருகிவிட்டு, ஒரு தோப்பின் நடுவில் கண்ட ஒரு பொய்கைக் கரையில் இருவரும் அமர்ந்து இளைப்பாறினர். அங்கே தாம் விலைக்கு வாங்கிய பொருள் களின் அழகில் சிறிது நேரம் ஈடுபடலாயினர்.

மற்ற மற்ற மக்கள் சிலர் மகாபலிபுரத்தைச் சுற்றிப் பார்ப்பதற்கும், எம்.ஏ. படித்த தமிழ்ப் பேராசிரியர்களாகிய அறவணனும் அன்றிலும் மகாபலிபுரத்தைச் சுற்றிப்

பார்ப்பதற்கும் இடையில் எவ்வளவோ வேறுபாடு இருக்கத் தான் செய்யும். ''இங்கே என்ன இருக்கிறது? வெறுங் கல்லும் பொம்மையுந்தானே'' — என்று சொல்லிப் போகிறவர்கள் ஒருசிலர். ''இந்த மலைப் பாறைகளிலே இந்தச் சிற்பங்களையெல்லாம் எப்படித்தான் செதுக்கினார் களோ'' - என்று வியந்து செல்பவர் ஒருசிலர். திருக்கோயில் வழிபாட்டிற்கு முதலிடம் தந்து உள்ளங்கசிந்து செல்பவர் ஒருசிலர். ஒற்றைக் கல்லில் குடைந்த பஞ்ச பாண்டவர் தேர்களையும், யானையையும் வாய்பிளக்கப் பார்த்துப் பாராட்டி மகிழ்பவர் ஒருசாரார். கடற்கரைக் கோயில் மதிலில் கடல் அலைகள் வந்து மோதி மோதிப் பார்த்துத் திரும்பி ஓடுவதைப் பெரிதுபடுத்திப் பேசிச் செல்பவர் ஒரு சாரார். வெண்ணெய்க்கல் உருளாது அப்படியே நிற்பதில் உள்ளத்தைப் பறிகொடுத்தவர் மற்றும் சிலர். அங்கே விற்கும் பொருள்களை வாங்கி அழகு பார்த்தும், வீட்டிற்குச் சென்று குழந்தைகட்குத் தந்து அவர்களை மகிழ்விக்கலாம் என்று எண்ணியும் பூரித்துப் போகின்றவர்கள் மற்றும் பலர். சிற்பக் கல்லூரியைச் சென்று பார்த்து, சிற்பக் கலை நுணுக்கங்களைத் தெரிந்தவர்போல் நடித்துச் செல்பவர் சிலர். கல்வெட்டுகள், கலங்கரை விளக்கம், துறைமுகக் கால்வாய் முதலியவற்றை வரலாற்றுக் கண்கொண்டு நோக்கி வரலாறு பேசிச் செல்வோர் சிலர்.

மகாபலிபுரத்தை முன்னரே பலமுறை கண்டிருந்தும், இன்பப் பொழுதுபோக்கிற்காக இன்னொரு முறையும் வந்து அரட்டையடித்துவிட்டுச் செல்லும் இளைஞர் பலர் - பெரியவர் சிலர். தேன் நிலவுக்காக வந்து இன்பத்தில் திளைத்துத் தேக்கெறிவு கொண்டு திரும்பும் புத்தம் புதிய திருமண மக்கள் பற்பலர். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளி லிருந்தும், கல்வியுலா அல்லது மகிழ்வுச் செலவு என்னும் பெயரில் பேருந்து வண்டிகளில் ஆசிரியர்களுடன் திரள்

திரளாக வந்துபோகும் மாணாக்கர்கள் மிகப் பலர். 'டூரிஸ்ட்' (Tourist) என்னும் பெயரில் பேருந்து வண்டிகளில் தென்னகத்தின் பல்வேறு ஊர்களிலிருந்தும் வந்து சுற்றிப் பார்த்து மகிழ்ந்து செல்லும் கிராம மக்களும் நகர மக்களும் மிக மிகப் பலராவர்.

இவ்வளவு கூட்டத்திற்கிடையே, வட இந்தியாவிலிருந்து இராமேசுரம் சென்று திரும்பி வரும் வழியில் மகாபலிபுரக் காட்சிகளைக் கண்டு மகிழும் வட இந்திய மக்களின் எண்ணிக்கைக்கும் குறைவில்லை. அங்கும் இங்குமாக வெளி நாட்டு மாந்தர் சிலரும் தமிழரின் சிற்பக்கலைத் திறமையைக் கண்டு களித்துக் கொண்டிருந்தனர். இப்படியாக மக்கள் வெள்ளத்தால் மகாபலிபுரம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. இந்த வியத்தகு மகாபலிபுரக் கலைக் காட்சி, 'கலைத் தெய்வத்தின் முன்னே, சாதி, சமயம், இனம், மொழி, நிறம், நாடு, ஏழமை. செல்வம் - இன்ன பிற வேறு பாடுகளே கிடையா' என்னும் பேருண்மையை மக்கள் குலத்திற்குத் தெளிவாய் விளக்கிக்கொண்டிருந்தது.

பல நாட்டவரும் போற்றும் அளவிற்குச் சிற்பக்கலையில் கைதேர்ந்திருந்த நம் மக்கள், இடையில் அதனைக் கைவிட்ட குற்றத்திற்குக் கழுவாய் தேடிக்கொண்ட முறையில், இப்போது மகாப்லிபுரத்தில் அமைக்கப்பெற்று நடந்து வரும் 'சிற்பக் கல்லூரி', அறவணன் - அன்றில் போன்றோருக்கு அக மகிழ்வு அளிப்பதில் வியப்பில்லை.

# 9

எம். ஏ. படித்த பேராசிரியர்களாகிய அறவணனும் அன்றிலும் இப்போது பொய்கைக் கரையில் அமர்ந்து, அசைபோடும் ஆவினமாக மாறிவிட்டனர். மற்றவர் பலர் கண்ட மகாபலிபுரக் காட்சி வேறு; இவர்கள் கண்ட மகாபலிபுரமே வேறு. சுருங்கச் சொல்ல வேண்டுமானால், மற்றவர் கண்டது 'மகாபலிபுரம்'; இவர்கள் கண்டதோ 'மாமல்ல புரம்' ஆகும். இவர்கள் இருவரும் கி.பி, இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்துகொண்டே - இப்போதுள்ள மகாபலிபுரத்தை ஊனக் கண்ணால் பார்த்துக்கொண்டே - இற்றைக்கு ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகட்குமுன் சென்றுவிட்டனர். குறிப்பாக, கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு தொடங்கி ஆறாம் நூற்றண்டிலும் ஏழாம் நூற்றாண்டிலும் இருந்த மாமல்லபுரக் காட்சிகள் பல அவர்தம் மனக்கண் முன்பு மாறி மாறித் திரைப்படம் போல் ஓடிக் கொண்டிருந்தன.

அந்தக் காலத்தில் மாமல்லபுரம், காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு பேரரசு புரிந்த பல்லவ மன்னர்களின் துறைமுகப் பட்டணமாக இருந்தது. மாமல்லபுரக் கடற்கரையில் பல நாட்டுக் கப்பல்களின் நடமாட்டம் இருந்தது. பல நாட்டுப் பெரு வணிகர்களின் பெரிய வாணிகச் சந்தையாக அன்று மாமல்லபுரம் விளங்கியது என்று கூறினால் இன்று எல்லோரும் ஏற்றுக் கொள்வார்களா? அன்றிலும் அறவணனும் இதனை நன்றாக அறிவர். பொய்கைக் கரையில் அமர்ந்து அவர்கள் இது பற்றி உரையாடிக்கொண்டிருந்த போது,

* " **புலங்கொள் நிதிக் குவையோடு**
**புழைக்கைம்மா களிற்றினமும்**

* பெரிய திருமொழி: 2-6-6.

**நலங்கொள் நவமணிக் குவையும்**
**சுமந்தெங்கும் நன்றொசிந்து**
**கலங்கள் இயங்கும் மல்லைக் கடல் மல்லை''**

என்னும் திருமங்கையாழ்வாரின் பாடலை அன்றில் அறவணனுக்கு நினைவூட்டினாள். அன்று காஞ்சியிலிருந்து மல்லையெனப்படும் மாமல்லபுரம் வரையும் உள்ள இடைவெளி முழுதும், தொடர்ந்த ஒரு மாபெரு நகரமாக விளங்கியது - என்று சொல்லப்படும் ஒருவகை ஆராய்ச்சிச் செய்தியை அறவணன் அன்றிலுக்கு நினைவூட்டினார்,

முதலாம் மகேந்திரவர்மன் குன்றுகளைக் குடைந்து குகைக்கோயில்கள் அமைத்த அருமைப்பாடு, அன்றிலால் விவரிக்கப்பட்டது. அவனையடுத்து, மகாபலிபுரத்திற்கு 'மாமல்லபுரம்' என்னும் பெயர் ஏற்படக் காரணமாயிருந்த 'மாமல்லன்' என்னும் சிறப்புப் பெயர் பூண்ட முதலாம் நரசிம்மவர்ம பல்லவன், தந்தையின் பணியைத் தொடர்ந்து, கருங்கற் பாறைகளிலும் குன்றுகளிலும் நுண்ணிய வேலைப்பாடு மிக்க சிற்பங்கள் பல செதுக்கச் செய்து புரிந்த கலைப்பணியை அறவணன் பெரிதும் பாராட்டினார். அவன் வழிவந்த மன்னர்களால் அந்தக் கலைப்பணி தொடரப்பட்டது அப்போது நினைவு கூரப்பட்டது. சில சமயம், வரலாற்றுக் குறிப்புகள் பற்றி இருவரிடையேயும் சிறுசிறு கருத்து வேறுபாடுகள் காணப்பட்டதும் உண்டு.

இந்த நேரத்தில் இன்னொரு செய்தியைப் பற்றிப் பேசவும் அவர்கள் மறக்கவில்லை. அதுதான் போரின் கொடுமை. சாளுக்கிய மன்னன் புலிகேசி போன்றோருடன் பல்லவ மன்னர்கள் அடிக்கடி போர் புரிய நேர்ந்ததனாலேயே, சிற்பக் கலைப்பணி இடையிடையே நின்றுபோயிற்று. போரிலே சிற்பங்கள் பல சிதைக்கப்பட்டதாகவும் சிலரால் சொல்லப்படுகிறது. சிற்பக் கலைப்பணி சிதறடிக்கப்பட்டதோடு தமிழகத்தின் தலையெழுத்து நின்றுவிட்டதா என்ன?

உயர்ந்த ஒரு பெரிய துறைமுகப் பட்டணத்தைத் தமிழகம் இழந்து போயிற்றே! மா பெருநகரம் மண்மேடிட்ட சிற்றூராக மாறிவிட்டதே! என்னே போரின் கொடுமை! மக்களின் நிலையாமையைப்போல, மன்னர்களின் ஆட்சியின் நிலையாமையைப் போல, மாநகரங்களும் நிலைக்காமற்போய் விடுகின்றனவே என்றெல்லாம் அறவணனும் அன்றிலும் நிலையாமையைப் பற்றிப் பிதற்றும் வேதாந்திகளாக மாறிவிட்டனர். ஆனால் அந்த நேரத்தில் இவர்களைக் காணும் பிறர், காதலர் இருவர் காதல் களியாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என்றே கருதக்கூடும். ஆனால் இவர்தம் எண்ணங்களோ, இமயத்தின் எவரெஸ்ட் உச்சிக்கு மேலே சிறகடித்துப் பறந்துகொண்டிருக்கின்றன என்பதை யார் அறிவர்? போரின் கொடுமையையும் உலக நிலையாமையையும் பற்றிப் பேசிய இருவரும் பெருமூச்செறிந்து, சிறிது நேரம் வாய்பேசாது அமைதியாக அமர்ந்திருந்தனர்.

புல் கிடைக்கும் இடங்களிலெல்லாம் சுற்றித் திரிந்து போதிய அளவு மேய்ந்த பின்னர் ஆவினம் ஓரிடமாகத் தங்கிப் படுத்துக்கொண்டு, மேய்ந்தவற்றையெல்லாம் மீண்டும் வாய்க்குள் கொண்டுவந்து நன்கு மென்று அரைத்து அசைபோட்டு உள்ளே விழுங்குமாறு போல, அன்றிலும் அறவணனும் மாமல்லபுரம் முற்றும் போதிய அளவு சுற்றிப் பார்த்துப் பல்வேறு காட்சிகளைக் கண்டறிந்து, அவற்றைத் தாம் முன்பு படித்து அறிந்தவற்றோடும் கேட்டு அறிந்தவற்றோடும் இணைத்துப் பார்த்துக்கொண்டு, ஓரிடமாக அமர்ந்து அவற்றையெல்லாம் அசைபோட்டுத் தம் எண்ணத் திரையில் ஒருமுறை ஓடவிட்டுப் பார்த்து இறுதியாக அமைதியில் ஆழ்ந்து விட்டனர்.

# 10

நிலையான அமைதி நீடித்துச் 'சமாதி' நிலையில் இருக்க அன்றிலும் அறவணனும் யோகிகளா என்ன? அமைதிக்கு அன்றில் முதலில் முற்றுப்புள்ளி வைக்கத் தொடங்கினாள். அறவணனிடம் ஏதோ பேசுவதற்கு வாயெடுத்தாள். ஆனால், அறவணனின் எண்ணமும் பார்வையும் இணைந்து வேறொரு காட்சியில் ஈடுபட்டு இருந்தன. அன்றில் அறவணனிடம் பேசியும் பார்த்தாள். ஆனால் அறவணன் அவளிடம் பேசாதது மட்டுமன்று-அவள் பக்கம் திரும்பியும் பார்க்கவில்லை.

அறவணனது நிலை அன்றிலுக்கு முதலில் வியப்பாய் இருந்ததுபோக, பின்னர் வேதனையாக மாறிவிட்டது. ''அவர் ஏன் நம்மிடம் பேசவில்லை? நம் பக்கம் திரும்பியும் பார்க்கவில்லையே அவர்! இதற்குக் காரணம் என்ன? நம் மேல் ஏதேனும் வெறுப்பா? நாம் ஒரு தவறும் செய்ய வில்லையே! அவர் மனம் புண்படும்படியாக நாம் ஒன்றும் நடந்துகொள்ளவில்லையே! அப்படி நடந்திருந்தால் அவர் வெளிப்படையாகச் சுட்டிக் காட்டலாமே! 'பெண்களின் மனத்தைப் புரிந்துகொள்வது கடினம்' என்று ஆண்கள் சொல்வது வழக்கம். ஆனால் ஆண்களின் மனத்தைப் புரிந்து கொள்வதுதான் அருமைபோல் இருக்கிறதே! இப்போது என்ன செய்வது - எப்படி நடந்து கொள்வது - என்று ஒன்றுமே புரியவில்லையே'' - என்றெல்லாம் அன்றிலின் எண்ண அலைகள் அவள் உள்ளத்தோடு முட்டி மோதிக் கொண்டிருந்தன.

இந்த நிலையில் திடீரென அன்றிலுக்கு ஒரு 'காரணம்' நினைவுக்கு வந்தது. அறவணன் தன்னைப்புறக்கணிப்பதற்கு அதுதான் காரணமாயிருக்கலாம் எனக் கருதினாள். அதாவது, 'மாமல்லபுரத்தின் பழைய வரலாறு குறித்துத்

தாங்கள் இருவரும் உரையாடிக் கொண்டிருந்தபோது, அறவணன் கூறிய கருத்துகள் சிலவற்றைத் தான் மறுத்து வேறு விதமாகக் கூறியது அவரது மனத்தைப் புண்படுத்தி யிருக்கலாம். இப்போது அதை எண்ணித்தான் அவர் நம் மேல் வெறுப்புக் கொண்டிருக்கக் கூடும். அப்படியென்றால், ஆண்கள் சொல்வதைப் பெண்கள் சிறிதும் மறுத்துப் பேசவே கூடாதா? அவருந்தானே நாம் சொன்ன கருத்துகள் சிலவற்றிற்கு மறுப்பு தெரிவித்தார்! அதற்காக நாம் ஒன்றும் வருத்தப்படவில்லையே! ஆணுக்கு ஒரு நீதி - பெண்ணுக்கு ஒரு நீதி என்பது இன்னமுமா? இந்தக் காலத்திலுமா? ஒருவேளை எந்தக் காலத்திலுமே அப்படித்தானோ? அப்படி யென்றால், எதிர்காலத்தில் நாம் ஓர் ஆடவரை மணந்து கொண்டு அவருடன் ஒன்றிவாழ்வது எப்படி?' என்றெல்லாம் அன்றில் தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள்.

இப்போது அன்றிலின் மனத்தில் வேறொரு காரணம் புலப்பட்டது. அதாவது:- ''அறவணன், எப்படியாவது வாழ்ந்தால் போதும்'-என்ற வகையினரைச் சேர்ந்தவராகத் தெரியவில்லை; 'இப்படித்தான் வாழவேண்டும்'-என்பதொரு குறிக்கோள் வாழ்க்கையுடையவராகவே காணப்படுகிறார். பொதுவாக ஓரளவு கடுமையுடையவராகவே காணப் படுகிறார். முதல் சந்திப்பில் புகைவண்டியில் மேற் கொண்ட கடுமையை, மறுநாள் கல்லூரியில் நேர்முகத் தேர்வு (இன்டர்வியூ) நடைபெற்று முடிந்த பின்னரும் கை விட்டவராகத் தெரியவில்லையல்லவா? இப்போதும் அதே நிலையில் இருக்கின்றார் போலும்! மேலும், உலக நிலையாமையைப்பற்றி இப்போது பெரிய 'வேதாந்த தத்துவம்' பேசினார் ஆகையால், உலகச் சிற்றின்பத்தை வெறுக்கவேண்டும் என்னும் குறிக்கோள் உடையவராய், அக்குறிக்கோளின் ஓர் அடையாளமாகப் பெண்களுடன் பேசக் கூடாது என்ற முடிவுக்கு வந்திருப்பார் போலும்!

துறவி அறவண அடிகளின் பெயரைப் புதுமையாக வைத்துக் கொண்டிருப்பதிலிருந்தே இவரைப் பற்றி ஒரு சிறிதாயினும் புரிந்து கொள்ள முடிகிறதே! ஆடவர்களுள் சில 'பைத்தியங்கள்', எப்போதும் பெண்களுடன் சுற்றிக் கொண்டிருப்பதிலும் பெண்களுடன் பேசிக்கொண்டிருப்பதிலும் பேரின்பம் காண்பதுண்டு. வேறு சில பைத்தியங்களுக்கோ, பெண்கள் என்றால் பிடிப்பதில்லை. பெண்களுடன் இருப்பது - பெண்களுடன் பழகுவது - பெண்களுடன்பேசுவது-இவையெல்லாம் வேப்பாங்காய்வெறுப்பு! அறவணப் பைத்தியம் இந்த இனத்தைச் சேர்ந்தது போலும்! சரி, நாம் மட்டும் இவருக்கு இளைத்தவளா என்ன? இன்னும் கேட்டால், இந்தவகையில் இவரினும் கடுமையானவள் அல்லவா நாம்? இனி இங்கே - இவருடன் என்ன வேலை? இவர் யார்? நாம் யார்! எழுந்து போவோம் - என்று கன்றிய உள்ளத்துடன் அன்றில் அவ்விடத்தினின்றும் எழுந்தாள்,

காவிரிப் பூம் பட்டினத்துக் கடற்கரையில் கோவலனுக்கும் மாதவிக்கும் இடையே பிணக்கு ஏற்பட, கோவலன் அவ்விடத்திலிருந்து எழுந்து போனான். இங்கே மாமல்லபுரத்துக் கடற்கரையிலோ, அறவணனோடு பிணக்குக் கொண்டு அன்றில் எழுந்துபோகத் தொடங்கினாள். ஆனால் கோவலனும் மாதவியும் காதலர்கள். அறவணனும் அன்றிலுமோ அப்படியல்லர். நட்பு நிலையில் பிணக்குற்றே அன்றில் எழுந்தாள்.

அப்போதுதான் அறவணன் திடுக்கிட்டவராய்த் திரும்பிப் பார்த்தார்; அன்றிலின் முகத்தில் பொலிவு குன்றியிருப்பதைக் கண்டு காரணம் தெரியாது விழித்தார்; அன்றிலின் நிலைமையில் மாறுதல் நேர்ந்துள்ளதைக் குறிப்பால் உணர்ந்தார். ''ஏன், என்னவோபோல் இருக்கிறீர்கள்? ஏன் எழுந்து விட்டீர்கள்? என்னைத் தனியே விட்டு நீங்கள்

மட்டும் எங்கே புறப்படுகிறீர்கள்?'' என்று அன்றிலை நோக்கி அறவணன் கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனார்

இவ்வளவு நேரம் அன்றிலிடம் பேசாத அறவணன் - அவள் பேச்சுக் கொடுத்தும் பேசாத அறவணன் - அவளைத் திரும்பியும் பார்க்காத அறவணன் - வேறு எதிலோ கண்ணையும் கருத்தையும் ஆழ்ந்து செலுத்திக் கொண்டிருந்த அறவணன், அன்றில் எழுந்ததை எவ்வாறு அறிந்தார்?

அன்றிலும் அறவணனும் தரையில் அமர்ந்திருந்தபோது, அன்றிலின் புடவையின் முன்றானை முகப்பு தற்செயலாய்த் தரையில் படித்திருந்தது. அறவணன் தனது ஒரு கையை அன்றிலின் முன்றானைத் துணியின்மேல் வைத்து ஊன்றிய படியே அமர்ந்திருந்தார், இதனை இருவருமே கவனிக்க வில்லை, இது தற்செயலாய் நடந்த நிகழ்ச்சியே! இந்த நிலையில், அன்றில் வெடுக்கென எழுந்தபோது, அறவண னது கையின்கீழ் அகப்பட்டுக் கொண்டிருந்த அவளது முன்றானைத் துணி, அவள் நன்றாய் எழுந்து நிற்க முடியாதபடி அவளைக் கீழ்நோக்கி இழுத்தது. அதனால் அவள் துணியை வலிந்து இழுக்க அறவணனது கை ஆட்டங் கண்டது. அதனால் அவர் தமது ஆழ்ந்த சிந்தனை யிலிருந்து விடுபட்டுத் திடுக்கென அன்றிலைத் திரும்பிப் பார்த்து அவளிடம் உரையாடத் தொடங்கினார்.

அறவணனின் கேள்விகளுக்கு அன்றிலிடமிருந்து பதில் வரவேயில்லை. அவர் மீண்டும் மீண்டும் வற்புறுத்திக் கேட்டார். பின்னரே பதில் பிறந்தது - உரையாடல் தொடர்ந்தது.

''நான் உங்களிடம் எத்தனை முறையோ பேசிப் பார்த்தேன் - நீங்கள் என்னைத் திரும்பிப் பார்க்கவும் இல்லை. எனக்கு எப்படி இருக்கும்? என்மேல் ஏதோ கசப்பு

போல் இருக்கிறது என்று கருதினேன். எனவே, என்னால் உங்களுக்குத் தொல்லை இருக்கக் கூடாது என்று எழுந்து விட்டேன். நீங்கள் அவ்வாறு நடந்து கொண்டதற்குக் காரணம் என்ன என்று எனக்குத் தெரியவில்லை. நான் செய்த தவறு என்ன? விருப்பம் இருந்தால் நீங்கள் சொல்ல லாம் - இல்லாவிடின் நான் போகிறேன்''.

''என்ன இது வியப்பா யிருக்கிறதே! நீங்கள் என்னிடம் பலமுறை பேசினீர்களா? எனக்குத் தெரியாதே - நான் கவனிக்க வில்லையே! நீங்கள் பேசியதை நான் கவனித் திருந்தால் கட்டாயம் பதில் தந்திருப்பேனே! திரும்பியும் பாராமல் இருக்க நான் என்ன அவ்வளவு கொடியவனா? நீங்கள் ஒரு சிறு தவறும் செய்திருப்பதாக எனக்கு ஒன்றும் தோன்றவில்லையே! அன்பு கூர்ந்து மனத்தை மாற்றிக் கொண்டு அமைதியாக அமருங்கள்!''

''நான் தங்களிடம் பேசியபோது நீங்கள் என்னைக் கவனிக்காமல் வேறு விதமாய் இருந்ததற்குரிய காரணத் தைத் தயைகூர்ந்து தெரிவிக்கலாமா?''

''ஓ, அதுவா? நான் இதோ தண்ணீரில் உள்ள வேலம் பாசிச் செடிகளைக் கவனித்துக் கொண்டிருந்தேன். அந்த நேரத்தில் நீங்கள் என்னிடம் பேசியிருக்கிறீர்கள். நான் அந்தச் செடிகளின் வாழ்க்கை முறையைப் பற்றி ஆழ்ந்து சிந்தனை செய்து கொண்டிருந்ததால்; உங்களைக் கவனியா திருந்துவிட்டேன். நடந்தது இதுதான். நான் உங்களைக் கவனியாமல் உங்கள் மனத்தைப் புண்படுத்தியதற்காக மிகவும் வருந்துகிறேன். அன்புகூர்ந்து என்னை மன்னிக்க வேண்டுகிறேன்''.

''உண்மை அதுவானால், நீங்கள் வருந்தவும் தேவை யில்லை. நான் உங்களை மன்னிக்கவும் வேண்டியதில்லை''.

''நான் சொல்வது உண்மை! உண்மை!''

''சரி! அவ்வளவு ஆழ்ந்து கவனித்து அந்த வேலம்பாசிச் செடியில் என்ன கண்டீர்கள்? அன்பு கூர்ந்து அதனை எனக்கு அறிவிக்கலாமா? அறிவிப்பதில் தங்களுக்குத் தடை யொன்றும் இல்லையே?''

''எனக்குத் தடை யொன்றும் இல்லை. நீங்கள் கேட்பதற்கு ஆயத்தம் என்றால், நான் அறிவிக்கவும் ஆயத்தம்.

''தெரிவிக்கும்படி நான்தானே விரும்பிக் கேட்கிறேன்! இனி நீங்கள் சொல்ல வேண்டியதுதான்!''

''சொல்லலாம். ஆனால்....... ''

''ஆனால் என்ன? ஏன் என்னவோபோல் இழுக்கிறீர்கள்?''

''ஒன்றும் இல்லை. ஒரு பெண்ணிடம் அதைப் பற்றிச் சொல்லக் கூச்சமாயிருக்கிறது''.

''ஏன், சொல்லக்கூடாத செய்தியா?''

''அப்படி யொன்றும் இல்லை. நாம் இளமையில் பள்ளிக்கூடத்தில் படித்த செய்திதான்!''

''அப்படியானல் சொல்லலாமே! எனக்கும் நினைவு படுத்தி மகிழ்விக்கலாமே!''

''சரி, தொடங்கி விடுகிறேன். நாம் 'இயற்கை அறிவியல்' (Natural Science) பாடத்தில் மரஞ்செடி கொடிகளைப் பற்றிப் படித்திருக்கிறோம் அல்லவா? அதில், பூக்களின் மகரந்தச் சேர்க்கையைப் பற்றிய பாடம் ஒரு சுவையான பகுதி''.

''ஆம்! அதிலேயே 'தன் மகரந்தச் சேர்க்கை', 'பிற மகரந்தச் சேர்க்கை' என இரு பிரிவுகள் உண்டு''.

''சரிதான்! நன்றாக நினைவு வைத்திருக்கிறீர்களே!''

''தாவர இயலைப் பற்றி ஓரளவுதான் எனக்குத் தெரியும். நான் 'பள்ளி இறுதி வகுப்பு' (S. S. L. C.)

வரையிலுந்தான் 'இயற்கை அறிவியல்' படித்தேன். பிறகு 'எம்.ஏ.' பட்டம் பெறும் வரையிலுமே வேறு வேறு பாடங்கள்தான் எடுத்துக் கொண்டேன். 'தாவர அறிவியல்' எடுத்துக் கொள்ளவேயில்லை''.

''நான் அப்படியில்லை, 'எம்.ஏ.' தேர்வுக்குத்தான் தமிழ் எடுத்துக் கொண்டேனே தவிர, மற்றபடி 'பி.ஏ.' தேர்வு வரை தனிச் சிறப்புப் பாடமாகத் தாவர இயல்தான் (Botany) எடுத்துப் படித்தேன். எனவே, இது பற்றிய விவரங்களை நான் ஏறக்குறைய அறிவேன்''.

''மிகவும் நல்லது. விவரமாகச் சொல்லுங்கள்''.

''பூவின் ஆண் பாகத்தில் உள்ள மகரந்தப் பொடி பூவின் பெண்பாகத்துள் விழுந்து தொடர்பு கொண்டால் தான் பெண்பூ கருவுற்றுக் காய் காய்க்கும். இதற்குத்தான் 'மகரந்தச் சேர்க்கை' என்று பெயர். பூவரசம் பூ, அகத்திப் பூ முதலிய 'இணையினப் பூ வகையில், ஒரே பூவில் ஆண்பாகம், பெண்பாகம் ஆகிய இரண்டும் இருக்கும். இவ்வகைப் பூக்களில் மகரந்தச் சேர்க்கை தன்னில்தானே இயற்கையாக நிகழும். இதற்குத்தான் 'தன் மகரந்தச் சேர்க்கை' என்று பெயர்.''

''ஓகோ, புரிகிறது!''

''அடுத்து, ஆமணக்கு, குப்பை மேனி, பூசணி, பாகல் முதலிய 'ஈரினப் பூஞ்செடி கொடி' வகையில், ஒரே செடியில் ஒரே கொடியில் ஒரு பூ ஆண் பூவாகவும் மற்றொரு பூ பெண் பூவாகவும் இருக்கும். ஆண் பூவிலிருந்து பெண் பூவிற்கு வண்டு, தேனீ முதலியவற்றின் மூலமாக மகரந்தச் சேர்க்கை ஏற்படும். இதற்குப் 'பிற மகரந்தச் சேர்க்கை' என்று பெயர். ஆண் பனை - பெண் பனை, ஆண் கோவை - பெண் கோவை முதலிய 'தனி ஓரின மரஞ்செடி கொடி'

வகையில் ஏற்படும் சேர்க்கை நூற்றுக்கு நூறு பிற மகரந்தச் சேர்க்கையாகும்; அதாவது, ஆண் மரம் - செடி - கொடிகளும் பெண் மரம் - செடி - கொடிகளும் தனித்தனியே - தனித்தனியிடத்தில் இருக்கும். ஆண் மரம் - செடி - கொடிகளிலுள்ள ஆண்பூக்களில் இருக்கும் மகரந்தப் பொடி, பெண் மரம் - செடி - கொடிகளிலுள்ள பெண்பூக்களுக்குக் காற்று, வண்டு, தேனீ முதலியவற்றின் மூலமாகக் கொண்டு செல்லப்பட்டுத் தொடர்பு ஏற்படும்; அதனால் பெண் பூக்கள் கருவுற்றுக் காய்க்கும். 'ஓர் அறிவு உயிர்' எனப்படும் தாவரங்களுக்குள்ளும் ஆண் - பெண் உறவு எவ்வளவு அருமையாக நடக்கிறது பாருங்கள். இயற்கையின் விளையாட்டை என்னென்பது!''

''சரி! வண்டு, தேனீ முதலியவை வராவிடின், ஆண் பூக்களிலிருந்து பெண் பூக்களுக்கு மகரந்தச் சேர்க்கை கிடைப்பது எப்படி?''

''வண்டுகளும் தேனீக்களும் வராமல் இருக்கமுடியாதே! பெண்பூக்கள் வண்டுகளையும் தேனீக்களையும் மயக்கித் தம் பக்கம் இழுக்கின்றனவே! வந்துதானே தீரவேண்டும்!''

''அது என்ன புதிர் போடுகிறீர்கள்? பெண் பூக்கள் எப்படி மயக்குகின்றன?''

''ஓ, அதுவா? பெண்பூக்கள் கவர்ச்சியான நிறமும் மனமும் உடையனவாயிருப்பதிலுள்ள நுண்பொருள் அது தான். தம் நிறத்தாலும் மணத்தாலும் வண்டுகளைக் கவர்ந்து இழுக்கின்றன. ஆண்பூக்களில் மொய்த்த வண்டுகள் பெண்பூக்களை நோக்கி வருகின்றன. இப்படியாக வண்டுகள் என்னும் தூதுவர் மூலம் ஆண்பூக்களின் தொடர்பு பெண்பூக்களுக்குக் கிடைக்கிறது. இதனை நம் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் கூட மிக அழகாகச் சொல்லியுள்ளாரே! சூரிய காந்தி மலரைப்பற்றிய அவரது பாடலிலுள்ள

**'மஞ்சள் குளித்து முகம் மினுக்கி - இந்த
மாயப் பொடி வீசி நிற்கும் நிலை'**

என்னும் பகுதி சுவையுடன் பொருள் செறிந்தது. மஞ்சள் பூசி முகத்தை மினுக்கி ஆடவரை மயக்கச் 'சொக்குப் பொடி' வீசுவதாகப் பெண்கள் சிலரைப் பற்றி வேடிக்கையாகச் சொல்வதுண்டு. அந்தக் கருத்தை உள்ளடக்கி இருபொருள் அமையக் கவிமணி பாடியுள்ளார். சூரியகாந்தி மலரும் நிறத்துடன் மினு மினுப்பாய், காண்பவரை மயக்குகிறதல்லவா? அவ்வளவு ஏன்?

**'வண்டின் வரவு எதிர்பார்த்து நிற்போம் - நல்ல
வாசனை வீசி நிற்போம்'**

என்று மலர்களே கூறுவதுபோல வைத்துக் கவிமணியவர்கள் வேறோரிடத்தில் இதனை வெளிப்படையாய்க் கூறியுள்ளாரே! எல்லாம் சரிதானே அன்றில்? பேசாமல் இருக்கிறீர்களே! நீங்களும் சொல்லுங்கள்!''

''நான் உங்களை ஒன்று கேட்கவேண்டியிருக்கிறது; பிறகு கேட்கிறேன். இது சார்பாக இன்னும் சொல்ல வேண்டியதிருந்தால் நீங்கள் சொல்லி முடித்து விடுங்கள்!''

''சொல்லவேண்டியதா! இன்னும் எவ்வளவோ சொல்ல வேண்டும். இருப்பினும், ஒன்றிரண்டு மட்டும் சொல்லி முடித்துக் கொள்கிறேன். இருள் சூழத் தொடங்கும் மாலை நேரத்தில் மலரும் மல்லிகைமுல்லை முதலான மலர்கள் மணமுடன் பளிச்சிட்ட வெண்ணிறமா யிருப்பதற்குக் காரணம், வண்டுகளை மயக்கி வரவேற்கும் நோக்கமே. இருட்டு வேளையில் வெண்ணிறந்தானே பளிச்சிட்டுக் காட்டிப் பார்ப்பவரைக் கவரும். இதுபற்றி யனோன் மணீயம் என்னும் காவியத்தில் நீங்களும் படித்திருக்கலாமே! அதாவது:

**"...... .... நிசியலர் மலர்க்கு**
**வெண்மையும் நன்மணம் உண்மையும் இலவேல்**
**எவ்வணம் அவற்றின் இட்ட நாயகராம்**
**ஈயினம் அறிந்துவந் தெய்திடும்? அங்ஙனம்**
**மேவிடில் அன்றோ காய்தரும் கருவாம்?"**

என்று ஆசிரியர் சுந்தரம் பிள்ளை பாடியுள்ளாரே. ஒரு சிறு புல் கூட ஈக்களை மயக்கி அழைப்பதாக அதே நூலில்,

**'இதோஒ! இக்கரை முளைத்த இச்சிறுபுல்**
**சதாதன் குறிப்பொடு சாருதல் காண்டி**
**அதன் சிறு பூக்குலை அடியொன் றுயர்த்தி**
**இதமுறத் தேன்துளி தாங்கி ஈக்களை**
**நலமுற அழைத்து நல்லூண் அருத்திப்**
**பலமுறத் தனது பூம்பராகம் பரப்பித்து**
**ஆசிலாச் சிறுகாய் ஆக்கி இதோ ...'**

என்று அழகாக ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். ஓர் அறிவு உடையதெனச் சொல்லப்படும் ஒரு சிறு புல்லும் காதல் வாழ்க்கை நடத்தும் அருமை பெருமையை அறியும்போது எவ்வளவு வியப்பாயிருக்கிறது பாருங்கள்! சரி, நான் சொல்லி முடித்துவிட்டேன். நீங்கள் ஏதோ என்னைக் கேட்கப் போவதாகக் கூறினீர்களே! இனிக் கேட்கலாம்."

"நீங்கள் இதுவரை கூறிவந்த செய்திகளைக் கூர்ந்து கேட்டுக்கொண்டு வந்தேன். ஆனால், நீங்கள் செய்திகளைத் தெரிவித்து வந்த முறையில் 'ஒருதலைச் சார்பு' இருந்ததை உணர்ந்தேன்"

"அது என்ன ஒருதலைச் சார்பு?"

"அதுவா? பெண் பூக்கள் ஆண் பூக்களின் தயவை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாக உங்களது பேச்சின் போக்கு குறிப்புக் காட்டுகிறது. அதாவது, பெண் பூக்கள்

வலிந்து வருந்தி முயன்று ஆண் பூக்களின் காதலுக்குத் தவம் கிடப்பதாக உங்களது பேச்சு தெரிவிக்கிறது. இது சரியா?''

''ஏன்? நான் சொன்னதில் என்ன தவறு? அப்படியே பெண் பூக்கள் ஆண் பூக்களின் தொடர்பை எதிர்பார்ப்பதிலும் தவறு ஒன்றும் இல்லையே—தாழ்வு ஒன்றும் இல்லையே! இயற்கையின் அமைப்பு இது. இதற்கு யார் என்ன செய்ய முடியும்-யார் என்ன கூறமுடியும்?''

''தயவுசெய்து என்னை மன்னிக்க வேண்டும். இந்தக் கருத்தை நான் முழுதும் ஏற்றுக் கொள்வதற்கில்லை. உங்கள் கருத்து வெளிப்பாடு பெண்மையைக் குறைத்து மதிப்பிடுவதாகக் காணப்படுகிறது. அதிலும் ஒரு பெண் எதிரிலேயே நீங்கள் இப்படிப் பேசுவது எனக்கு என்னவோ போல் இருக்கிறது. நீங்கள் என்னிடம் இவ்வாறு பேசுவதின் உள் நோக்கம் என்ன என்று எனக்குப் புரியவில்லை.''

''பெண்மையைக் குறைத்துப் பேச வேண்டும் என்று எள்ளளவும் எண்ணவில்லையே. மேலும், எனக்கு எந்த உள் நோக்கமும் கிடையாது. இது உண்மை. வேண்டுமானால், நீங்கள் தக்க காரணம் காட்டி என் கருத்துகளை மறுக்கலாமே!''

''ஆண் பூக்களிடமிருந்து மகரந்தத் தூளைக் கொண்டு வருவதற்காக வண்டுகளைத் தம்பால் இழுக்கப் பெண்பூக்கள் தம்மைக் கவர்ச்சியாக வைத்துக் கொள்கின்றன என்று கூறினீர்கள். அப்படியென்றால், அந்த வண்டுகள் முதலில் ஆண் பூக்களிடம் சென்றது எவ்வாறு? ஆண் பூக்களிடம் கவர்ச்சி இல்லையெனில் வண்டுகள் அவற்றினிடம் மட்டும் எவ்வாறு செல்லும்? வண்டுகள் ஆண் பூக்களிடம் இயற்கையாகச் செல்கின்றன என்றால், அவ்வாறே பெண் பூக்களிடமும் இயற்கையாகச் செல்லலாம் அல்லவா? எனவே, பெண்

பூக்கள் வலிந்து வருந்தி முயன்று ஆண்பூக்களின் காதலைப் பெறத் தவம் கிடக்கின்றன என்ற மாதிரியில் பேசுவதை ஏற்றுக் கொள்வதற்கில்லை.''

''ஊம், அப்புறம் ....''

''எப்படிப் பார்க்கினும் பெண் பூக்களைக் குறைத்து மதிப்பிடுவதற்கில்லை. அப்படியே பெண் பூக்கள் தம்மைக் கவர்ச்சியாக வைத்துக் கொண்டிருக்கின்றன என்றாலும், பெண் பூக்கள் இருந்த இடத்திலேயேதானே இருந்து கொண்டிருக்கின்றன? ஆண் பூக்களின் மகரந்தம்தானே, வண்டு போன்ற எதன் மூலமாகவாவது பெண் பூக்களைத் தேடி வந்து அடைகின்றன. எனவே, பெண்மை ஆண்மையைத் தேடிச் செல்வது இயற்கையின் அமைப்பாகத் தெரியவில்லை; ஆண்மை பெண்மையை நாடி வருவதே இயற்கையின் நியதியாகத் தெரிகிறது.''

''ஐயையோ! நீங்கள் பேசுவதைப் பார்த்தால், நான் ஏதோ உள்நோக்கம் வைத்துக் கொண்டு வேண்டுமென்றே பெண்மையைக் குறைத்து எடைபோட்டு விட்டதாக நீங்கள் எண்ணிவிட்டீர்கள் என்று தெரிகிறது. பெண் பூ எதிர் பார்த்தால் என்ன? ஆண் பூ சென்று அடைந்தால் என்ன? இதனால் ஒன்றுக்குக் குறைவு-மற்றொன்றுக்கு நிறைவு – என்பதாக ஒன்றும் இல்லை. நான் இவ்வளவு நேரம் இயற்கையைப் பற்றி இயற்கையாகவே பேசினேன். பெண் பூ பெருமிதத்தோடு இருந்த இடத்திலேயே இருக்க, ஆண் பூவின் மகரந்தம்தான் பெண் பூவைத் தேடி அடைகிறது என்று நீங்கள் கூறிய கருத்தை நான் நூற்றுக்கு நூறு ஏற்றுக் கொள்கிறேன். பெண்மையின் பெருமையைப் போற்றுகிறேன்?''

''ஆண்மையைத் தூற்றவேண்டும் — பெண்மையைப் போற்ற வேண்டும் என்று நான் எதிர்பார்க்க வில்லையே.''

''எது எப்படியோ போகட்டும்! பொதுவாக, ஆண் பெண்ணை நாடிச் செல்கிறது என்ற கருத்தை நான் மறுக்காது ஏற்றுக் கொள்கிறேன். அதற்குத் தக்க சான்று வேண்டுமானால், இதோ, நீருக்குள் இருக்கிற இந்த வேலம் பாசிச் செடியின் வாழ்க்கை முறையே போதும். நான் அதை உற்றுக் கவனித்துக் கொண்டிருந்ததனால் தானே, முன்பு நீங்கள் என்னிடம் பேச்சுக் கொடுத்ததை அறியாது போனேன்.''

''வேலம் பாசிச் செடியின் வாழ்க்கையை விளக்கமாகச் சொல்லுங்களேன்!''

''சொல்கிறேன். வேலம்பாசிச் செடியின் காதல் வாழ்வு வியப்பினும் வியப்பு! இந்தச் செடி தண்ணீருக்குள்ளேயே இருக்கும்; மேல் மட்டத்தில் தெரியாது. மேலும் இது, 'தனி ஓரினப் பூஞ்செடி' வகையைச் சேர்ந்ததாகும். அதாவது, ஆண் வேலம் பாசிச் செடிகள் வேறு. பெண் வேலம்பாசிச் செடிகள் வேறு. ஆண் செடிகளில் ஆண் பூக்கள் இருக்கும்; பெண் செடிகளில் பெண் பூக்கள் இருக்கும். இவற்றிற்குள் மகரந்தச் சேர்க்கை உண்டாக வேண்டுமே! அப்படி உண்டாக்குவதற்காக வண்டு முதலியனவும் தண்ணீருக்குள் முழுகி வரமுடியாதல்லவா? இந்த நிலையில் மகரந்தச் சேர்க்கை ஏற்பட்டுப் பெண்பூக்கள் கருக் கொள்வது எவ்வாறு? இதற்காக இம் மலர்கள் கையாளும் வழி வியப்பிற் குரியது. அதாவது: நீருக்குள் இருக்கும் ஆண் வேலம்பாசிச் செடியிலிருந்து பருவம் முற்றிய-உருண்டை வடிவமான ஆண் பூக்கள் பிரிந்து நீரின் மேல் மட்டத்துக்கு வந்து காதலிகளைத் தேடி-அதாவது பெண் பூக்களைத் தேடி மிதந்து திரிந்துகொண்டிருக்கும். அதேபோல, தண்ணீருக்குள் இருக்கும் பெண் வேலம் பாசிச் செடியிலுள்ள பருவம் முதிர்ந்த பெண் பூக்கள் காதலர்களைத் தேடி-அதாவது ஆண்பூக்களைத் தேடி, தாம்மட்டும் தண்டுடன் நீர் மட்டத்

திற்கு மேலே வந்து தலையை நீட்டிக் கொண்டிருக்கும். இங்கே ஆண் பூக்களுக்கும் பெண் பூக்களுக்கும் இடையே உள்ள வேறுபாடு என்ன என்றால், ஆண் பூக்கள் செடியி லிருந்து பிரிந்து தனியே வந்து, நீரின் மேலே மிதந்து திரியும்; பெண் பூக்களோ செடியிலிருந்து பிரியாமல். செடியோடு செடியாய் இருந்துகொண்டே, தாம் இருக்கும் தண்டுகளை மட்டும் மேலே உயர்த்தி நீருக்குமேல் நன்கு தெரியும்படி நீட்டிக் கொண்டிருக்கும். இந்நிலையில், ஆண் செடியிலிருந்து பிரிந்து மேலே மிதந்து கொண்டிருக்கின்ற ஆண் பூக்கள், மேலே நீட்டிக் கொண்டுள்ள பெண் பூக்களை அடைந்து மகரந்தச் சேர்க்கை கிடைக்கச் செய்யும். பிறகு பெண் பூக்கள் தண்ணீருக்குள் இறங்கிக் கருவுற்று வளரும். இயற்கையின் விந்தைதான் என்னே!''

''ஆம்! இதனை அறியும்போது மிகவும் வியப்பாய்த் தான் இருக்கிறது!''


''இப்போது உங்கள் கட்சிக்குத்தான் வெற்றியல்லவா?''

''அது என்ன வெற்றி?''

''அதாவது: வேலம்பாசிச் செடிகளில் பெண்பூக்கள் இருந்த இடத்திலேயே இருக்கின்றன; ஆனால், ஆண் பூக்களே செடிகளிலிருந்து பிரிந்து பெண்பூக்களைத் தேடி வருகின்றன. எனவே உங்கள் கட்சிக்குத்தான் வெற்றி. இப்போது உங்களுக்கு மனநிறைவு தானே? இனி என்மேல் வருத்தம் இருக்காது என்று எண்ணுகிறேன்''.

''அது சரி. நீங்கள் நெடுநேரம் வேலம்பாசிச் செடிகளை உற்று நோக்கிக் கொண்டிருந்ததாகச் சொன்னீர்களே. இப்போது இந்தத் தண்ணீரில், வேலம்பாசிச் செடியின் ஆண் பூக்களையும் பெண் பூக்களையும் எனக்குக் காண்பிக்கலாமா?''

''ஓ இதோ பாருங்கள்! இந்தத் தெளிந்த தண்ணீருக்குள்



**(வேலம் பாசிச் செடிகள்)**

இரண்டு வேலம் பாசிச் செடிகள் தெரிவதைப் பாருங்கள்! இதோ வலக்கைப் பக்கம் இருப்பது ஆண் செடி, அதோ இடக்கைப் பக்கம் இருப்பது பெண் செடி. இதோ, ஆண் செடியிலிருந்து உருண்டை வடிவமான ஆண்பூக்கள் பிரிந்து மேல் நோக்கிச் சென்று நீரின் மேல்மட்டத்தில் மிதந்து கொண்டிருப்பதைக் காணுங்கள். அதோ, பெண் செடி தனது பூவை மட்டும் தண்டோடு தண்ணீரின் மேல் மட்டத்திற்கு நீட்டி ஆண் பூவோடு தொடர்பு கொள்வதைக் காணுங்கள்''.

''ஆமாம்! மிகவும் விந்தையாய் இருக்கிறது''.

''நாம் தண்ணீரில் இறங்கிச் செடிகளைத் தொட்டுப் பார்க்கலாமா? சில பூக்களையும் கைகளில் எடுத்துப் பார்க்கலாமே!'' வாருங்கள், தண்ணீரில் இறங்குவோம்''.

''சரி, அப்படியே செய்வோம்''.

இவ்வாறு உரையாடிக் கொண்டே அறவணனும் அன்றிலும் தண்ணீரில் இறங்கினர். நீரில் மிதந்து கொண்டிருக்கும் ஆண்பூக்கள் இரண்டை அன்றில் கையில் எடுத்துப் பார்த்துக்கொண்டிருந்தாள். அறவணன் கைக்கு ஒரு பூவும் அகப்படவில்லை. ''ஆண் பூக்கள் உங்கள் கைக்குக் கிடைத்து விட்டனவே! ஆனால் என் கைக்குத் தான் ஒன்றும் கிடைக்கவில்லை. மேலே நீட்டிக்கொண் டிருக்கும் அந்தப் பெண் பூவைப் பறிக்கலாம் என்றால் அது என் கைக்கு எட்டாத தொலைவில் ஆழத்தில் இருக்கிறது. நான் கடினமான முயற்சி எடுத்துக்கொண்டால்தான் பெண் பூ என் கைக்குக் கிடைக்கும்போல் தெரிகிறது'' என்று அறவணன் கூறினார். அவர் கூறுவதில் 'இருபொருள்' இருப்பதாக எண்ணி அன்றில் புன்முறுவல் பூத்துக்கொண்டே தலையை நட்டுக்கொண்டாள்.

அப்போது, அந்தப் பொய்கையின் எதிர்க்கரையிலே இயற்கைக் காட்சிகளைப் படம் பிடிப்பதற்காகப் புகைப்படக் கருவிகளுடன் இருவர் நடமாடிக் கொண்டிருந்தனர். அன்றிலும் அறவணனும் அவர்களைப் பார்த்ததும், 'நம்மைப் படம் பிடித்து விடுவார்களோ என்னவோ' என்று நடுங்கினர்.

அந்த நேரத்தில், சுற்று வட்டாரத்தில் இருந்த மக்கள் அங்கே வந்து சூழ்ந்து கொண்டனர். திரைப்படம் பிடிப்பவர்கள் அங்கே வந்திருப்பதாகவும், காதலனும்

காதலியும் பொய்கையில் காதல் விளையாட்டு நடத்துவதாகவும், அந்தக் காட்சி படம்பிடிக்கப்படுவதாகவும், கருதிக் கொண்டு மக்கள் கும்பல்கூடிக் கூச்சல் போடத் தொடங்கினர். நல்ல வேளையாக, புகைப்படக்காரர்கள் அன்றிலையும் அறவணனையும் இன்னும் படம் எடுக்கவில்லை. அதற்குள் அன்றிலும் அறவணனும் விழுந்தடித்துக் கொண்டு கரையேறி விரைந்து நடக்கத் தொடங்கினர். 'நாங்கள் சினிமாக்காரர்கள் அல்லர்; உங்களைப் போலவே மகாப்லிபுரம் பார்க்க வந்தவர்கள்' என்று அறவணன் தெரிவித்ததும் மக்கள் விலகி விட்டனர்.

அறவணன், பின்னால் வந்துகொண்டிருந்த அன்றிலைத் திரும்பிப் பார்த்தார். பின்னால் அவளைக் காணாததால் திடுக்கிட்டார். ஆனால் அன்றிலோ, அறவணனுக்கு முன்னால் வெகு விரைவாக நடந்துகொண்டிருந்தாள். இதுபோன்ற நேரத்தில் ஆண்களினும் பெண்களின் நடையில் விரைவு மிகுதியாகிவிடும் போலும்! முன்னால் விரைந்து சென்று கொண்டிருந்த அன்றிலை அறவணன் மிக விரைந்து சென்று அடைவதற்கும், அப்போது சென்னைக்குப் புறப்படத் தயாராகிக்கொண்டிருந்த பேருந்து வண்டியில் அன்றில் கால் வைத்து ஏறுவதற்கும் சரியாயிருந்தது. அன்றிலைத் தொடர்ந்து அறவணனும் அந்த வண்டியில் ஏறிக் கொண்டார்.

பல்வேறு மக்களையும் சுமந்து கொண்டு பயணம் செய்து பேருந்து வண்டியானது சென்னையை நெருங்கிச் சென்று கொண்டிருந்தது. அறவணன் இறங்குவதற்கு முன்பே, குறிப்பிட்ட ஓரிடத்தில் முன்னதாக அன்றில் இறங்கிக்கொண்டாள். கண்களால் கருத்து அறிவித்துக் கொண்டு தலையசைப்பால் இருவரும் விடைபெற்றுக் கொண்டனர். தமக்குரிய இடம் வந்ததும் அறவணனும் இறங்கிக் கொண்டார்.

மகாபலிபுரத்தில் ஒருநாள் அன்று - ஓராயிரம் ஆண்டு காலம் இணைந்து பழகியவர்கள் இப்போது இயற்கையால் பிரித்து விடப்பட்டது போன்ற உணர்வுடன் அன்றிலும் அறவணனும் நடக்கமுடியாமல் நடந்து சென்று தத்தம் இல்லம் அடைந்தனர். வீட்டை யடைந்துங்கூட, எங்கு நோக்கினும் வீடு முழுதும் மகாபலிபுரமாகவே அவர்கட்குக் காட்சியளித்ததில் வியப்பில்லை.

# 11

மகாபலிபுரம் போய்வந்தபின் பத்து நாள் கழித்து, அறவணனுக்கு அவர் தந்தை முருகப்பனிடமிருந்து கடிதம் வந்தது. 'அம்மாவுக்கு உடம்பு சரியாயில்லை. இங்கே சில ஏற்பாடுகள் செய்தாகவேண்டும். அதனால் உடனடியாகப் புறப்பட்டு ஊருக்கு வருக!' என்று முருகப்பன் எழுதியிருந்தார். மறுநாள் அறவணன் புகைவண்டி மூலமாகக் காரைக்குடிக்குப் புறப்பட்டார்.

புகைவண்டி விழுப்புரம் சந்திப்பில் வந்துநின்றது. அங்கே சிற்றுண்டி அருந்துவதற்குப் போதிய அளவு நேரம் வண்டி நிற்கும். அறவணன் வண்டியிலிருந்து இறங்கிப் புகைவண்டி நிலையச் சிற்றுண்டி விடுதிக்குச் சென்றார். அங்கே அப்போதுதான் ஒரு நாற்காலியில் வந்து அமர்ந்த அன்றிலை எதிர்பாராது கண்டு வியந்தார்-மகிழ்ந்தார்-உரையாடத் தொடங்கினார்.

''ஓ! நீங்களும் ஊருக்குப் போகிறீர்களா: எதிர்பாராது உங்களைக் கண்டது பற்றி மிக்க மகிழ்ச்சி! மகாபலிபுரத்தில் பழகியதற்குப்பின் பத்து நாள் அளவிலேயே மீண்டும் சந்தித்து விட்டோமே! நான் எங்கள் ஊராகிய காரைக் குடிக்குச் செல்கிறேன் 'அம்மாவுக்கு உடம்பு சரியில்லை; சில ஏற்பாடுகள் செய்யவேண்டும். உடனே புறப்பட்டு வருக' என்று அப்பா எழுதியிருந்தார். அதனால் புறப்பட்டுச் செல்கிறேன். நீங்கள் என்ன-உங்கள் ஊராகிய திருச்சிக்குத் தான் செல்கின்றீர்களா? அல்லது வேறிடத்துக்குச் செல்கின்றீர்களா? ஏதேனும் சிறப்புச் செய்தி உண்டா?''

'' ......''

''ஏன் பேசாமல் இருக்கிறீர்கள்? உங்கள் முகம் வருத்தமாய்க் காணப்படுகிறதே! ஏதேனும் துயரச் செய்தி

வந்ததா? ஊரில் யாருக்கும் ஒன்றும் இல்லையே? உங்கள் தாய் தந்தையர் நலம் தானே?''

''... ...''

''ஏன் மறுபடியும் பேசாமல் இருக்கிறீர்கள்? என்மேல் ஏதேனும் வருத்தமா? சினமா? தயவுசெய்து சொல்லுங்கள்''

''தயவு செய்ய வேண்டியது நான் இல்லை-நீங்கள் தான். தயவு செய்து என்னைத் தனியே விட்டு இந்த இடத்தினின்றும் அகன்று விடுங்கள். இனி என்னிடம் எங்கும் என்றும் எதுவும் பேசவே வேண்டாம். என்னோடு இனி என்றும் எங்கும் எந்தத் தொடர்பும் கொள்ளவே வேண்டாம். தயவுசெய்து போய்விடுங்கள்.''

''போய்விடுகிறேன். ஆனால், உங்களோடு பேசியோ-தொடர்பு கொண்டோ எனக்கு ஆகவேண்டியது ஒன்றுமில்லை. ஏதோ, பழகியவர்களை வழியில் பார்த்துவிட்டோமே! பேசாமல் போவது பண்பன்று என்ற மனித நாகரிகத்திற்காகத் தங்களிடம் பேசினேன். வேறொன்றுமில்லை.''

''என்னிடம் இனி எந்த நாகரிகத்துடனும் நடந்து கொள்ள வேண்டியதில்லை. போகலாம்.''

''போகத்தான் போகிறேன். ஆனால், நீங்கள் எதிர்பாராது என்னிடம் இவ்வாறு நடந்து கொள்வதற்குக் காரணம் என்ன? என்னிடம் ஏதேனும் தவறு உண்டா? தெரிவித்தால் திருத்திக் கொள்ளலாம் என்று கருதியே இவ்வளவு கெஞ்சிக் கேட்கிறேன். தவறு இருப்பின் தயை கூர்ந்து அறிவிக்க வேண்டுகிறேன். அதைக் கேட்டுவிட்டு உடனே ஓடி விடுகிறேன்''.

''உங்கள்மேல் நான் தவறு சொல்ல என்ன இருக்கிறது? என் தந்தையாரிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது. இதோ

அந்தக் கடிதம்! படித்துப் பாருங்கள். பின்னர் நீங்களே என் நிலைமைக்குக் காரணம் தெரிந்து கொள்வீர்கள். பின்னர் நான் விரும்பினும், இங்கே நில்லாமல் நீங்களாகவே ஓடிவிடுவீர்கள். இதோ கடிதம்!''

அன்றில் தந்த கடிதத்தை வாங்கி அறவணன் ஆவலுடன் படிக்கத் தொடங்கினார். அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:-

அன்புள்ள குழந்தை அன்றிலுக்கு,

நலம். நலமே பெருகுக!

நீ உன் கல்லூரி வேலையை ஒழுங்காகச் செய்து கொண்டிருப்பாய் என நம்புகிறேன். நீ சென்னைக்குச் சென்று நாளாகிறதால் ஒரு முறை ஊருக்கு வந்து போவது நல்லது. மேலும், உனக்குத் திருமண ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறேன், ஏறத் தாழத் திருமண ஏற்பாடு முடிந்துவிட்டது என்று கூடச் சொல்லலாம். இதற்கு முன் வந்த மாப்பிள்ளை வீட்டார் எவரும் நமக்கு ஒத்து வர வில்லை என்பது நீ அறிந்ததே! ஆனால் இப்போது கிடைத் திருப்பவர்கள் மிகவும் பொருத்தமானவர்கள். நம் வழிக்கு ஒத்து வருகிறார்கள், அதனால் அவர்களுக்கு முடிவும் கொடுத்துவிட்டேன். உன் அண்ணன் இளந்திரையனும் ஒத்துக் கொண்டான்.

ஆனால் உனது உடன்பாட்டைக் கேட்கவில்லையே என்பதாக நீ குறைப்படலாம். இனி நீ குறைப்பட்டுப் பயனில்லை. எல்லாம் முடிவாய்விட்டது. அன்றியும், உன்னைக் கேட்டுக்கொண்டிருந்தால் ஒன்றும் முடிவு பெறாது. உன் உடன் பாட்டைக் கேட்கவும் நான் விரும்ப வில்லை. ஏனெனில், உன்னைக் கேட்டால் நீ ஒத்தக் கொள்ளமாட்டாய் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

குடும்பப் பெருமையை மறந்த குழந்தாய் அன்றிலே! அப்பா ஒருவர் இருக்கிறார்-அண்ணன் ஒருவன் இருக்கிறான்-அவர்கள் இருவரும் அறிந்தால் மானம் பறிபோயிற்றே என்று மனம் வெம்பி வெயிலில் அகப்பட்ட புழுப்போல் துடிப்பார்களே என்பதை உணராது மறந்து மானக் கேடாய் நடந்து கொண்ட மட அன்றிலே! இனியும் உன் திருமணத்தை ஒத்திப்போட முடியாது. உன்னைக் கேட்டும் ஒன்றும் செய்யமுடியாது.

நான் இப்படி எழுதுவது ஒன்றும் புரியவில்லையா உனக்கு? இல்லையில்லை- புரிந்திருக்கும் - நன்றாகப் புரிந்திருக்கும். நீ ஆடிய நாடகம் இந்நேரம் உன் நினைவுக்கு வந்துவிட்டிருக்கும். அதுதான் - மகாபலி புரத்தில் மாற்றான் ஒருவனோடு நீ நடத்திய சினிமாக் காட்சியை-காதல் களியாட்டக் காட்சியைக் கண்டு களித் தவர்கள் பலர். அவர்களுள் ஒருவர் நம்மவர் - நமக்கு வேண்டியவர். அவரை உனக்குத் தெரியாது; ஆனால் அவருக்கு உன்னைத் தெரியும். நீ மாமல்லபுரத்தில் உன் ஆசை நாயகனுடன் கூத்தடித்த அன்றைக்கு அவரும் அவ்வூருக்கு வந்திருக்கிறார். நீ நுகர்ந்த 'சிருங்கார ரசம்' அவர் கண்ணுக்குத் தெரிந்திருக்கிறது. அவர் மகாபுலி புரத்திலிருந்து சென்னை சென்று சில வேலைகளை முடித் துக்கொண்டு மூன்று நாளுக்கு முன் நம்மூருக்கு வந்தார். கடைத்தெருவில் என்னைத் தற்செயலாகக் கண்ட அவர் வாயிலாக உன் திருவிளையாடல்களை நான் தெரிந்து கொண்டேன்.

நான் அருமை பெருமையுடன் வளர்த்த அன்றிலே! என் கண்மணியினும் பெரிதாய்ப் போற்றி வளர்த்த பெண் மணி அன்றிலே! நான் ஆசையுடன் சூட்டி அழைத்து வரும் அழகு பெயரைக் கொண்ட அன்றிலே! இன்னொன் றையும் தெரிவித்து விடுகிறேன். உன்னை மகாபலிபுரத்தில்

கண்ட அப்பெரியவர் உன்னைப் பற்றித் தவறாக ஒன்றும் சொல்லவில்லை. உனக்குத் திருமணம் ஆகிவிட்டதாக அவர் எண்ணிக்கொண்டிருக்கிறார். கட்டிக் கொடுத்த கணவனுடன் நீ மகாபலிபுரத்தில் கலந்து பழகியதாகவே அவர் கருதிக்கொண்டிருக்கிறார்.' அவர் கடைத்தெருவில் என்னைக் கண்டவுடன். 'உங்கள் மகளுக்கு எப்போது திருமணம் நடந்தது? எனக்குத் தெரிவிக்கவே இல்லையே! உங்கள் மகளையும் மருமகனையும் சென்ற வாரம் மகாபலி புரத்தில் கண்டேன். ஆனால் அவர்களுக்கு என்னைத் தெரியாது. தகாதது இல்லை; பொருத்தமான இணைதான்! இருவரும்அன்புடனும் இன்புடனும் அங்கும் இங்கும் சுற்றிப் பல காட்சிகளையும் கண்டு களித்தனர். இவர்களை நான் திருக்கழுக்குன்றம் மலையிலும் பார்த்தேன். இருவரிடையே யும் நல்ல ஒற்றுமை உணர்வும் உண்மையான உள்ளன்பும் இருப்பது கண்டு நானும் மகிழ்ச்சியடைந்தேன், போகட்டும்! புதுமணமக்கள் அல்லவா? இப்படித்தான் இருக்கவேண்டும்'- என்று சொல்லிக்கொண்டு போனார்.

அவர் சொன்னதிலிருந்து, என்ன நடந்திருக்கும் என நான் உய்த்துணர்ந்து கொண்டேன், அதாவது, நீ அயலான் ஒருவனுடன் கள்ளக் காதல் கொண்டு ஊர் சுற்றியிருக் கிறாய் என்பதை நான் புரிந்து கொண்டேன். ஆனால் அவரிடம் நான் ஒன்றும் சொல்லவில்லை. அவர் சொன்னதை ஒத்துக் கொண்டவன்போல, அதாவது, உனக்குத் திருமணம் நடந்துவிட்டது உண்மைதான் என்பதுபோல அவரிடம் நடித்து நான் மெல்ல நழுவிவிட்டேன்.

இந்தச் செய்தி இன்னும் உன் அம்மாவுக்கும் அண்ண னுக்கும் தெரியாது. தெரிந்தால் உன் அண்ணன் உன்னை என்ன செய்வானோ? உன் கள்ளக் காதலனை என்ன செய்வானோ? அல்லது தன்னைத் தான் என்ன செய்து கொள்வானோ? யார் அறிவார்? கடவுளுக்குத்தான் தெரியும்!

வெளியில் நடமாடவே எனக்கு நாணமாயிருக்கிறது. ஒன்றுமட்டும் உனக்கு உறுதியாகச் சொல்லிவிடுகிறேன். இனி நீ உன் கள்ளக் காதலனை அறவே மறந்துவிட வேண்டியதுதான். எந்த வழியிலும் அவனை நீ பெற முடியவே முடியாது. அதற்கு நான் ஒத்துக் கொள்ளவே மாட்டேன். இந்தப் பாதை எனக்கு அறவே பிடிக்காது. எனவே, உனக்கு வேறு மாப்பிள்ளை முடிவு செய்து விட்டேன். நீ மறுக்காமல் ஏற்றுக்கொள்ள வேண்டியது தான். வேறு வழியே இல்லை.

இன்னொரு செய்தியையும் நான் எண்ணிப் பார்க்காமல் இல்லை. அதாவது, நீ உன் கள்ளக் காதலனுடன் 'உடல் உறவு' கொண்டுவிட்டிருந்தால், அவனை விட்டு வேறொரு வனை மணந்துகொள்ளின், அது கற்பு கெட்ட வேசியரின் செயல் ஆகாதா? முதலில் ஒருவனோடு கள்ளத்தனமாக உடல் உறவு கொண்டுவிட்டால் பிறகு அவனையே மணந்து கொண்டு இறுதிவரையும் அவனுடன் இல்லறம் நடத்துவதே ஓரளவாயினும் கற்புடைய செயலாகும் - என்றெல்லாம் நான் கருதிப் பார்க்காமல் இல்லை. இந்த நிலையில், கள்ளக் காதலன் ஒருவனோடு கலந்து பழகியுள்ள உன்னை வேறொருவனுக்கு மணம் செய்து வைப்பது எவ்வாறு பொருந்தும்? இதற்கு என் மனம் எப்படி உடன்பட்டது?

என் அன்பிற்கு உரிய அன்றிலே! உன்மேல் நான் கொண்டுள்ள நம்பிக்கையை இங்கே சொல்லிவிடுகிறேன். என் மகள் ஒருவனிடம் காதல் கொண்டிருப்பினும், திருமணம் ஆவதற்கு முன்பு, ஒருபோதும் அவனுடன் 'உடல் உறவு' கொள்ளவேமாட்டாள் என்பது என் அசைக்க முடியாத நம்பிக்கை. இந்த நம்பிக்கை பொய்த் திருக்காது என்றே எண்ணுகிறேன். நீ அவனுடன் உள்ளத்தால் உறவு கொண்டிருந்தாலும், 'உடல் உறவு' மட்டும் கொண்டிருக்க மாட்டாய் என்றே கருதுகிறேன். நீ

படித்த பெண்-அறிவுள்ள பெண்-அதனால், அவனிடம் ஏமாந்து போயிருக்கமாட்டாய் என்றே எண்ணுகிறேன். அதனால்தான், தவறான பாதையை நோக்கிப் பயணம் செய்து கொண்டிருக்கும் உன்னைக் காலத்தோடு திசை திருப்பி வேறொரு நல்ல மாப்பிள்ளைக்கு மணம் முடித்து வைக்கத் தீர்மானித்து விட்டேன்.

என் அன்பு மகள் அன்றிலே! உன்மேல் எனக்கு உள்ள இன்னொரு நல்லெண்ணத்தையும் இங்கே எடுத்துக் கூற விரும்புகிறேன். அதாவது, மரபு வழி மரபுவழியாக மாண்பு மிக்க குடும்பத்தில் எனக்கு மகளாகப் பிறந்த நீ, மாற்றான் ஒருவனுடன் காதல் கொண்டு பழகியிருக்கமாட்டாய் என்றும் கருதுகிறேன். இளமையிலிருந்தே நீ எவருடனும் கண்டிப்பாய் நடந்து கொள்பவள் என்பது நான் அறியாதது அல்லவே! கெட்ட எண்ணம் உடையோரைச் சுடும் நெருப்பு நீ என்பதும் எனக்குத் தெரியும். எனவே, நீ அந்த அயலானுடன் 'நட்பு' முறையில் பழகியிருப்பாயே தவிர, 'காதல்' முறையில் பழகியிருக்கமாட்டாய் என்றே கருது கிறேன். ஆனால், ஓர் ஆணும் ஒரு பெண்ணும் இணைந்து பழகினால், அவர்களைக் காணும் இவ்வுலகம், கணவன்-மனைவியர் என்று கருதும்-அல்லது-காதலர் என்று கருதும். உலக இயற்கை இது! எனவேதான், ஒரு பெண் திருமணம் ஆவதற்கு முன் ஓர் ஆணுடன் பலர் அறியப் பழகக் கூடாது என்பதை அறிந்துகொள்ளவேண்டும். அவ்வாறு பழகினால் எந்தப் பெயரையும் ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்க வேண்டும்.

எது எப்படியிருந்தபோதிலும், நீ அயலான் ஒருவனுடன் தனியே பழகியிருக்கிறாய் என்பது மறுக்கமுடியாத உண்மை. இந்தக் காலத்தில் எதை நம்ப முடிகிறது-யாரை நம்ப முடிகிறது. நீ தவறாய் நடந்து கொண்டிருக்கமாட்டாய் என்றுதான் கருதுகிறேன். உண்மை உனக்குத்தானே

தெரியும்? ஒரு பெண் ஓர் ஆணுடன் நட்பு முறையில் பழகினாலும், பின்னர் அது காதலாக மாறக்கூடும்; காதல் கள்ளக் காதலாகி உடல் உறவு கொள்ளச் செய்யும்; பிறகு ஊர் சிரித்துப் போகும். எனவே தான், இப்போதே உன்னைத் திசை திருப்பி வேறொருவனுக்கு மணம் செய்து கொடுக்கத் தீர்மானித்துவிட்டேன். எனவே, இந்தக் கடிதம் கண்டதும் விடுமுறை எடுத்துக் கொண்டு உடனே புறப்பட்டு ஊர் வந்து சேர்வாயாக.

இனி நீ எதற்கும் வருந்த வேண்டாம் - கவலைப்படவும் வேண்டாம். எல்லாம் நல்ல விதமாகவே முடியும். நீ மனத்தை மாற்றிக்கொண்டு தவறாமல் வருக! அஞ்சாமல் வருக! நான் உன்னை மகிழ்ச்சியோடு வரவேற்கக் காத்திருக் கிறேன். வருக! வாழ்க!

இன்னணம்,
உன் அன்புள்ள தந்தை,
மாசிலாமணி.

கடிதத்தைப் படித்து முடித்த அறவணன் பெரு மூச்செறிந்து கலங்கிய உள்ளத்துடன் - கவலை தோய்ந்த முகத்துடன் அன்றிலை ஏறிட்டுப் பார்த்தார். அப்போது அன்றில் தன் கண்களில் ததும்பும் நீர்த்துளிகளைத் துடைத்துப் பிறர் அறியாமல் மறைக்க முயன்று கொண் டிருந்ததை அறவணன் அறிந்து வருத்தப்பட்டார். ''மகா பலிபுரத்தில் எதிர்பாராமல் என்னோடு பழக நேர்ந்ததனால் தான் உங்களுக்கு இவ்வளவு தொல்லை ஏற்பட்டுள்ளது. அதற்காக நான் மிகவும் வருந்துகிறேன். தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள்! இனிநான் உங்களுடன் எந்தக் காரணத்தை முன்னிட்டும் எங்கும் என்றும் எந்தத் தொடர்பும் கொள்ளவே மாட்டேன். இதுமட்டும் அல்ல. இனி, திருமணம் ஆகாத எந்தப் பெண்ணுடனும் பழகப்

போவதும் இல்லை. எனக்குத் திருமணம் ஆனபின் என் மனைவியுடன் மட்டுமே பழகுவேன். இது உறுதி!'' என்று கூறிக் கடிதத்தை அன்றிலிடம் தந்துவிட்டு அறவணன் அங்கிருந்து நடையைக் கட்டினார்.

இருவருள் ஒருவரும் - சிற்றுண்டி கிடக்கட்டும் - வெறுந் தண்ணீர்கூட அருந்தவில்லை. இவர்களுக்காகப் புகைவண்டி புறப்படாமல் காத்துக்கொண்டிருக்குமா என்ன? அன்றிலும் அறவணனும் தனித்தனியே வண்டியில் அவரவர் இடத்தில் சென்று அமர்வதற்கும் வண்டி நகர்வதற்கும் நேரம் சரியாயிருந்தது. இருவரும் உரிய நேரத்தில் அவரவர் ஊர் போய்ச் சேர்ந்தனர்.

# 12

அன்றில் பெற்றோரால் வீட்டில் அன்போடு வரவேற்கப் பட்டாள். அவள் அயலான் ஒருவனோடு பழகியது அவள் தந்தை மாசிலாமணிக்குத் தவிர வேறு ஒருவருக்கும் தெரியாது. மனைவிக்கும் தெரிவிக்காமல் அவ்வளவு மறைபொருளாக அந்தச் செய்தியை அவர் வைத்துக் கொண்டிருந்தார். அதனால், வழக்கம்போல் அன்றிலை அன்புடனும் குளிர்ச்சி யுடனும் நடத்தினார். அன்றிலும் ஒன்றும் அறியாதவள் போல் இயற்கையாக நடந்துகொண்டாள்.

அன்றிலின் திருமண ஏற்பாடு ஆர்வமுடன் செய்யப் பட்டுக்கொண்டிருந்தது. முன்பு ஒரு முறை பெண் பார்க்க வந்து, அன்றிலின் அண்ணன் இளந்திரையனால் தாக்கப் பட்டு அடிவாங்கிக் கொண்டு போன மாப்பிள்ளை வீட்டார் அந்தப் பகைக்குப் பழி தீர்த்துக் கொள்வதற்காக, நாடகங் களில் வரும் 'வில்லன்' போல் செயல்பட்டு, அனறிலின் திருமண ஏற்பாட்டைக் கெடுக்க எவ்வளவோ தீய முயற்சிகள் செய்து பார்த்தார்கள். அவற்றையெல்லாம் மாசிலாமணி முறியடித்துப் புறங்கண்டு வென்று ஏற்கனவே தாம் முடிவு செய்த மாப்பிள்ளை வீட்டாருடன் அடிக்கடி தொடர்பு கொண்டு ஆவன செய்தார். திருமணத்திற்கு முன் வழக்கமாக நடைபெறும் 'கைத்தாம்பூலம்', 'பரியம்' முதலிய முன்னுறுதிச் சடங்குகள் எல்லாம் முறையே முடிவு பெற்றன. திருமணத்திற்கு நாள் குறிக்கப்பட்டது. திருமண அழைப்பிதழும் அச்சடிக்கக் கொடுக்கப் பெற்றுவிட்டது.

ஆம்! 'திருமணம் தெய்வ உலகிலேயே முடிவு செய்யப் பட்டுவிடுகிறது' - என்பதாக ஒரு கருத்து பலராலும் சொல்லப்படுவது வழக்கம். இந்தக் கருத்து சரியா? ஓர் ஆண்மகன் பிறக்கும்போதே அவனுக்குக் குறிப்பிட்ட மனைவியும், ஒரு பெண்மகள் பிறக்கும் போதே அவளுக்குக்

குறிப்பிட்ட கணவனும் முன்கூட்டித் தெய்வத்தாலேயே முடிவு செய்யப்பெற்று விடுகிறார்கள்-என்னும் இந்தக் கருத்து ஏற்றுக் கொள்ளக் கூடியதுதானா? அங்ஙனம் எனில், எத்தனையோ பேர்கள் மண விலக்குச் செய்து கொள் கின்றார்களே-மறுமணம் புரிந்து கொள்கின்றார்களே! இதையும் தெய்வம் முதலிலேயே முடிவு கட்டி அனுப்பு கிறதா என்ன? இதற்குத் தீர்வு காண வேண்டாவா?

'திருமணத்தைத் தெய்வம் தீர்மானிக்கிறது' என்று கூறுவதில் உள்ள உட்-பொருள் யாது? சில சமயங்களில் திருமணம் சார்பாக நாம் என்னென்னவோ திட்ட மிடுகிறோம். இந்தப் பெண்ணுக்கு இந்த மாப்பிள்ளை-இந்த மாப்பிள்ளைக்கு இந்தப் பெண்-என்றெல்லாம் இளமை யிலேயே சிலர் திட்ட மிடுவதும் உண்டு. ஆனால் உரிய காலத்தில் அது நிறைவேறாமற் போவதும் உண்டு. வயது வந்த பின்னர்த் திட்டமிடப்பட்ட சில திருமணங்களும் தடைப்பட்டுப் போவதுண்டு. சிலருக்குத் தாம் விரும்பும் மாப்பிள்ளை கிடைப்பதில்லை; சிலருக்குத் தாம் விரும்பும் பெண் கிடைப்பதில்லை. சிலர் மட்டில், பெண்ணும் பிள்ளையும் ஒத்துக்கொண்டாலும், பெற்றோர்களுள் ஒரு தரப்பினரோ அல்லது இரு தரப்பினருமோ உடன் படுவதில்லை. சிலர்மட்டில், பெற்றோர்கள் உடன்படினும், பெண்ணோ அல்லது பிள்ளையோ உடன்படுவதில்லை. இவ்விரு சாராரும் ஒத்துக்கொளினும் உற்றார் உறவினரால் தடைப்பட்டுப் போவதும் உண்டு. காதல் திருமணங்களை, சாதி- சமயம் - இனம் - மொழி - நிறம் - பொருளாதாரம் முதலியவை தடுத்து நிறுத்திவிடுவதும் உண்டு. அதனால் தான், 'திருமணங்களைத் தெய்வம் தீர்மானிக்கிறது' என்னும் கருத்து சொல்லப்படுகிறது.

மொத்தத்தில் பார்க்குமிடத்து, பெரும்பாலும் நினைத்த படி திருமணங்கள் நிறைவேறுவதில்லை. ஒரு பெண்ணுக்கு

எத்தனையோ இடங்களில் மாப்பிள்ளை பார்த்துக் களைத்துப் போவதுண்டு, ஒரு பிள்ளைக்கு எத்தனையோ இடங்களில் பெண் பார்த்துச் சளைத்துப் போவதுண்டு. இந்த நிலைமை ஆண்டுக் கணக்கில் நீடிப்பதும் உண்டு. இதற்கெல்லாம் காரணம், சமுதாயத்தில் திட்ட வட்டமான 'திருமணக் கொள்கைகள்' இல்லாமையே! என்று திருந்துமோ இந்தச் சமுதாயம்?

காதல் திருமணங்களைப் பொறுத்த வரையில், நிறை வேறாமல் நின்றுபோனவையே மிகுதி. காதலில் தோல்வி கண்டவர்களே மிகப்பலர்; வெற்றி கண்டவர்கள் ஒரு சிலரே! பொருத்தமான காதலாயிருந்து, அதுவும் நிறை வேறி, பிறகு என்றும் பிரிவினை ஏற்படாமல் அன்புடனும் இன்புடனும் நின்று நிலைத்து நீடித்திருக்குமாயின் அதனைத் 'தெய்வக் காதல்' எனலாம். அத்தகைய காதலர்கள், மற்றவர்கள் பொறாமைப்படும் அளவுக்குக் கொடுத்து வைத்தவர்களே.

இத்தகைய உலகச் சூழலில் அன்றிலின் நிலை எத்தகையதோ? அவள் கொடுத்து வைத்தது எவ்வளவோ? அவளுடைய தந்தையாரால் தேர்ந்தெடுக்கப் பெற்ற மாப்பிள்ளை யாரோ? அன்றிலின் படிப்புக்கு ஏற்ற அறிஞனாய் இருக்கவேண்டுமே! அன்றில் பார்க்கும் அலு வலுக்கு ஏற்ற அலுவல் பார்க்கும் ஆடவனாய் இருக்க வேண்டும்.

ஒன்றிய உள்ளத்திற்குப் பெயர் போனவை அன்றில் பறவைகள். அந்த இனத்தின் பெயரைச் சூட்டிக் கொண் டுள்ள மணமகள் அன்றிலுக்கு, அவளோடு ஒன்றிய உள்ளம் கொண்டு ஒப்பற்ற ஆண்மகனாய்த் திகழக்கூடிய ஒருவன் மணமகனாய் வாய்க்கவேண்டுமே! இப்போது வாய்த்திருப் பவன் எவனோ?

அந்தோ, அன்றில் இரங்கத்தக்கவள்! ஒருவேளை தன் உள் மனத்தில் அறவணனைப் பதித்து வைத்திருப்பாளோ என்னவோ! உள்மனத்தில் என்ன – வெளிப்படையாகவே நூற்றுக்கு நூறு அறவணனையே விரும்பியிருப்பாளோ என்னவோ! அதேபோல, அறவணனும் அன்றிலை விரும்பிக் கொண்டிருப்பாரோ என்னவோ! யார் அறிவார்? ஆனால் இருவரும் வெளிப்படையாக ஒன்றும் காதல் உரை நிகழ்த்தியதே கிடையாது. இருவரும் பெருந்தன்மையோடு நடந்து கொண்டனர்.

அன்றில் அறவணனை முன்பு விரும்பியிருப்பாளே யானால், அந்தோ அன்றில், இப்போது ஏமாந்து போகிறாள்! என்ன செய்வது! இயற்கையை வெல்ல யாரால் முடியும்? ஆனால் அவள் தன் தந்தை குறிப்பிட்ட மாப்பிள்ளையையே மறுக்காமல் மணக்க ஒத்துக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அவன் யாரோ?

அவன் யார் என்ற ஐயப்பாடு இனி எழவேண்டிய தில்லை. இதோ திருமண அழைப்பிதழ் வந்துவிட்டது. அதைப் படித்துப் பார்த்தால், அன்றிலின் தலையெழுத்து எப்படி இருக்கிறதென்று புரிந்துவிட்டுப் போகிறது! சரி படிக்கலாம்.

## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர், வணக்கம்.

நிகழும் பிலவங்க ஆண்டு, ஆவணித்திங்கள் 29ஆம் நாள் (14—9—1967) வியாழக்கிழமை காலை 7-30 மணிக்கு மேல் 9 மணிக்குள்ளாக,

என் மகள் திருவளர்செல்வி

**அன்றில்**, எம். ஏ.

(பேராசிரியை, அரசினர் மகளிர் கலைக் கல்லூரி, சென்னை)

காரைக்குடி உயர்திரு பொன். முருகப்பன் அவர்களின்
திருமகன் திருவளர்செல்வன்
**அறவணன்**, எம். ஏ.
(பேராசிரியர், அரசினர் ஆடவர் கலைக்கல்லூரி), சென்னை)

ஆகியோர்க்கு ஆன்றோர்கள் உறுதி செய்தவண்ணம் திருச்சி தேவர் அரங்கில் நடைபெறும் திருமணத்திற்குத் தாங்கள் சுற்றம் சூழ வருகைதந்து திருமணமக்களை வாழ்த்தியருள வேண்டுகிறேன்.


யானும் அவ்வண்ணமே
வேண்டுகிறேன்
பொன். முருகப்பன்
காரைக்குடி.

தங்கள் அன்புள்ள
கா. மாசிலாமணி
திருச்சி.

வரவேற்பாளர்கள்:- காதலில் பெருந்தன்மையை விரும்பு பவர்கள்.

தற்செயலாய் - தெய்வச்செயலாய் நிகழ்ந்த தெய்விகத் திருமணமாயிற்றே இது. மணமக்களுக்கு வாழ்த்து மலர்கள் வந்து குன்றுபோல் குவிந்தன.

திருமணமக்கள் வாழ்க.



## சுந்தர சண்முகனாரின் உழைப்புகளுள் சில :

| | | ரூ.கா. |
|---|---|---|
| தமிழ் அகராதிக்கலை | — | 40-00 |
| தமிழ் இலக்கிய பாலம் | — | 30-00 |
| கெடிலக்கரை நாகரிகம் | — | 50-00 |
| அம்பிகாபதி காதல் காப்பியம் | — | 20-00 |
| கௌதமப் புத்தர் காப்பியம் | — | 30-00 |
| மர இனப் பெயர்த் தொகுதி-1 | — | 140-00 |
| மர இனப் பெயர்த் தொகுதி-2 | — | 200-00 |
| உலகு உய்ய! | — | 30-00 |
| பாரதி தாசரொடு பல ஆண்டுகள் | — | 12-00 |
| கருத்துக் கண் காட்சி | — | 20-00 |
| தமிழ்க் காவிரி | — | 12-00 |
| கடவுள் வழிபாட்டு வரலாறு | — | 15-00 |
| தொல் திராவிட மொழி கண்டு பிடிப்பு | — | 20-00 |
| மக்கள் குழு ஒப்பந்தம் | — | 15-00 |
| மருந்தாகித் தப்பா மர இனப் பெயர்கள் | — | 20-00 |
| சுந்தர காண்டச் சுரங்கம் | — | 18-00 |
| அயோத்தியா காண்ட ஆழ்கடல் | — | 20-00 |
| தமிழ் நூல் தொகுப்புக் கலைக் களஞ்சியம் | ... | 100-00 |
| மர இனப் பெயர் வைப்புக் கலை | ... | 18-00 |
| உலகமும் உயிர்களும் உண்டான வரலாறு | ... | 15-00 |